**இந்திய அரசு**

**சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்**

# மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016

**(எண் 49/2016)**

**(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)**

# The Rights of Persons with Disabilities Act, 2016

**(No. 49 of 2016)**

**(As on 31st October, 2023)**


தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016

(எண் 49/2016)

# The Rights of Persons with Disabilities Act, 2016

**(No. 49 of 2016)**

# PREFACE

This edition of The Rights of Persons with Disabilities Act, 2016 (No. 49 of 2016) as on 31st October 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 17th July, 2023 on Pages from 4 to 130.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi, *(Signed)……*
17th July, 2023. *Secretary to Government of India.*

# முன்னுரை

2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016 (எண் 49/2019) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2023, ஜூலை 17 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 4 முதல் 130 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புது தில்லி, (ஒப்பம்)……
17, ஜூலை 2023. இந்திய அரசு செயலாளர்.

# The Rights of Persons with Disabilities Act, 2016

## (No. 49 of 2019)

## CONTENTS

**Sections** **Pages**

### CHAPTER I

### PRELIMINARY


1. Short title and commencement. 2

2. Definitions. 2


### CHAPTER II

### RIGHTS AND ENTITLEMENTS


3. Equality and non-discrimination. 9

4. Women and children with disabilities. 9

5. Community life. 10

6. Protection from cruelty and inhuman treatment. 10

7. Protection from abuse, violence and exploitation. 11

8. Protection and safety. 13

9. Home and family. 14

10. Reproductive rights. 14

11. Accessibility in voting. 14

12. Access to justice. 15

13. Legal capacity. 16

14. Provision for guardianship. 17

# மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016

## (எண் 49/2019)

### பொருளடக்கம்


| பிரிவுகள் | | பக்கங்கள் |
|---|---|---|
| | **அத்தியாயம் I** | |
| | **முன்னுரை** | |
| 1. | குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம். | 2 |
| 2. | பொருள் வரையறைகள். | 2 |
| | **அத்தியாயம் II** | |
| | **உரிமைகளும் உரிமையுடைமைகளும்** | |
| 3. | சமன்மையும் வேற்றுமை காட்டாமையும். | 9 |
| 4. | மாற்றுத்திறனுடைய பெண்களும் சிறார்களும். | 9 |
| 5. | கூட்டுக்குழு வாழ்க்கை. | 10 |
| 6. | கொடுமைப்படுத்துதல், மனிதத் தன்மையற்று நடத்துதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாத்தல். | 10 |
| 7. | தவறாள்கை, வன்முறை, சுரண்டல் ஆகியவற்றில் இருந்து பாதுகாப்பு. | 11 |
| 8. | பாதுகாப்பும் இடர்காப்பும். | 13 |
| 9. | காப்பகமும் குடும்பமும். | 14 |
| 10. | மக்கட்பேற்றிற்கான உரிமை. | 14 |
| 11. | வாக்களிப்பதில் அணுகத்தக்க தன்மை. | 14 |
| 12. | நீதி பெறும் வாய்ப்பு. | 15 |
| 13. | சட்டமுறைத்தகுநிலை. | 16 |
| 14. | காப்பாண்மைக்கான வகையம். | 17 |

15. Designation of authorities to support. 18

## CHAPTER III

## EDUCATION

16. Duty of educational institutions. 18

17. Specific measures to promote and facilitate inclusive education. 20

18. Adult education. 21

## CHAPTER IV

## SKILL DEVELOPMENT AND EMPLOYMENT

19. Vocational training and self-employment. 22

20. Non-discrimination in employment. 23

21. Equal opportunity policy. 24

22. Maintenance of records. 24

23. Appointment of Grievance Redressal Officer. 24

## CHAPTER V

## SOCIAL SECURITY, HEALTH, REHABILITATION AND RECREATION

24. Social security. 25

25. Healthcare. 27

26. Insurance schemes. 28

27. Rehabilitation. 29

28. Research and development. 29

29. Culture and recreation. 29

30. Sporting activities. 30

15. ஆதரவளிப்பதற்கான அதிகாரஅமைப்புகளைப் பெயர்குறித்தமர்த்துதல். 18

## அத்தியாயம் III

## கல்வி

16. கல்வி நிறுவனங்களின் கடமை. 18

17. உள்ளடக்கிய கல்வியை மேம்படுத்துவதற்கும் முன்னேற உதவுவதற்கும் குறிப்பிட்ட நடவடிக்கைகள். 20

18. வயதுவந்தோர் கல்வி. 21

## அத்தியாயம் IV

## திறன் மேம்பாடும் வேலைவாய்ப்பும்

19. உறுதொழில் பயிற்சியும் சுயவேலைவாய்ப்பும். 22

20. வேலைவாய்ப்பில் வேற்றுமை காட்டாமை. 23

21. சம வாய்ப்புக் கொள்கை. 24

22. பதிவணங்களைப் பேணிவருதல். 24

23. குறை தீர்க்கும் அலுவலரை அமர்த்துதல். 24

## அத்தியாயம் V

## சமூகப் பாதுகாப்பு, நல்வாழ்வு, மறுவாழ்வளிப்பு மற்றும் இன்பப்பொழுதுபோக்கு

24. சமூகப் பாதுகாப்பு. 25

25. உடல்நலக்காப்பு. 27

26. காப்பீட்டுத் திட்டங்கள். 28

27. மறு வாழ்வளிப்பு. 29

28. ஆராய்ச்சியும் மேம்பாடும். 29

29. பண்பாடும் இன்பப் பொழுதுபோக்கும். 29

30. விளையாட்டுச் செயல்பாடுகள். 30

## CHAPTER VI

## SPECIAL PROVISIONS FOR PERSONS WITH BENCHMARK DISABILITIES


31. Free education for children with benchmark disabilities. 32

32. Reservation in higher educational institutions. 33

33. Identification of posts for reservation. 33

34. Reservation. 33

35. Incentives to employers in private sector. 35

36. Special employment exchange. 35

37. Special schemes and development programmes. 35


## CHAPTER VII

## SPECIAL PROVISIONS FOR PERSONS WITH DISABILITIES WITH HIGH SUPPORT NEEDS


38. Special provisions for persons with disabilities with high support. 36


## CHAPTER VIII

## DUTIES AND RESPONSIBILITIES OF APPROPRIATE GOVERNMENTS


39. Awareness campaigns. 37

40. Accessibility. 38

41. Access to transport. 38

42. Access to information and communication technology. 39

43. Consumer goods. 39

44. Mandatory observance of accessibility norms. 39

45. Time limit for making existing infrastructure and premises accessible and action for that purpose. 40

**அத்தியாயம் VI**

**குறியீட்டளவு மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வகையங்கள்.**


31. குறியீட்டளவு மாற்றுத்திறனுடைய சிறார்களுக்கு இலவசக் கல்வி. 32

32. உயர்கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு. 33

33. இட ஒதுக்கீட்டிற்கானப் பதவியிடங்களைக் கண்டறிதல். 33

34. இட ஒதுக்கீடு. 33

35. தனியார் துறையிலுள்ள வேலை தருநர்களுக்கு ஊக்கத்தொகை. 35

36. சிறப்பு வேலை வாய்ப்பகம். 35

37. சிறப்புத்திட்டங்களும் வளர்ச்சிச் செயல் திட்டங்களும். 35


**அத்தியாயம் VII**

**உயர் ஆதரவுத் தேவைகளுடைய மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வகையங்கள்**


38. உயர் ஆதரவுத் தேவைகளுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வகையங்கள். 36


**அத்தியாயம் VIII**

**உரிய அரசுகளின் கடமைகளும் பொறுப்புகளும்**


39. விழிப்புணர்வு பரப்புரைகள். 37

40. அணுகத்தக்க தன்மை. 38

41. போக்குவரத்திற்கான அணுக்கம். 38

42. தகவல் மற்றும் செய்தித்தொழில் நுட்பத்திற்கு அணுக்கம். 39

43. நுகர்வோர் சரக்குகள். 39

44. அணுகும் வாய்ப்பு விதிகளைக் கட்டாயமாகக் கடைபிடித்தல். 39

45. நிலவுறும் உள்கட்டமைப்புகளையும் வளாகங்களையும் அணுகத்தக்கனவாக்குவதற்கான காலவரம்பும் அந்த நோக்கத்திற்கான நடவடிக்கையும். 40

46. Time limit for accessibility by service providers. 40

47. Human resource development. 41

48. Social audit. 42

**CHAPTER IX**

**REGISTRATION OF INSTITUTIONS FOR PERSONS WITH DISABILITIES AND GRANTS TO SUCH INSTITUTIONS**

49. Competent authority. 42

50. Registration. 42

51. Application and grant of certificate of registration. 43

52. Revocation of registration. 44

53. Appeal. 46

54. Act not to apply to institutions established or maintained by Central or State Government. 46

55. Assistance to registered institutions. 46

**CHAPTER X**

**CERTIFICATION OF SPECIFIED DISABILITIES**

56. Guidelines for assessment of specified disabilities. 47

57. Designation of certifying authorities. 47

58. Procedure for certification. 47

59. Appeal against a decision of certifying authority. 48

**CHAPTER XI**

**CENTRAL AND STATE ADVISORY BOARDS ON DISABILITY AND DISTRICT LEVEL COMMITTEE**

60. Constitution of Central Advisory Board on Disability. 48

46. சேவை வழங்குநர்கள் அணுகத்தக்கதன்மையை வழங்குவதற்கான காலவரம்பு. 40

47. மனிதவள மேம்பாடு. 41

48. சமுதாயத் தணிக்கை. 42

## அத்தியாயம் IX

## மாற்றுத்திறனாளிகளுக்கான அமைவனங்களைப் பதிவுசெய்தல் மற்றும் அத்தகைய அமைவனங்களுக்கான மானியங்கள்

49. தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு. 42

50. பதிவு செய்தல். 42

51. பதிவு உறுதிச் சான்றுக்கான விண்ணப்பமும் அது வழங்கப்படுதலும். 43

52. பதிவை முறித்தறவு செய்தல் 44

53. மேல்முறையீடு. 46

54. மைய அல்லது மாநில அரசால் நிறுவப்பட்ட அல்லது நடத்திவரப்படும் அமைவனங்களுக்குச் சட்டம் பொருந்துவதில்லை. 46

55. பதிவு செய்யப்பட்ட அமைவனங்களுக்கு உதவி. 46

## அத்தியாயம் X

## குறித்துரைக்கப்பட்ட மாற்றுத்திறன்களுக்கு உறுதிச் சான்றளித்தல்

56. குறித்துரைக்கப்பட்ட மாற்றுத்திறன்களை மதிப்பிடுவதற்கான வழிகாட்டு நெறிகள். 47

57. உறுதிச்சான்றளிக்கும் அதிகாரஅமைப்புகளை பெயர்குறித்தமர்த்துதல். 47

58. உறுதிச் சான்றளிப்பதற்கான நெறிமுறை. 47

59. உறுதிச் சான்றளிக்கும் அதிகாரஅமைப்பின் முடிபு ஒன்றுக்கு எதிராக மேல்முறையீடு. 48

## அத்தியாயம் XI

## மாற்றுத்திறனுக்கான மைய மற்றும் மாநில அறிவுரைக் குழுமங்களும் மாவட்ட அளவிலான குழுவும்

60. மாற்றுத்திறனுக்கான மைய அறிவுரைக் குழுமத்தை அமைத்தல். 48

61. Terms and conditions of service of members. 51

62. Disqualifications. 52

63. Vacation of seats by Members. 53

64. Meetings of the Central Advisory Board on disability. 53

65. Functions of Central Advisory Board on disability. 54

66. State Advisory Board on disability. 55

67. Terms and conditions of service of Members. 57

68. Disqualification. 58

69. Vacation of seats. 59

70. Meetings of State Advisory Board on disability. 59

71. Functions of State Advisory Board on disability. 59

72. District-level Committee on disability. 60

73. Vacancies not to invalidate proceedings. 60 ‘

## CHAPTER XII

## CHIEF COMMISSIONER AND STATE COMMISSIONER FOR PERSONS WITH DISABILITIES

74. Appointment of Chief Commissioner and Commissioners. 61

75. Functions of Chief Commissioner. 62

76. Action of appropriate authorities on recommendation of Chief Commissioner. 63

77. Powers of Chief Commissioner. 64

78. Annual and special reports by Chief Commissioner. 64

61. உறுப்பினர்களுக்கான பணிவரையுரைகளும் பணிவரைக் கட்டுகளும். 51

62. தகுதிக்கேடுகள். 52

63. உறுப்பினர்கள் பதவியிடங்கள் காலியிடமாதல். 53

64. மாற்றுத்திறனுக்கான மைய அறிவுரைக் குழுமத்தின் கூட்டங்கள். 53

65. மாற்றுத்திறனுக்கான மைய அறிவுரைக் குழுமத்தின் செயற்பணிகள். 54

66. மாற்றுத்திறனுக்கான மாநில அறிவுரைக் குழுமம். 55

67. உறுப்பினர்களுக்கான பணிவரையுரைகளும் வரைக்கட்டுகளும். 57

68. தகுதிக்கேடு. 58

69. பதவியிடங்கள் காலியாதல். 59

70. மாற்றுத்திறனுக்கான மாநில அறிவுரைக் குழுமத்தின் கூட்டங்கள். 59

71. மாற்றுத்திறனுக்கான மாநில அறிவுரைக் குழுமத்தின் செயற்பணிகள். 59

72. மாற்றுத்திறனுக்கான மாவட்டநிலைக் குழு. 60

73. காலியிடங்கள் நடவடிக்கைகளைச் செல்லுந்தன்மை–யற்றதாக்காது. 60


## அத்தியாயம் XII

## மாற்றுத்திறனாளிகளுக்கான தலைமை ஆணையர் மற்றும் மாநில ஆணையர்


74. தலைமை ஆணையரையும் ஆணையர்களையும் அமர்த்துதல். 61

75. தலைமை ஆணையரின் செயற்பணிகள். 62

76. தலைமை ஆணையரின் பரிந்துரையின் மீது உரிய அதிகாரஅமைப்புகளின் நடவடிக்கைகள். 63

77. தலைமை ஆணையருக்குள்ள அதிகாரங்கள். 64

78. தலைமை ஆணையரால் அனுப்பப்படும் ஆண்டு மற்றும் தனி அறிக்கைகள். 64

79. Appointment of State Commissioner in States. 65

80. Functions of State Commissioner. 66

81. Action by appropriate authorities on recommendation of State Commissioner. 67

82. Powers of State Commissioner. 67

83. Annual and special reports by State Commissioner. 68


## CHAPTER XIII

## SPECIAL COURT


84. Special Court. 68

85. Special Public Prosecutor. 69


## CHAPTER XIV

## NATIONAL FUND FOR PERSONS WITH DISABILITIES


86. National Fund for persons with disabilities. 69

87. Accounts and audit. 70


## CHAPTER XV

## STATE FUND FOR PERSONS WITH DISABILITIES


88. State Fund for persons with disabilities. 71


## CHAPTER XVI

## OFFENCES AND PENALTIES


89. Punishment for contravention of provisions of Act or rules or regulations made thereunder. 72

90. Offences by companies. 72

91. Punishment for fraudulently availing any benefit meant for persons with benchmark disabilities. 73

92. Punishment for offences of atrocities. 73

93. Punishment for failure to furnish information. 75

79. மாநிலங்களில் மாநில ஆணையரை அமர்த்துதல். 65

80. மாநில ஆணையரின் செயற்பணிகள். 66

81. மாநில ஆணையரின் பரிந்துரையின் மீது உரிய அதிகாரஅமைப்புகளால் எடுக்கப்படும் நடவடிக்கைகள். 67

82. மாநில ஆணையருக்குள்ள அதிகாரங்கள். 67

83. மாநில ஆணையரால் அனுப்பப்படும் ஆண்டு மற்றும் தனி அறிக்கைகள். 68

**அத்தியாயம் XIII**

**தனி நீதிமன்றம்**

84. தனி நீதிமன்றம். 68

85. அரசு குற்றவியல் தனி வழக்குரைஞர். 69

**அத்தியாயம் XIV**

**மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிதியம்**

86. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிதியம். 69

87. கணக்குகளும் தணிக்கைகளும். 70

**அத்தியாயம் XV**

**மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில நிதியம்**

88. மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில நிதியம். 71

**அத்தியாயம் XVI**

**குற்றச்செயல்கள் மற்றும் தண்டங்கள்**

89. இந்தச் சட்டத்தின் வகையங்களையோ அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குறுத்தும் விதிகளையோ மீறியதற்கானத் தண்டனை. 72

90. நிறுமங்களின் குற்றச் செயல்கள். 72

91. குறியீட்டளவு மாற்றுத்திறனுடைய நபர்களுக்கு உரிய நலப்பயன் எதனையும் மோசடியாகப் பயன்படுத்திக் கொள்வதற்கான தண்டனை. 73

92. வன்கொடுமை குற்றச்செயல்களுக்கானத் தண்டனை. 73

93. தகவலை அளிக்கத் தவறுகைக்கான தண்டனை. 75

94. Previous sanction of appropriate Government. 75

95. Alternative punishments. 75

**CHAPTER XVII**

**MISCELLANEOUS**

96. Application of other laws not barred. 76

97. Protection of action taken in good faith. 76

98. Power to remove difficulties. 76

99. Power to amend Schedule. 76

100. Power of Central Government to make rules. 77

101. Power of State Government to make rules. 79

102. Repeal and savings. 81

THE SCHEDULE

94. உரிய அரசின் முன் ஒப்பளிப்பு. 75

95. மாற்றுத் தண்டனைகள். 75

## அத்தியாயம் XVII

## பல்வகை

96. பிற சட்டங்கள் பொருந்துவது தடை செய்யப்படவில்லை. 76

97. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடிவடிக்கைக்குப் பாதுகாப்பு. 76

98. இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம். 76

99. இணைப்புப்பட்டியலைத் திருத்தம் செய்வதற்கான அதிகாரம். 76

100. விதிகள் செய்வதற்கு மைய அரசிற்கான அதிகாரம். 77

101. விதிகளைச் செய்வதற்கு மாநில அரசிற்குள்ள அதிகாரம். 79

102. நீக்கறவும் காப்புரைகளும். 81

இணைப்புப்பட்டியல்

# THE RIGHTS OF PERSONS WITH DISABILITIES ACT, 2016

**No. 49 of 2016**

[27th *December*, 2016]

An Act to give effect to the United Nations Convention on the Rights of Persons with Disabilities and for matters connected there with or incidental thereto.

WHEREAS the United Nations General Assembly adopted its Convention on the Rights of Persons with Disabilities on the 13th day of December, 2006.

AND WHEREAS the aforesaid Convention lays down the following principles for empowerment of persons with disabilities,—

(a) respect for inherent dignity, individual autonomy including the freedom to make one's own choices, and independence of persons;

(b) non-discrimination;

(c) full and effective participation and inclusion in society;

(d) respect for difference and acceptance of persons with disabilities as part of human diversity and humanity;

(e) equality of opportunity;

(f) accessibility;

(g) equality between men and women;

# மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016

## (எண் 49/2016)

[2016, திசம்பர் 27]

மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகளின் இணங்காறைச் செயற்படுத்துவதற்கும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்குமானதொரு சட்டம்.

ஐக்கிய நாடுகள் பொதுப் பேரவை, 2006 ஆம் ஆண்டு திசம்பர் 13 ஆம் நாளன்று மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் மீதான அதன் இணங்காறை ஏற்றுக்கொண்டதாலும்,

மேலும், மேற்சொன்ன இணங்காறானது, மாற்றுத்திறனாளிகளுக்கு உரிமை வழங்குவதற்காக பின்வரும் கோட்பாடுகளை விதிப்பதாலும்,–

(அ) ஒருவர் தமக்குள்ள விருப்பங்களைத் தாமே தெரிந்தெடுத்துக் கொள்வதற்கான சுதந்திரம் உள்ளடங்கலாக, மனிதர்களின் உள்ளார்ந்த மாண்புக்கும், தனிநபர் தன்னுரிமைக்கும் மற்றும் சுதந்திரத்திற்கும் மதிப்பளித்தல்;

(ஆ) வேற்றுமை காட்டாமை;

(இ) சமுதாயத்தில் முழுமையான மற்றும் பயனுறுவகையிலான பங்கேற்பு மற்றும் இணைத்துக் கொள்ளுதல்;

(ஈ) மாற்றுத்திறனாளிகளுக்குள்ள வேறுபாட்டிற்கு மதிப்பளித்து அதனை மனித வேற்றுமையின் மற்றும் மனிதப்பண்பின் பகுதியாக ஏற்றுக்கொள்ளுதல்;

(உ) சமன்மையான வாய்ப்பு நலன்;

(ஊ) அணுகத்தக்க தன்மை;

(எ) ஆண்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் இடையே சமன்மை;

(h) respect for the evolving capacities of children with disabilities and respect for the right of children with disabilities to preserve their identities;

AND WHEREAS India is a signatory to the said Convention;

AND WHEREAS India ratified the said Convention on the 1st day of October, 2007;

AND WHEREAS it is considered necessary to implement the Convention aforesaid.

BE it enacted by Parliament in the Sixty-seventh Year of the Republic of India as follows:—

## CHAPTER I
## PRELIMINARY

Short title and commencement.

1. (1) This Act may be called the Rights of Persons with Disabilities Act, 2016.

(2) It shall come into force on such date[1] as the Central Government may, by notification in the Official Gazette, appoint.

Definitions.

2. In this Act, unless the context otherwise requires,—

(a) "appellate authority" means an authority notified under sub-section (*3*) of section 14 or sub-section (*1*) of section 53 or designated under sub-section (*1*) of section 59, as the case may be;

---

1. 19th April, 2017, vide notification no. S.O. 1215 (E) dated 19th April, 2017, see Gazette of India, Extra ordinary, Part II, Section 3 (ii).

(ஏ) மாற்றுத்திறனாளிச் சிறார்களின் திறமைகளை வெளிப்படுத்துவதை மதித்தல் மற்றும் மாற்றுத்திறனாளிச் சிறார்களுக்குள்ள தனித்துவங்களைப் பேணிக்காப்பதற்கான அவர்களின் உரிமைகளை மதித்தல்;

மேலும், மேற்சொன்ன இணங்காறிற்கு இந்தியா கையொப்பமிட்ட ஒரு தரப்பினராக இருப்பதாலும்;

மேலும், இந்தியா, மேற்சொன்ன இணங்காறை 2007 ஆம் ஆண்டு அக்டோபர் 1 ஆம் நாளன்று ஏற்பிசைவு செய்ததாலும்;

மற்றும், மேற்சொன்ன இணங்காறைச் செயற்படுத்துவது தேவையெனக் கருதப்படுவதாலும்,

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

## அத்தியாயம் I

## முன்னுரை

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016 என்று வழங்கப்பெறும்.

(2) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று[1] செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,–

(அ) "மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பு" என்பது, நேர்வுக்கேற்ப, 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படியோ அல்லது 53 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படியோ அறிவிக்கை செய்யப்பட்ட அல்லது 59 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி பெயர்குறித்தமர்த்தப்பெற்ற ஓர் அதிகாரஅமைப்பு என்று பொருள்படும்;

---

1. 2017, ஏப்ரல் 19, 2017, ஏப்ரல் 19 தேதியிட்ட அறிவிக்கை எண். எஸ். ஓ. 1215 (E) ஐக் காண்க. இந்திய அரசிதழ், சிறப்பிதழ், பகுதி II இன் பிரிவு 3 (ii) ஐப் பார்க்க.

(b) “appropriate Government” means,—

(i) in relation to the Central Government or any establishment wholly or substantially financed by that Government, or a Cantonment Board constituted under the Cantonments Act, 2006, the Central Government; 41/2006.

(ii) in relation to a State Government or any establishment, wholly or substantially financed by that Government, or any local authority, other than a Cantonment Board, the State Government.

(c) “barrier” means any factor including communicational, cultural, economic, environmental, institutional, political, social, attitudinal or structural factors which hampers the full and effective participation of persons with disabilities in society;

(d) “care-giver” means any person including parents and other family Members who with or without payment provides care, support or assistance to a person with disability;

(e) “certifying authority” means an authority designated under sub-section (1) of section 57;

(f) “communication” includes means and formats of communication, languages, display of text, Braille, tactile communication, signs, large print, accessible multimedia, written, audio, video, visual displays, sign language, plain-language, human-reader, augmentative and alternative modes and accessible information and communication technology;

(ஆ) "உரிய அரசு" என்பது,

(i) மைய அரசை அல்லது அந்த அரசால் முழுவதுமாகவோ கணிசமான அளவிலோ நிதியுதவியளிக்கப்படும் நிறுவனம் எதனையும், அல்லது பாளையங்கள் சட்டம், 2006 இன்படி அமைக்கப்பட்ட பாளைய வாரியம் ஒன்றைப் பொறுத்தவரை, மைய அரசு என்றும்;

41/2006.

(ii) ஒரு மாநில அரசை அல்லது அந்த அரசால் முழுவதுமாகவோ கணிசமான அளவிலோ நிதியுதவியளிக்கப்படும் நிறுவனம் எதனையும், அல்லது ஒரு பாளைய வாரியமாக இல்லாத பிற உள்ளாட்சி அதிகாரஅமைப்பு எதனையும் பொறுத்தவரை, மாநில அரசு என்றும்,

பொருள்படும்.

(இ) "தடையூறு" என்பது, மாற்றுத் திறனாளிகளைச் சமுதாயத்தில் முழுமையாகவும் மற்றும் பயனுறுவகையிலும் பங்கேற்பதைத் தடுத்து இடர்விப்பவையான செய்தித்தொடர்பு, பண்பாடு, பொருளியல், சுற்றுச்சூழல், அமைப்புமுறை, அரசியல், சமுதாயம், மனப்பான்மை ஆகியவை சார்ந்த அல்லது கட்டமைப்புச் சார்ந்த காரணிகள் உள்ளடங்கலான காரணி எதுவும் என்று பொருள்படும்;

(ஈ) "காப்பளிப்பவர்" என்பது, பெற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு, ஊதியத்திற்காகவோ அல்லது ஊதியமில்லாமலோ காப்பு, ஆதரவு அல்லது உதவி அளித்துவருகின்ற பிற குடும்ப உறுப்பினர்கள் உள்ளடங்கலான நபர் எவரும் என்று பொருள்படும்;

(உ) "உறுதிச்சான்றளிக்கும் அதிகாரி" என்பது, 57 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி பெயர்குறித்தமர்த்தப்பெற்ற ஓர் அதிகாரி என்று பொருள்படும்;

(ஊ) "செய்தித்தொடர்பு" என்பது, செய்தித்தொடர்பு, மொழிகள், பனுவலைக் காட்சிப்படுத்துதல், பிரெய்லிமுறை, தொட்டுணரும் செய்தித்தொடர்பு, குறியீடுகள், விரிவு அச்சு, அணுகத்தக்க பல்லூடகங்கள், வரிவடிவ, ஒலிவடிவ, ஒளிவடிவ காட்சிகள், சைகை மொழி, எளியமொழி, மனித எழுத்துருப் படிப்பி, பெருகும் மற்றும் மாற்றுமுறைகள் மற்றும் அணுகத்தக்க தகவல் மற்றும் செய்தித்தொடர்பு தொழில் நுட்பம் ஆகியவற்றின் வழிமுறைகளையும் வடிவங்களையும் உள்ளடக்கும்;

(g) “competent authority” means an authority appointed under section 49;

(h) “discrimination” in relation to disability, means any distinction, exclusion, restriction on the basis of disability which is the purpose or effect of impairing or nullifying the recognition, enjoyment or exercise on an equal basis with others of all human rights and fundamental freedoms in the political, economic, social, cultural, civil or any other field and includes all forms of discrimination and denial of reasonable accommodation;

(i) “establishment” includes a Government establishment and private establishment;

(j) “Fund” means the National Fund constituted under section 86;

(k) “Government establishment” means a corporation established by or under a Central Act or State Act or an authority or a body owned or controlled or aided by the Government or a local authority or a Government company as defined in section 2 of the Companies Act, 2013 and includes a Department of the Government; 18/2013.

(l) “high support” means an intensive support, physical, psychological and otherwise, which may be required by a person with benchmark disability for daily activities, to take independent and informed decision to access facilities and participating in all areas of life including education, employment, family and community life and treatment and therapy;

(எ) "தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு" என்பது, 49 ஆம் பிரிவின்படி அமர்த்தப்பெற்ற ஓர் அதிகாரஅமைப்பு என்று பொருள்படும்;

(ஏ) "வேற்றுமை காட்டுதல்" என்பது, மாற்றுத்திறன் பொறுத்து, மனித உரிமைகள் அனைத்தையும் மற்றும் அரசியல், பொருளியல், சமுதாயம், பண்பாடு, குடியியல் அல்லது பிற செயற்களம் எதிலுமுள்ள அடிப்படைச் சுதந்திரங்களையும் மற்றவர்களுக்குச் சமம் என்ற அடிப்படையில் ஏற்பளிப்பதை, துய்ப்பதை அல்லது பயன்படுத்துவதை ஊறுபடுத்துவதை அல்லது இல்லாநிலையதாக்குவதை நோக்கமாகவோ அல்லது விளைவாகவோ கொண்டிருக்கின்ற மாற்றுத்திறன் அடிப்படையிலான வேறுபாடு, விலக்கிவைப்பு, கட்டுப்பாடு எதுவும் என்று பொருள்படும்; மற்றும் தகுமான இணக்கத்தில் வேற்றுமைகாட்டலின் மற்றும் மறுத்தலின் அனைத்து முறைகளையும் உள்ளடக்கும்;

(ஐ) "நிறுவனம்" என்பது, ஓர் அரசு நிறுவனத்தையும் தனியார் நிறுவனத்தையும் உள்ளடக்கும்;

(ஒ) "நிதியம்" என்பது, 86 ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட தேசிய நிதியம் என்று பொருள்படும்;

(ஓ) "அரசு நிறுவனம் " என்பது, ஒரு மையச் சட்டத்தாலோ அல்லது மாநிலச் சட்டத்தாலோ அல்லது அதன் வழியாலோ நிறுவப்பட்ட ஒரு கூட்டுருமம் அல்லது அரசுக்கு அல்லது ஓர் உள்ளாட்சி அதிகாரஅமைப்பிற்குச் சொந்தமான அல்லது அதனால் கட்டாள்கை செய்யப்படும் அல்லது நிதியுதவியளிக்கப்படும் ஓர் அதிகாரஅமைப்பு அல்லது ஒரு குழுமம் அல்லது நிறுமங்கள் சட்டம், 2013 இன் 2
18/2013. ஆம் பிரிவில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான ஓர் அரசு நிறுமம் என்று பொருள்படும்; மற்றும் ஓர் அரசுத் துறையையும் உள்ளடக்கும்;

(ஔ) "உயர் ஆதரவு" என்பது, குறியீட்டளவு மாற்றுத்திறனுடைய ஒரு நபரால், வாய்ப்பு வசதிகளை அணுகுவதற்கும், கல்வி, வேலைவாய்ப்பு, குடும்ப மற்றும் சமுதாய வாழ்க்கை மற்றும் மருத்துவ சிகிச்சை மற்றும் நோய் நீக்கல் உள்ளடங்கலான வாழ்க்கையின் பகுதிகள் அனைத்திலும் பங்கேற்பதற்கும், தற்சார்பான மற்றும் கற்றுக்கொடுக்கப்பட்ட முடிபு எடுப்பதற்கு, அன்றாட செயல்பாடுகளுக்காகத் தேவைப்படலாகும் உடலியல், உளவியல் மற்றும் பிறவாறான ஒரு முனைப்பான ஆதரவு என்று பொருள்படும்;

(m) "inclusive education" means a system of education wherein students with and without disability learn together and the system of teaching and learning is suitably adapted to meet the learning needs of different types of students with disabilities;

(n) "information and communication technology" includes all services and innovations relating to information and communication, including telecom services, web based services, electronic and print services, digital and virtual services;

(o) "institution" means an institution for the reception, care, protection, education, training, rehabilitation and any other activities for persons with disabilities;

(p) "local authority" means a Municipality or a Panchayat, as defined in clause (*e*) and clause (*f*) of article 243P of the Constitution; a Cantonment Board constituted under the Cantonments Act, 2006 ; and any other authority established under an Act of Parliament or a State Legislature to administer the civic affairs; 41/2006.

(q)"notification" means a notification published in the Official Gazette and the expression "notify" or "notified" shall be construed accordingly;

(க) "உள்ளடக்கிய கல்வி" என்பது, மாற்றுத்திறனுடைய மற்றும் மாற்றுத்திறன் இல்லாத மாணவர்கள் ஒன்றுசேர்ந்து கற்றலுக்கான ஒரு கல்விமுறை; மற்றும் கற்பித்தலின் மற்றும் கற்றலின் முறையானது மாற்றுத்திறனுடைய மாணவர்களின் பல்வேறு வகையினருக்கான கற்றலின் தேவைகளை நிறைவு செய்யும்பொருட்டுப் பொருத்தமுடைய தழுவமைவு செய்யப்பட்டதான ஒரு கல்விமுறை என்று பொருள்படும்;

(ங) "தகவல் மற்றும் செய்தித்தொடர்பு தொழில்நுட்பம்" என்பது, தொலைத்தொடர்பு சேவை, வலைத்தள வழிச் சேவைகள், மின்னணு மற்றும் அச்சு சேவைகள், மின்னிலக்கமுறை மற்றும் மெய்நிகர் சேவைகள் உள்ளடங்கலான தகவல் மற்றும் செய்தித்தொடர்பு பொறுத்த, அனைத்துச் சேவைகளையும் புதுப்புனைவுகளையும் உள்ளடக்கும்;

(ச) "அமைவனம்" என்பது, மாற்றுத் திறனாளிகளைச் சேர்த்துக்கொள்ளுதல், அவர்களுக்கான காப்பு, பாதுகாப்பு, கல்வி, பயிற்சி, மறுவாழ்வு ஆகியவற்றிற்கும் மற்றும் பிற செயல்பாடுகளுக்குமான ஓர் அமைவனம் என்று பொருள்படும்;

(ஞ) "உள்ளாட்சி அதிகாரஅமைப்பு" என்பது, அரசமைப்பின் 243 (ஞ) ஆம் உறுப்பின் (உ) கூறிலும் (ஊ) கூறிலும் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான,
41/2006. ஒரு நகராட்சி அல்லது ஓர் ஊராட்சி; பாளையங்கள் சட்டம், 2006 இன்படி அமைக்கப்பட்ட ஒரு பாளைய வாரியம் மற்றும் குடியியல் அலுவற்பாடுகளை நிருவகிப்பதற்கு நாடாளுமன்றத்தின் அல்லது ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் சட்டம் ஒன்றின்படி நிறுவப்பட்ட பிற அதிகாரஅமைப்பு எதுவும் என்று பொருள்படும்;

(ட) "அறிவிக்கை" என்பது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட ஓர் அறிவிக்கை என்று பொருள்படும்; மற்றும் "அறிவிக்கை செய்" அல்லது "அறிவிக்கை செய்யப்பட்ட" என்ற சொற்கள் அதன்படியே பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்;

(r ) "person with benchmark disability" means a person with not less than forty per cent. of a specified disability where specified disability has not been defined in measurable terms and includes a person with disability where specified disability has been defined in measurable terms, as certified by the certifying authority;

(s) "person with disability" means a person with long term physical, mental, intellectual or sensory impairment which, in interaction with barriers, hinders his full and effective participation in society equally with others;

(t) "person with disability having high support needs" means a person with benchmark disability certified under clause (*a*) of sub-section (*2*) of section 58 who needs high support;

(u) "prescribed" means prescribed by rules made under this Act;

(v) "private establishment" means a company, firm, cooperative or other society, associations, trust, agency, institution, organisation, union, factory or such other establishment as the appropriate Government may, by notification, specify;

(w) "public building" means a Government or private building, used or accessed by the public at large, includinga building used for educational or vocational purposes, workplace, commercial activities, public utilities, religious, cultural, leisure or recreational activities,

(ண) "குறியீட்டளவு மாற்றுத்திறனுடைய நபர்" என்பது, குறித்துரைக்கப்பட்ட மாற்றுத்திறனானது அளவிடத்தக்க அலகுகளில் வரையறை செய்யப் பட்டிராதவிடத்து, குறித்துரைக்கப்பட்ட ஒரு மாற்றுத்திறனில் நாற்பது விழுக்காட்டிற்குக் குறைவாக இல்லாத நபர் ஒருவர் என்று பொருள்படும்; மற்றும் குறித்துரைக்கப்பட்ட மாற்றுத்திறன் அளவிடத்தக்க அலகுகளில் வரையறை செய்யப்பட்டிருக்கிறவிடத்து, உறுதிச்சான்றளிக்கும் அதிகாரியால் உறுதிச் சான்றளிக்கப்பட்டவாறான மாற்றுத்திறனாளி ஒருவரையும் உள்ளடக்கும்;

(த) "மாற்றுத்திறனாளி" என்பது, சமுதாயத்தில் பிறருக்கு சரிசமமாக, முழுமையாக மற்றும் பயனுறும் வகையில் பங்கேற்றலிலும் தொடர்புகொண்டு உறவாடுவதில் தடையூறுகளும், இடையூறுடன் நாள்பட்ட உடலியல், மனநிலை அறிவு, புலனுணர்வு ஆகியவற்றைச் சார்ந்த குறைபாடுடைய ஒரு நபர் என்று பொருள்படும்;

(ந) "உயர் ஆதரவுத் தேவைகள் கொண்ட மாற்றுத்திறனாளி" என்பது, 58 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) கூறின்படி உயர் ஆதரவுத் தேவைப்படுபவரான உறுதிச்சான்றளிக்கப்பெற்ற குறியீட்டளவு மாற்றுத்திறனுடைய ஒருவர் என்று பொருள்படும்;

(ப) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(ம) "தனியார் நிறுவனம்" என்பது, ஒரு நிறுமம், நிறுவகம், கூட்டுறவு அல்லது பிற சங்கம், கழகங்கள், பொறுப்புக்கட்டளை, முகமை, அமைவனம், அமைப்பு, தொழிற்சங்கம், தொழிற்சாலை அல்லது உரிய அரசு, அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாகும் அத்தகைய பிற நிறுவனம் என்று பொருள்படும்;

(ய) "பொதுக் கட்டிடம்" என்பது, கல்வி அல்லது உறுதொழில் நோக்கங்களுக்காகவோ அல்லது பணியிடம், வாணிப நடவடிக்கைகள், பொதுப்பயன்பாடுகள், சமய, பண்பாட்டு, ஓய்வுநேர அல்லது இன்பப்பொழுதுபோக்கு செயல்பாடுகள்,

medical or health services, law enforcement agencies, reformatories or judicial foras, railway stations or platforms, roadways bus stands or terminus, airports or waterways;

(x) "public facilities and services" includes all forms of delivery of services to the public at large, including housing, educational and vocational trainings, employment and career advancement, shopping or marketing, religious, cultural, leisure or recreational, medical, health and rehabilitation, banking, finance and insurance, communication, postal and information, access to justice, public utilities, transportation;

(y) "reasonable accommodation" means necessary and appropriate modification and adjustments, without imposing a disproportionate or undue burden in a particular case, to ensure to persons with disabilities the enjoyment or exercise of rights equally with others;

(z) "registered organisation" means an association of persons with disabilities or a disabled person organisation, association of parents of persons with disabilities, association of persons with disabilities and family members, or a voluntary or non-governmental or charitable organisation or trust, society, or non-profit company working for the welfare of the persons with disabilities, duly registered under an Act of Parliament or a State Legislature;

மருத்துவ, அல்லது நல்வாழ்வுச் சேவைகள், சட்டச் செயலுறுத்தும் முகமைகள், சீர்திருத்த அமைப்புகள் அல்லது நீதி முறைமன்றங்கள், இருப்பூர்திய நிலையங்கள் அல்லது நடைமேடைகள், சாலை வழிகள், பேருந்து நிலையங்கள் அல்லது முனையங்கள், வானூர்தித் தளங்கள் அல்லது கடல்வழிப் போக்குவரத்துகள் ஆகியவற்றிற்காகவோ பயன்படும் ஒரு கட்டிடம் உள்ளடங்கலான, பொதுமக்கள் அனைவராலும் பயன்படுத்தப்படும் அல்லது அணுகப்படும் ஓர் அரசு அல்லது தனியார் கட்டிடம் என்று பொருள்படும்;

(ர) "பொது வசதிகள் மற்றும் சேவைகள்" என்பது, வீட்டுவசதி, கல்விசார்ந்த மற்றும் உறுதொழில் சார்ந்த பயிற்சிகள், வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முன்னேற்றம், பொருள் வாங்குதல் அல்லது சந்தையிடுதல், சமயம், பண்பாடு, ஓய்வுநேர அல்லது இன்பப்பொழுதுபோக்கு , மருத்துவ, நல்வாழ்வு மற்றும் மறுவாழ்வளிப்பு, வங்கித்தொழில், நிதி மற்றும் காப்பீடு, செய்தித்தொடர்பு, அஞ்சல் மற்றும் தகவல், நீதிபெற அணுகுதல், பொதுப் பயன்பாடுகள், போக்குவரத்து உள்ளடங்கலான பொதுமக்கள் அனைவருக்கும் சேவைகள் வழங்கும் அனைத்து முறைகளையும் உள்ளடக்கும்;

(ல) "தகுமான இணக்கம்" என்பது, மாற்றுத்திறனாளிகள், பிறருக்குச் சரிசமமாக உரிமைகளைத் துய்த்து வருவதையோ அல்லது பயன்படுத்தி வருவதையோ உறுதிசெய்வதற்கு ஒரு குறிப்பிட்ட நேர்வில் ஓர் உருவஒப்பில்லாத அல்லது தாங்கொணாச் சுமை விதிக்காத, தேவையான மற்றும் உரிய மாற்றமைவும், நேரமைவுகளும் என்று பொருள்படும்;

(வ) "பதிவுபெற்ற அமைப்பு" என்பது, நாடாளுமன்றத்தின் அல்லது ஒரு மாநிலச் சட்டமன்றத்தின் சட்டம் ஒன்றின்படி உரியவாறு பதிவு செய்யப்பெற்று, மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக இயங்கிவரும் மாற்றுத்திறனாளிகளின் குழாம் அல்லது மாற்றுத்திறனாளிகள் அமைப்பு அல்லது மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர் சங்கம், மாற்றுத்திறனாளிகள் மற்றும் குடும்பத்தினர் சங்கம் அல்லது தன்விருப்பான அல்லது அரசுசாரா அல்லது அறப்பணி அமைப்பு அல்லது பொறுப்புக்கட்டளை, சங்கம் அல்லது மாற்றுத் திறனாளிகளின் நல்வாழ்விற்காக இயங்கிவரும் ஆதாய நோக்கமில்லாத நிறுமம் என்று பொருள்படும்;

(*za*) "rehabilitation" refers to a process aimed at enabling persons with disabilities to attain and maintain optimal, physical, sensory, intellectual, psychological environmental or social function levels;

(*zb*) "Special Employment Exchange" means any office or place established and maintained by the Government for the collection and furnishing of information, either by keeping of registers or otherwise, regarding—

(i) persons who seek to engage employees from amongst the persons with disabilities;

(ii) persons with benchmark disability who seek employment;

(iii) vacancies to which persons with benchmark disabilities seeking employment may be appointed;

(*zc*) "specified disability" means the disabilities as specified in the Schedule;

(*zd*) "transportation systems" includes road transport, rail transport, air transport, water transport, para transit systems for the last mile connectivity, road and street infrastructure, etc;

(ze) "universal design" means the design of products, environments, programmes and services to be usable by all people to the greatest extent possible, without the need for adaptation or specialised design and shall apply to assistive devices including advanced technologies for particular group of persons with disabilities.

(வஅ) "மறுவாழ்வளிப்பு" என்பது, மாற்றுத் திறனாளிகள், பெரிதும் உகந்த, உடல் நிலை, புலனுணர்வு, அறிவாற்றல், உளவியல் சூழல் அல்லது சமுதாயச் செயல்பாட்டு நிலைகளை எய்தி, தொடர்ந்து பேணிவருவதை இயல்விக்கும் குறிக்கோளைக்கொண்ட ஒரு வழிமுறையைச் சுட்டுகிறது;

(வஆ) " சிறப்பு வேலைவாய்ப்பகம்" என்பது,–

(i) மாற்றுத்திறனாளிகளிடையேயிருந்து பணியாளர்களை வேலைக்கமர்த்த நாடுவோர்;

(ii) வேலைவாய்ப்பு நாடுகிற குறியீட்டளவு மாற்றுத்திறனுடையவர்கள்;

(iii) வேலைவாய்ப்பு நாடுகிற குறியீட்டளவு மாற்றுத்திறனுடையவர்கள் பணியமர்த்தப்படலாகும் காலிப்பணியிடங்கள்

ஆகியவற்றைப் பொறுத்து, பதிவேடுகள் வைத்தோ பிறவாறாகவோ, தகவல் சேகரித்து அளிப்பதற்காக அரசால் நிறுவப்பட்டு நடத்திவரப்படுகிற அலுவலகம் அல்லது இடம் எதுவும் என்று பொருள்படும்;

(வஇ) "குறித்துரைக்கப்பட்ட மாற்றுத்திறன்" என்பது, இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப் பட்டவாறான மாற்றுத்திறன்கள் என்று பொருள்படும்;

(வஈ) "போக்குவரத்து அமைப்பு முறைகள்" என்பது, சாலைப் போக்குவரத்து, இருப்பூர்தியப் போக்குவரத்து, வான்வழிப் போக்குவரத்து, நீர்வழிப் போக்குவரத்து, பயணிகள் வந்து செல்ல வேண்டிய இடத்திற்கான சார்நிலை போக்குவரத்து முறைகள், சாலை மற்றும் தெரு உள்கட்டமைப்பு முதலியவற்றை உள்ளடக்கும்;

(வஉ) "அனைவருக்குமான வடிவமைப்பு" என்பது, தழுவமை அல்லது தனித்துவ வடிவமைப்பிற்கான தேவையின்றி, இயலுமளவு மிகப் பெரிய அளவிற்கு மக்கள் அனைவராலும் பயன்படுத்தத்தக்கதாக இருக்கவேண்டிய செய்பொருள்கள், சுற்றுச்சூழல்கள், செயல்திட்டங்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றின் வடிவமைப்பு என்று பொருள்படும்; மற்றும் மாற்றுத்திறனாளிகளில் குறிப்பிட்ட தொகுதியினருக்கான உயரிய தொழில்நுட்பங்கள் உள்ளடங்கலான உதவு சாதனங்களுக்கும் பொருந்துதல் வேண்டும்.

## CHAPTER II

## RIGHTS AND ENTITLEMENTS

Equality and non-discrimination.

3. (1) The appropriate Government shall ensure that the persons with disabilities enjoy the right to equality, life with dignity and respect for his or her integrity equally with others.

(2) The appropriate Government shall take steps to utilise the capacity of persons with disabilities by providing appropriate environment.

(3) No person with disability shall be discriminated on the ground of disability, unless it is shown that the impugned act or omission is a proportionate means of achieving a legitimate aim.

(4) No person shall be deprived of his or her personal liberty only on the ground of disability.

(5) The appropriate Government shall take necessary steps to ensure reasonable accommodation for persons with disabilities.

Women and children with disabilities.

4. (1) The appropriate Government and the local authorities shall take measures to ensure that the women and children with disabilities enjoy their rights equally with others.

(2) The appropriate Government and local authorities shall ensure that all children with disabilities shall have right on an equal basis to freely express their views on all matters affecting them and provide them appropriate support keeping in view their age and disability.

## அத்தியாயம் II

## உரிமைகளும் உரிமையுடைமைகளும்

3. (1) உரிய அரசு, மாற்றுத்திறனாளிகளின் சமன்மைக்கான உரிமையையும், மாண்புடைய வாழ்க்கையையும் மற்றும் அவனுடைய அல்லது அவளுடைய முழுமைக்கான மதிப்பையும் பிறருக்கு சமமாக துய்த்து வருகின்றனர் என்பதை உறுதி செய்தல் வேண்டும். சமன்மையும் வேற்றுமை காட்டாமையும்.

(2) உரிய அரசு, மாற்றுத்திறனாளிகளுக்கு உரிய சூற்றுச்சூழலுக்கு வகைசெய்து அவர்களின் திறனைப் பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(3) தவறென்று கூறப்படும் செயலோ, செய்யாது விடுகையோ சட்டப்படியான குறிக்கோள் ஒன்றை எய்துவதற்கு ஒரு பொருத்தமான வழி என்று காட்டப்பட்டாலன்றி, மாற்றுத்திறனாளி எவரும், மாற்றுத்திறனின் காரணமாக வேற்றுமை காட்டப்படுதல் ஆகாது.

(4) நபர் எவருக்கும் மாற்றுத்திறனின் காரணமாக மட்டுமே அவனுடைய அல்லது அவளுடைய தனிநபர் உரிமை பறிக்கப்படுதல் ஆகாது.

(5) உரிய அரசு, மாற்றுத்திறனாளிகளுக்குத் தகுமான இணக்கத்தை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

4. (1) உரிய அரசும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளும் மாற்றுத்திறனுடைய பெண்களும் சிறார்களும் அவர்களுக்கான உரிமைகளைப் பிறருக்குச் சரிசமமாகத் துய்த்து வருகின்றனர் என்பதை உறுதி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும். மாற்றுத்–திறனுடைய பெண்களும் சிறார்களும்.

(2) உரிய அரசும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளும் மாற்றுத்திறனுடைய சிறார்கள் அனைவரும் அவர்களைப் பாதிக்கும் பொருட்பாடுகள் அனைத்திலும் அவர்களுடைய கருத்துக்களைத் தடையின்றி எடுத்தியம்புவதற்கு ஒரு சமன்மையான அடிப்படையில் உரிமை கொண்டுள்ளனர் என்பதை உறுதிசெய்தல் வேண்டும்; மேலும் அவர்களுடைய வயதையும் மாற்றுத்திறனையும் கருத்தில்கொண்டு அவர்களுக்கு உரிய ஆதரவு அளித்தலும் வேண்டும்.

Community life.

5. (1) The persons with disabilities shall have the right to live in the community.

(2) The appropriate Government shall endeavour that the persons with disabilities are,—

(a) not obliged to live in any particular living arrangement; and

(b) given access to a range of in-house, residential and other community support services, including personal assistance necessary to support living with due regard to age and gender.

Protection from cruelty and inhuman treatment.

6. (1) The appropriate Government shall take measures to protect persons with disabilities from being subjected to torture, cruel, inhuman or degrading treatment.

(2) No person with disability shall be a subject of any research without,—

(i) his or her free and informed consent obtained through accessible modes, means and formats of communication; and

(ii) prior permission of a Committee for Research on Disability constituted in the prescribed manner for the purpose by the appropriate Government in which not less than half of the Members shall themselves be either persons with disabilities or Members of the registered organisation as defined under clause (*z*) of section 2.

5. (1) மாற்றுத்திறனாளிகள் கூட்டுக்குழு வாழ்க்கைக்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுக்குழு வாழ்க்கை.

(2) மாற்றுத்திறனாளிகள்,–

(அ) குறிப்பிட்ட வாழ்க்கை முறை எதிலும் வாழ்ந்துவருவதற்கு கட்டுப்படுத்தப்படாமல் இருப்பதற்கும்; மற்றும்

(ஆ) வயதுக்கும் பாலினத்துக்கும் உரிய மதிப்புடன் வாழ்ந்துவருவதற்கு ஆதரவளிக்கத் தேவைப்படும் தனிப்பட்ட உதவி உள்ளடங்கலான, உள்நிறுவன, குடியிருப்பு மற்றும் பிற கூட்டுக்குழுவிற்கான ஆதரவுச் சேவைகளைப் பெற அணுகுவதற்கும்

உரிய அரசு முனைந்துமுயலுதல் வேண்டும்.

6. (1) மாற்றுத்திறனாளிகளை சித்திரவதைக்கு, கொடுமைக்கு, மனிதத்தன்மையற்று அல்லது இழிவுபடுத்தி நடத்தப்படுதலுக்கு உள்ளாவதிலிருந்து பாதுகாப்பதற்கு உரிய அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும். கொடுமைப்–படுத்துதல், மனிதத் தன்மையற்று நடத்துதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாத்தல்.

(2) மாற்றுத்திறனாளி எவரும்,–

(i) தகவல்தொடர்பின் அணுகத்தக்க முறைகள், வழிகள் மற்றும் வடிவங்கள் மூலமாகப் பெறப்பட்ட அவனுடைய அல்லது அவளுடைய தடையற்ற மற்றும் கேட்டு உரைக்கப்பட்ட இசைவின்றியும்; மற்றும்

(ii) மாற்றுத்திறனின் மீது ஆராய்ச்சி செய்யும் நோக்கத்திற்காக, உரிய அரசால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் அமைக்கப்பட்ட ஒரு குழுவிலுள்ள உறுப்பினர்களில் பாதிப் பகுதியினருக்குக் குறையாத உறுப்பினர்கள் மாற்றுத்திறனாளிகளாகவோ அல்லது 2 ஆம் பிரிவின் (வ) கூறின்படி பொருள்வரையறை செய்யப்பட்டவாறான பதிவுபெற்ற அமைப்பின் உறுப்பினர்களாகவோ இருக்க வேண்டிய, அந்தக் குழுவின் முன்அனுமதியின்றியும்,

ஆராய்ச்சி எதற்குமான ஓர் ஆதாரப்பொருளாக இருத்தல் ஆகாது.

Protection from abuse, violence and exploitation.

7. (1) The appropriate Government shall take measures to protect persons with disabilities from all forms of abuse, violence and exploitation and to prevent the same, shall—

(a) take cognizance of incidents of abuse, violence and exploitation and provide legal remedies available against such incidents;

(b) take steps for avoiding such incidents and prescribe the procedure for its reporting;

(c ) take steps to rescue, protect and rehabilitate victims of such incidents; and

(d) create awareness and make available information among the public.

(2) Any person or registered organisation who or which has reason to believe that an act of abuse, violence or exploitation has been, or is being, or is likely to be committed against any person with disability, may give information about it to the Executive Magistrate within the local limits of whose jurisdiction such incidents occur.

(3) The Executive Magistrate on receipt of such information, shall take immediate steps to stop or prevent its occurrence, as the case may be, or pass such order as he deems fit for the protection of such person with disability including an order—

7. (1) உரிய அரசு, மாற்றுத்திறனாளிகளைத் தவறாள்கை, வன்முறை, சுரண்டல் ஆகியவற்றின் அனைத்து செயல்முறைகளிலிருந்தும் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும் மேலும் அவற்றைத் தடுப்பதற்கு,– தவறாள்கை வன்முறை சுரண்டல் ஆகியவற்றில் இருந்து பாதுகாப்பு.

(அ) தவறாள்கை, வன்முறை, சுரண்டல் ஆகிய நிகழ்வுகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அத்தகைய நிகழ்வுகளுக்கு எதிராக இருக்கலாகும் சட்டமுறைத் தீர்வழிகளுக்கு வகைசெய்தலும்;

(ஆ) அத்தகைய நிகழ்வுகளைத் தவிர்ப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொண்டு அவற்றை, அறிவிப்பதற்கான நெறிமுறையினை வகுத்துரைத்தலும்;

(இ) அத்தகைய நிகழ்வுகளின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் மறுவாழ்வளிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதலும்; மற்றும்

(ஈ) பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதலும், தகவல் கிடைக்கச் செய்தலும்,

வேண்டும்.

(2) மாற்றுத்திறனாளி எவருக்கும் எதிராக, தவறாள்கை, வன்முறை அல்லது சுரண்டல் சார்ந்த செயல் ஒன்று இழைக்கப்பட்டிருக்கிறது அல்லது இழைக்கப்பட்டு வருகிறது அல்லது அநேகமாக இழைக்கப்படக்கூடும் என்று நம்புவதற்குக் காரணம் கொண்டிருக்கிற நபர் எவரும் அல்லது பதிவுபெற்ற அமைப்பு எதுவும், அது பற்றி அத்தகைய நிகழ்வுகள், எந்த நிருவாகத்துறை நடுவரின் அதிகாரவரம்பின் வட்டார எல்லைக்குள் நிகழ்கின்றனவோ அந்த நிருவாகத்துறை நடுவருக்குத் தகவல் கொடுக்கலாம்.

(3) அத்தகைய தகவலைப் பெறுவதன் பேரில் அந்த நிருவாகத்துறை நடுவர், நேர்வுக்கேற்ப, அது நிகழ்வதை நிறுத்துவதற்கு அல்லது தடுப்பதற்கு உடனடியான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதலோ அல்லது அத்தகைய மாற்றுத்திறனாளியைப் பாதுகாப்பதற்காக அவர் பொருத்தமானதெனக் கொள்கிறவாறு–

(a) to rescue the victim of such act, authorising the police or any organisation working for persons with disabilities to provide for the safe custody or rehabilitation of such person or both, as the case may be;

(b) for providing protective custody to the person with disability, if such person so desires;

(c) to provide maintenance to such person with disability.

(4) Any police officer who receives a complaint or otherwise comes to know of abuse, violence or exploitation towards any person with disability shall inform the aggrieved person of—

(a) his or her right to apply for protection under sub-section (*2*) and the particulars of the Executive Magistrate having jurisdiction to provide assistance;

(b) the particulars of the nearest organisation or institution working for the rehabilitation of persons with disabilities;

(c) the right to free legal aid; and

(d) the right to file a complaint under the provisions of this Act or any other law dealing with such offence:

(அ) அத்தகைய செயலின் காரணமாகப் பாதிக்கப்பட்டவரை விடுவிக்கும் பொருட்டு நேர்வுக்கேற்ப, அத்தகைய நபரைப் பாதுகாப்பான பொறுப்பில் வைப்பதற்காக அல்லது அவருக்கு மறுவாழ்வளிப்பதற்காக அல்லது அவை இரண்டிற்காகவும் வகைசெய்யும் பொருட்டு, காவல்துறைக்கோ அல்லது மாற்றுத் திறனாளிகளுக்காக இயங்கிவரும் அமைப்பு எதற்குமோ அதிகாரமளித்து;

(ஆ) மாற்றுத்திறனாளிக்கு, அவர் அவ்வாறு விரும்புவாராயின் சேமக்காவலுக்கு வகை செய்வதற்கான;

(இ) அத்தகைய மாற்றுத்திறனாளிக்கு வாழ்க்கைப் பொருளுதவி வழங்குவதற்கான,

ஓர் ஆணை உள்ளடங்கலான அத்தகைய ஆணையைப் பிறப்பித்தலோ வேண்டும்.

(4) மாற்றுத்திறனாளி எவருக்கும் தவறாள்கை, வன்முறை அல்லது சுரண்டல் நிகழ்வது குறித்த முறையீடு ஒன்றைப் பெறுகிற அல்லது அது பற்றிப் பிறவாறாகத் தெரிந்துகொள்கிற காவல்துறை அலுவலர் எவரும், குறையுற்ற நபருக்கு–

(அ). (2) ஆம் உட்பிரிவின்படி பாதுகாப்பிற்காக விண்ணப்பம் செய்வதற்கு அவனுக்குள்ள அல்லது அவளுக்குள்ள உரிமை குறித்தும் உதவி வழங்குவதற்கு அதிகாரவரம்பு கொண்டுள்ள நிர்வாகத்துறை நடுவர் பற்றிய விவரங்களையும்;

(ஆ) மாற்றுத்திறனாளிகளுக்கு மறுவாழ்–வளிப்பதற்காக இயங்கிவரும் மிக அண்மையிலுள்ள அமைப்பு அல்லது நிறுவனம் பற்றிய விவரங்களையும்;

(இ) இலவச சட்ட உதவிக்கான உரிமை பற்றியும்; மற்றும்

(ஈ) இந்தச் சட்டத்தின் வகையங்களின்படியோ அல்லது அத்தகைய குற்றச்செயல் தொடர்பான பிற சட்டம் எதன்படியுமோ, முறையீடு ஒன்றை முன்னிடுவதற்கான உரிமை பற்றியும்,

தெரிவித்தல் வேண்டும்:

Provided that nothing in this section shall be construed in any manner as to relieve the police officer from his duty to proceed in accordance with law upon receipt of information as to the commission of a cognizable offence.

(5) If the Executive Magistrate finds that the alleged act or behaviour constitutes an offence under the Indian Penal Code, or under any other law for the time being in force, he may forward the complaint to that effect to the Judicial or Metropolitan Magistrate, as the case may be, having jurisdiction in the matter. 45/1860.

Protection and safety.

8. (1) The persons with disabilities shall have equal protection and safety in situations of risk, armed conflict, humanitarian emergencies and natural disasters.

(2) The National Disaster Management Authority and the State Disaster Management Authority shall take appropriate measures to ensure inclusion of persons with disabilities in its disaster management activities as defined under clause (*e*) of section 2 of the Disaster Management Act, 2005 for the safety and protection of persons with disabilities. 53/2005.

(3) The District Disaster Management Authority constituted under section 25 of the Disaster Management Act, 2005 shall maintain record of details of persons with disabilities in the district and take suitable measures to inform such persons of any situations of risk so as to enhance disaster preparedness. 53/2005.

**வரம்புரையாக:** இந்தப் பிரிவிலுள்ள எதுவும் காவல்துறை அலுவலர், பிடியாணையின்றிக் கைது செய்வதற்குரிய குற்றச்செயல் ஒன்று இழைக்கப்பட்டது பற்றிய தகவலைப் பெறுவதன் பேரில், சட்டப்படி நடவடிக்கையெடுக்க முற்படுவதற்கு அவருக்குள்ள கடமையிலிருந்து அவரை விடுவிப்பதாக எந்த முறையிலும் பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

(5) சாட்டுரைக்கப்பட்ட செயலோ நடவடிக்கையோ
45/1860. இந்தியத் தண்டனைச் சட்டத்தொகுப்பின்படியோ அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதன்படியுமோ, ஒரு குற்றச்செயலாக அமைகிறது என்று நிருவாகத்துறை நடுவர் முடிவு செய்வாராயின், அவர், அந்த முறையீட்டை அந்தப்படிக்கு, அந்தப் பொருட்பாட்டில் அதிகாரவரம்புடைய, நேர்வுக்கேற்ப, நீதித்துறை அல்லது பெருநகர் நடுவருக்கு அனுப்பி வைக்கலாம்.

பாதுகாப்பும் இடர்காப்பும்.

8. (1) ஆபத்து, ஆயுதக்கலகம், மனித நலம்சார் அவசரநிலைகள், இயற்கைப் பேரிடர்கள் ஆகிய சூழல்களில் மாற்றுத்திறனாளிகள் சமன்மையானப் பாதுகாப்புக்கும் இடர்காப்புக்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

(2) தேசியப் பேரிடர் மேலாண்மை அதிகாரஅமைப்பும் மாநிலப் பேரிடர் மேலாண்மை அதிகாரஅமைப்பும் மாற்றுத்திறனாளிகளின்
53/2005. இடர்காப்பிற்கும் பாதுகாப்பிற்கும் பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 இன் 2 ஆம் பிரிவின் (உ) கூறின்படி பொருள்வரையறை செய்யப்பட்டவாறு அதன் பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளில் மாற்றுத்திறனாளிகளை இணைத்துக் கொள்ளப்படுவதை உறுதி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

53/2005. (3) பேரிடர் மேலாண்மைச் சட்டம், 2005 இன் 25 ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட மாவட்டப் பேரிடர் மேலாண்மை அதிகாரஅமைப்பு மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் பற்றிய விவரங்களைக் கொண்ட பதிவணத்தைப் பேணிவருதலும், பேரிடர் ஆயத்தநிலையை மேம்படுத்தும் பொருட்டு ஆபத்துச் சூழல்கள் எவற்றையும் பற்றி அத்தகைய நபர்களுக்குத் தகவல் தெரிவிப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதலும் வேண்டும்.

(4) The authorities engaged in reconstruction activities subsequent to any situation of risk, armed conflict or natural disasters shall undertake such activities, in consultation with the concerned State Commissioner, in accordance with the accessibility requirements of persons with disabilities.

Home and family.

9. (1) No child with disability shall be separated from his or her parents on the ground of disability except on an order of competent court, if required, in the best interest of the child.

(2) Where the parents are unable to take care of a child with disability, the competent court shall place such child with his or her near relations, and failing that within the community in a family setting or in exceptional cases in shelter home run by the appropriate Government or non-governmental organisation, as may be required.

Reproductive rights.

10. (1) The appropriate Government shall ensure that persons with disabilities have access to appropriate information regarding reproductive and family planning.

(2) No person with disability shall be subject to any medical procedure which leads to infertility without his or her free and informed consent.

Accessibility in voting.

11. The Election Commission of India and the State Election Commissions shall ensure that all polling stations are accessible to persons with disabilities and all materials related to the electoral process are easily understandable by and accessible to them.

(4) ஆபத்து, ஆயுதக்கலகம் அல்லது இயற்கைப் பேரிடர்களின் சூழல் எதற்கும் பிந்திய மறுகட்டமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரஅமைப்புகள் அத்தகைய நடவடிக்கைகளை மாற்றுத்திறனாளிகள் அணுகத்தக்க தேவைகளுக்கிணங்க, தொடர்புடைய மாநில ஆணையருடன், கலந்தாய்ந்து அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

9. (1) மாற்றுதிறனுடைய சிறார் எவரும் சிறாரின் சீரிய நலன் பொருட்டு தேவைப்படுமாயின், தகுதிறமுள்ள நீதிமன்றத்தின் ஓர் ஆணையின் பேரில் அல்லாமல், மாற்றுதிறனின் காரணமாக அவனுடைய அல்லது அவளுடைய பெற்றோர்களிடமிருந்து பிரித்து வைக்கப்படுதலாகாது.

காப்பகமும் குடும்பமும்.

(2) மாற்றுதிறனுடைய சிறார் ஒருவரைப் பெற்றோர்கள் பொறுப்பில் ஏற்க இயலாதவிடத்து, தகுதிறமுள்ள நீதிமன்றம், அத்தகைய சிறாரை அவனுடைய அல்லது அவளுடைய நெருங்கிய உறவினர்களிடம் மற்றும் அதற்கு இயலாதபோது, தேவைப்படுகிறவாறு ஒரு குடும்ப அமைப்பில் உள்ளவாறான கூட்டுக்குழு அல்லது விதிவிலக்கான நேர்வுகளில் உரிய அரசால் அல்லது அரசுசாரா அமைப்பால் நடத்தப்படும் இடர் காப்பகத்திலோ ஒப்படைத்தல் வேண்டும்.

10. (1) மாற்றுத்திறனாளிகள், மக்கட்பேறு மற்றும் குடும்ப நலத்திட்டம் தொடர்பான உரிய தகவலை அணுகும் வழி கொண்டவர்கள் என்பதை உரிய அரசு உறுதிசெய்தல் வேண்டும்.

மக்கட் பேற்றிற்கான உரிமை.

(2) மாற்றுத்திறனாளி எவரும், அவனுடைய அல்லது அவளுடைய தடையற்ற மற்றும் கேட்டுஉரைக்கப்பட்ட இசைவின்றி, மலட்டுத்தன்மைக்கு இட்டுச்செல்லும் மருத்துவச்செயல்முறை எதற்கும் உட்படுத்தப்படுதல் ஆகாது.

11. இந்தியத் தேர்தல் ஆணையமும் மாநிலத் தேர்தல் ஆணையங்களும் அனைத்துத் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களும் மாற்றுத்திறனாளிகள் அணுகக் கூடியனவாக இருக்கின்றனவா என்பதையும் மற்றும் தேர்தல் நடைமுற தொடர்பானஅனைத்துப் பொருள்வகைகளும் அவர்களால் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியனவாகவும் அவர்கள் அணுகக்கூடியனவாகவும் இருக்கின்றனவா என்பதையும் உறுதி செய்தல் வேண்டும்.

வாக்களிப்பதில் அணுகத்தக்க தன்மை.

Access to justice.

12. (1) The appropriate Government shall ensure that persons with disabilities are able to exercise the right to access any court, tribunal, authority, commission or any other body having judicial or quasi-judicial or investigative powers without discrimination on the basis of disability.

(2) The appropriate Government shall take steps to put in place suitable support measures for persons with disabilities specially those living outside family and those disabled requiring high support for exercising legal rights.

(3) The National Legal Services Authority and the State Legal Services Authorities constituted under the Legal Services Authorities Act, 1987 shall make provisions including reasonable accommodation to ensure that persons with disabilities have access to any scheme, programme, facility or service offered by them equally with others. 39/1987.

(4) The appropriate Government shall take steps to—

(a) ensure that all their public documents are in accessible formats;

(b) ensure that the filing departments, registry or any other office of records are supplied with necessary equipment to enable filing, storing and referring to the documents and evidence in accessible formats; and

12. (1) மாற்றுத்திறனாளிகள் மாற்றுத்திறனின் அடிப்படையில் வேற்றுமைகாட்டப்படாமல் நீதிமன்றம், தீர்ப்பாயம், அதிகாரஅமைப்பு, ஆணையம் எதனையும் அல்லது நீதித்துறை அல்லது நீதித்துறைப் போல்வு அல்லது புலனாய்வு அதிகாரங்கள் கொண்டிருக்கும் பிற குழுமம் எதனையும் அணுகுவதற்கான உரிமையைப் பயன்படுத்திக்கொள்வதற்கு இயன்றவர்களாக இருக்கின்றனர் என்பதை உரிய அரசு உறுதி செய்தல் வேண்டும். நீதி பெறும் வாய்ப்பு.

(2) உரிய அரசு, மாற்றுத்திறனாளிகளுக்கு, குறிப்பாக, குடும்பத்தை விட்டு வெளியே வாழ்ந்துவருபவர்களுக்கும் மற்றும் சட்ட உரிமைகளைப் பயன்படுத்திக்கொள்வதற்காக உயர் ஆதரவு தேவைப்படும் மாற்றுத்திறனுடையோருக்கும் பொருத்தமான ஆதரவு நடவடிக்கைகளை வழங்குவதற்கு வழிமுறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(3) சட்டப்பணிகள் அதிகாரஅமைப்புகள் சட்டம்,
39/1987. 1987 இன்படி அமைக்கப்பட்ட தேசியச் சட்டப்பணிகள் அதிகாரஅமைப்பும் மாநிலச் சட்டப்பணிகள் அதிகாரஅமைப்புகளும், அவற்றால் வழங்க முன்வரும், தகுமான இணக்கம் உள்ளடங்கலான திட்டம், செயல்திட்டம், வசதி அல்லது சேவை எதையும் மாற்றுத்திறனாளிகள் பிறருக்குச் சமமாக அணுகும்வாய்ப்புக் கொண்டுள்ளனரா என்பதை உறுதி செய்வதற்கு வகையங்கள் செய்தல் வேண்டும்.

(4) உரிய அரசு,–

(அ) தம் பொது ஆவணங்கள் அனைத்தும் அணுகத்தக்க வடிவங்களில் உள்ளன என்பதை உறுதி செய்வதற்கும்;

(ஆ) அணுகத்தக்க வடிவங்களில் ஆவணங்களையும் சான்றையும் முன்னிடுவதற்கும் சேகரித்துவைப்பதற்கும் எடுத்துப்பார்ப்பதற்கும் இயல்விக்கும்பொருட்டுப் பதிவு செய்யும் துறைகள், பதிவகம் அல்லது பிற பதிவேட்டுஅலுவலகம் எதற்கும், தேவையான சாதனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதை உறுதி செய்வதற்கும்; மற்றும்

(c) make available all necessary facilities and equipment to facilitate recording of testimonies, arguments or opinion given by persons with disabilities in their preferred language and means of communication.

Legal capacity.

13. (1) The appropriate Government shall ensure that the persons with disabilities have right, equally with others, to own or inherit property, movable or immovable, control their financial affairs and have access to bank loans, mortgages and other forms of financial credit.

(2) The appropriate Government shall ensure that the persons with disabilities enjoy legal capacity on an equal basis with others in all aspects of life and have the right to equal recognition everywhere as any other person before the law.

(3) When a conflict of interest arises between a person providing support and a person with disability in a particular financial, property or other economic transaction, then such supporting person shall abstain from providing support to the person with disability in that transaction:

Provided that there shall not be a presumption of conflict of interest just on the basis that the supporting person is related to the person with disability by blood, affinity or adoption.

(4) A person with disability may alter, modify or dismantle any support arrangement and seek the support of another:

(இ) மாற்றுத்திறனாளிகளால் கொடுக்கப்படும் சான்றுரைகள், வாதுரைகள் அல்லது கருத்து இவற்றை அவர்கள் விரும்பித்தேர்வுசெய்யும் மொழியிலும் செய்தித்தொடர்பு வழிமுறையிலும் பதிவு செய்வதற்கு, உதவிடத் தேவையான வசதிகள் மற்றும் சாதனங்கள் அனைத்தும் கிடைக்கச் செய்வதற்கும்,

நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

13. (1) உரிய அரசு, மாற்றுத்திறனாளிகள், அசையும் அல்லது அசையாச் சொத்தினைச் சொந்தமாக வைத்துக்கொள்வதற்கு அல்லது வாரிசுரிமை வழி அடைவதற்கு, தங்கள் நிதிநிலை அலுவற்பாடுகளைக் கட்டாள்கை செய்வதற்கு, பிறருக்குச் சமமாக உரிமைகொண்டிருக்கின்றனரா என்பதையும் வங்கிப் பெறுகடன்கள், அடைமானங்கள் மற்றும் பிற நிதிசார் கடன் வகைகளுக்கு வாய்ப்பு கொண்டிருக்கின்றனரா என்பதையும் உறுதி செய்தல் வேண்டும். சட்டமுறைத் தகுநிலை.

(2) உரிய அரசு, மாற்றுத்திறனாளிகள் வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் பிறருக்குச் சரிசமமான அடிப்படையில் சட்டமுறைத் தகுநிலையைத் துய்த்துவருகின்றனரா என்பதையும் மற்றும் சட்டத்தின் முன்பு பிற நபர் எவரையும் போன்று எங்கும் சமமான ஏற்பளிப்பிற்கான உரிமை கொண்டிருக்கின்றனரா என்பதையும் உறுதி செய்தல் வேண்டும்.

(3) ஒரு குறிப்பான நிதிசார் சொத்து அல்லது பிற பொருளியல் நடவடிக்கையில் ஆதரவளிக்கும் ஒருவருக்கும் மாற்றுத்திறனாளி ஒருவருக்கும் இடையே ஒரு முரண்பட்ட உரித்தம் எழும்போது, அத்தகைய ஆதரவளிக்கும் நபர் அந்த நடவடிக்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஆதரவளிப் பதிலிருந்து விலகியிருத்தல் வேண்டும்:

**வரம்புரையாக:** ஆதரவளிப்பவர் இரத்த உறவு, மணவழி உறவு, அல்லது மகவேற்பு உறவு வழி மாற்றுத்திறனாளிக்கு உறவினராக இருக்கிற அடிப்படையினாலேயே முரண்பட்ட உரித்தம் பற்றிய ஒரு துணிபு இருத்தல் ஆகாது.

(4) ஒரு மாற்றுத்திறனாளி, ஆதரவு ஏற்பாடு எதனையும் மாற்றம் செய்யலாம், மாற்றமைவு செய்யலாம் அல்லது அகற்றலாம் மற்றும் வேறொருவரின் ஆதரவை நாடலாம்:

Provided that such alteration, modification or dismantling shall be prospective in nature and shall not nullify any third party transaction entered into by the person with disability with the aforesaid support arrangement.

(5) Any person providing support to the person with disability shall not exercise undue influence and shall respect his or her autonomy, dignity and privacy.

Provision for guardianship.

14. (1) Notwithstanding anything contained in any other law for the time being in force, on and from the date of commencement of this Act, where a district court or any designated authority, as notified by the State Government, finds that a person with disability, who had been provided adequate and appropriate support but is unable to take legally binding decisions, may be provided further support of a limited guardian to take legally binding decisions on his behalf in consultation with such person, in such manner, as may be prescribed by the State Government:

Provided that the District Court or the designated authority, as the case may be, may grant total support to the person with disability requiring such support or where the limited guardianship is to be granted repeatedly, in which case, the decision regarding the support to be provided shall be reviewed by the Court or the designated authority, as the case may be, to determine the nature and manner of support to be provided.

***Explanation*.**—For the purposes of this sub-section, "limited guardianship" means a system of joint decision which operates on mutual understanding and trust between the guardian and the person with disability, which shall be limited to a specific period and for specific decision and situation and shall operate in accordance to the will of the person with disability.

**வரம்புரையாக:** அத்தகைய மாற்றம், மாற்றமைவு அல்லது அகற்றுதல் பின்மேவுறும் தன்மையுடையதாக இருத்தல் வேண்டும்; மற்றும் மேற்சொன்ன ஆதரவு ஏற்பாட்டைக்கொண்டு மாற்றுத்திறனாளியால் செய்துகொள்ளப்பட்ட மூன்றாம் தரப்பினர் நடவடிக்கை எதனையும் இல்லாநிலையதாக்காது.

(5) மாற்றுத்திறனாளிக்கு ஆதரவளிக்கும் நபர் எவரும் தகாத செல்வாக்கைப் பயன்படுத்துதல் ஆகாது; மற்றும் அவனுடைய அல்லது அவளுடைய தன்னுரிமை, மாண்பு, தனிமைநிலை ஆகியவற்றை மதித்தல் வேண்டும்.

காப்பாண்–மைக்கான வகையம்.

14. (1) அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்றும் அது முதற்கொண்டும், மாநில அரசால் அறிவிக்கை செய்யப்பட்டவாறான, ஒரு மாவட்ட நீதிமன்றம் அல்லது பெயர்குறித்தமர்த்தப்பட்ட அதிகாரஅமைப்பு எதுவும், மாற்றுத்திறனாளி ஒருவருக்குப் போதுமான மற்றும் உரிய ஆதரவு வழங்கப்பட்டிருந்து, ஆனால், சட்டத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட முடிவுகள் எடுக்க இயலாதிருக்கிறார் என்று முடிவு செய்கிறவிடத்து, அவர் சார்பாகச் சட்டத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட முடிவுகளை எடுப்பதற்கு, அத்தகைய நபருடன் கலந்தாய்ந்து மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய முறையில், ஒரு வரையறுக்கப்பட்ட காப்பாளரின் கூடுதல் ஆதரவு வழங்கப்படலாம்:

**வரம்புரையாக:** நேர்வுக்கேற்ப, மாவட்ட நீதிமன்றமோ அல்லது பெயர்குறித்தமர்த்தப்பட்ட அதிகாரஅமைப்போ, முழுமையான ஆதரவு தேவைப்படும் மாற்றுத்திறனாளிக்கு அத்தகைய முழுமையான ஆதரவை வழங்கலாம் அல்லது வரையறுக்கப்பட்ட காப்பாண்மை மீண்டும் மீண்டும் வழங்கப்பட வேண்டியவிடத்து, அந்த நேர்வில், வழங்கப்படவேண்டிய ஆதரவு பொறுத்த முடிபானது வழங்கப்படவேண்டிய ஆதரவின் தன்மையையும் முறையையும் தீர்மானிக்கும் பொருட்டு, நேர்வுக்கேற்ப, நீதிமன்றத்தாலோ அல்லது பெயர்குறித்தமர்த்தப்பட்ட அதிகாரஅமைப்பாலோ மறுஆய்வு செய்யப்படுதல் வேண்டும்.

**விளக்கம்.–** இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்கு, "வரையறுக்கப்பட்ட காப்பாண்மை" என்பது, காப்பாளருக்கும் மாற்றுத்திறனாளிக்கும் இடையே ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளுதல் மற்றும் நம்பிக்கையின் பேரில் செயல்படுவதான ஒரு கூட்டு முடிபு முறை என்று பொருள்படும், அது ஒரு குறித்துரைக்கப்பட்ட காலஅளவுக்கும் மற்றும் குறித்துரைக்கப்பட்ட முடிபுக்கும் நிலைமைக்கும் வரையறுக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது மாற்றுத்திறனாளியின் விருப்பத்தின்படி செயல்படுதல் வேண்டும்.

(2) On and from the date of commencement of this Act, every guardian appointed under any provision of any other law for the time being in force, for a person with disability shall be deemed to function as a limited guardian.

(3) Any person with disability aggrieved by the decision of the designated authority appointing a legal guardian may prefer an appeal to such appellate authority, as may be notified by the State Government for the purpose.

Designation of authorities to support.

**15.** (1) The appropriate Government shall designate one or more authorities to mobilise the community and create social awareness to support persons with disabilities in exercise of their legal capacity.

(2) The authority designated under sub-section (*1*) shall take measures for setting up suitable support arrangements to exercise legal capacity by persons with disabilities living in institutions and those with high support needs and any other measures as may be required.

## CHAPTER III

## EDUCATION

Duty of educational institutions.

16. The appropriate Government and the local authorities shall endeavour that all educational institutions funded or recognised by them provide inclusive education to the children with disabilities and towards that end shall—

(2) இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்றும் அது முதற்கொண்டும், அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதனின் வகையம் எதன்படியும் மாற்றுத்திறனாளி ஒருவருக்காக அமர்த்தப்பெற்ற காப்பாளர் ஒவ்வொருவரும், ஒரு வரையறுக்கப்பட்ட காப்பாளராகச் செயல்படுவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) ஒரு சட்டப்படியான காப்பாளரை அமர்த்தும் பெயர்குறித்தமர்த்தப்பெற்ற அதிகாரஅமைப்பின் முடிபினால் குறையுற்ற மாற்றுத்திறனாளி எவரும், அந்த நோக்கத்திற்காக மாநில அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் அத்தகைய மேல்முறையீட்டு அமைப்பிடம் மேல்முறையீடு ஒன்றைக் கொண்டு வரலாம்.

ஆதரவளிப்–பதற்கான அதிகார அமைப்புகளைப் பெயர்குறித்–தமர்த்துதல்.

15. (1) உரிய அரசு, மாற்றுத்திறனாளிகளின் சட்டமுறைத் தகுநிலையைச் செலுத்துவதற்கு அவர்களுக்கு ஆதரவளிப்பதற்கு, சமுதாயத்தை ஒன்றுசேர்த்து சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரஅமைப்புகளைப் பெயர்குறித்தமர்த்துதல் வேண்டும்.

(2) நிறுவனங்களில் வாழ்பவர்களும் மற்றும் உயர் ஆதரவுத் தேவைகளுடன் இருப்பவர்களுமான மாற்றுத்திறனாளிகளால் சட்டத் தகுநிலையைச் செலுத்துவதற்குப் பொருத்தமான ஆதரவு ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும் மற்றும் தேவைப்படலாகும் பிற நடவடிக்கைகள் எதற்காகவும் (1) ஆம் உட்பிரிவின்படி பெயர்குறித்தமர்த்தப்பட்ட அதிகாரஅமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## அத்தியாயம் III
## கல்வி

கல்வி நிறுவனங்களின் கடமை.

16. உரிய அரசும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளும் தங்களால் நிதியுதவி அளிக்கப்படும் அல்லது ஏற்பளிக்கப்பட்டுள்ள அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் மாற்றுதிறனுடைய சிறார்களுக்கு உள்ளடக்கிய கல்வி வழங்கப்படுவதற்கு முனைந்து முயலுதல் வேண்டும்; மற்றும் அந்த நோக்கத்தின் பொருட்டு–

(i) admit them without discrimination and provide education and opportunities for sports and recreation activities equally with others;

(ii) make building, campus and various facilities accessible;

(iii) provide reasonable accommodation according to the individual's requirements;

(iv) provide necessary support individualized or otherwise in environments that maximise academic and social development consistent with the goal of full inclusion;

(v) ensure that the education to persons who are blind or deaf or both is imparted in the most appropriate languages and modes and means of communication;

(vi) detect specific learning disabilities in children at the earliest and take suitable pedagogical and other measures to overcome them;

(vii) monitor participation, progress in terms of attainment levels and completion of education in respect of every student with disability;

(viii) provide transportation facilities to the children with disabilities and also the attendant of the children with disabilities having high support needs.

(i) வேற்றுமைகாட்டாமல் அவர்களைச் சேர்த்துக்கொண்டு பிறருக்குச் சரிசமமாகக் கல்விக்கும் விளையாட்டுகள் மற்றும் இன்பப்பொழுதுபோக்குச் செயல்பாடுகளுக்கான வாய்ப்புகளுக்கும் வகை செய்தல்;

(ii) கட்டிடம், வளாகம் மற்றும் பல்வேறு வசதிகளையும் அணுகக்கூடியதாக்குதல்;

(iii) தனிநபரின் தேவைகளுக்கேற்ப, தகுமான இணக்கத்திற்கு வகைசெய்தல்;

(iv) முழுமையாக உள்ளடக்கும் இலக்கிற்கு இயைந்த வகையில் கல்வி மற்றும் சமுதாய மேம்பாட்டை மிகுதிபடுத்தும் சூழல்களில் தனிப்பட்டதாகவோ அல்லது பிறவாறாகவோ தேவையான ஆதரவுக்கு வகைசெய்தல்;

(v) பார்வையற்றவர்களாகவோ காதுகேளாதவர்களாகவோ அல்லது அவ்விருவிதமாகவோ இருக்கிறவர்களுக்கு மிகப் பொருத்தமான மொழிகளிலும் முறைகளிலும் மற்றும் செய்தித் தொடர்பிற்கான வழிமுறைகளிலும் கல்வி புகட்டப்படுகிறது என்பதை உறுதி செய்தல்;

(vi) சிறார்களிடம் உள்ள குறிப்பிட்ட கற்றல் மாற்றுத்திறன்களைத் தொடக்கத்திலேயே கண்டறிந்து அவற்றிலிருந்து மேலெழ பொருத்தமான கற்பிக்கும்முறையையும் மற்றும் பிற நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்;

(vii) மாற்றுத்திறனுடைய மாணவர் ஒவ்வொருவரது பங்களிப்பையும் எய்தப்பெற்ற நிலைகள் பொறுத்த முன்னேற்றத்தையும் மற்றும் கல்வியை நிறைவு செய்தலையும் தொடர்ந்து கண்காணித்து வருதல்;

(viii) மாற்றுத்திறன்களுடைய சிறார்களுக்கும் அத்துடன் உயர் ஆதரவுத் தேவைகள் கொண்ட மாற்றுத்திறன்களுடைய சிறார்களுக்கு உடனிருந்து உதவுபவர்களுக்கும் கூட போக்குவரத்து வசதிகளுக்கு வகை செய்தல்,

வேண்டும்.

Specific measures to promote and facilitate inclusive education.

17. The appropriate Government and the local authorities shall take the following measures for the purpose of section 16, namely:—

(a) to conduct survey of school going children in every five years for identifying children with disabilities, ascertaining their special needs and the extent to which these are being met:

Provided that the first survey shall be conducted within a period of two years from the date of commencement of this Act;

(b) to establish adequate number of teacher training institutions;

(c) to train and employ teachers, including teachers with disability who are qualified in sign language and Braille and also teachers who are trained in teaching children with intellectual disability;

(d) to train professionals and staff to support inclusive education at all levels of school education;

(e) to establish adequate number of resource centres to support educational institutions at all levels of school education;

17. உரிய அரசும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளும் 16 ஆம் பிரிவின் நோக்கத்திற்காகப் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும், அவையாவன: உள்ளடக்கிய கல்வியை மேம்படுத்துவதற்–கும் முன்னேற உதவுவதற்கும் குறிப்பிட்ட நடவடிக்கைகள்.

(அ) மாற்றுத்திறனுடைய சிறார்களைக் கண்டறிந்து, அவர்களுக்குள்ள தனித் தேவைகளையும், எந்த அளவுக்கு அவை நிறைவு செய்யப்படுகின்றன என்பதையும் அறிந்து கொள்வதற்காக ஒவ்வோர் ஐந்து ஆண்டுகளிலும் பள்ளி செல்லும் சிறார்கள் பற்றிய அளவாய்வு நடத்துதல்:

**வரம்புரையாக:** இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுக் காலஅளவுக்குள் முதல் அளவாய்வு நடத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) போதிய எண்ணிக்கையில் ஆசிரியர் பயிற்சி அமைவனங்களை நிறுவுதல்;

(இ) மாற்றுத்திறனுடைய ஆசிரியர்களை உள்ளடக்கிய ஆசிரியர்களுடன் சைகை மொழியிலும் பிரெய்லி முறையிலும் தகுதிப்பாடுடையவராகவுள்ள அறிவுசார் மாற்றுத்திறனுடைய சிறார்களுக்குக் கல்வி கற்பிப்பதில் பயிற்சிபெற்றவராகவுள்ள ஆசிரியர்கள் உள்ளடங்கலான ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்து பணியமர்த்தம் செய்தல்;

(ஈ) பள்ளிக் கல்வியின் அனைத்து நிலைகளிலும் உள்ளடக்கிய கல்விக்கு ஆதரவளிப்பதற்கு விழைதொழிலர்களுக்கும் பணியாளர்தொகுதியினருக்கும் பயிற்சியளித்தல்;

(உ) பள்ளிக் கல்வியின் அனைத்து நிலைகளிலும் கல்வி நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்குப் போதிய எண்ணிக்கையிலான வளஆதார மையங்களை நிறுவுதல்;

(f) to promote the use of appropriate augmentative and alternative modes including means and formats of communication, Braille and sign language to supplement the use of one's own speech to fulfil the daily communication needs of persons with speech, communication or language disabilities and enables them to participate and contribute to their community and society;

(g) to provide books, other learning materials and appropriate assistive devices to students with benchmark disabilities free of cost up to the age of eighteen years;

(h) to provide scholarships in appropriate cases to students with benchmark disability;

(i) to make suitable modifications in the curriculum and examination system to meet the needs of students with disabilities such as extra time for completion of examination paper, facility of scribe or amanuensis, exemption from second and third language courses;

(j) to promote research to improve learning; and

(k) any other measures, as may be required.

Adult education.

18.The appropriate Government and the local authorities shall take measures to promote, protect and ensure participation of persons with disabilities in adult education and continuing education programmes equally with others.

(ஊ) பேச்சு, செய்தித்தொடர்பு அல்லது மொழி மாற்றுத்திறனுடைய நபர்களின் அன்றாட செய்தித்தொடர்புத் தேவைகளை நிறைவு செய்து அவர்களுடைய கூட்டுக்குழுவிலும் சமுதாயத்திலும் அவர்களைப் பங்குகொள்ளவும் பங்களிக்கவும் இயல்விப்பதற்கு அவர் தமது பேச்சின் பயன்பாட்டைக் கூடுதலாகிக் கொள்வதற்கான செய்தித்தொடர்பு, பிரெய்லி முறை, சைகை மொழி ஆகியவற்றின் வழிகள், வடிவங்கள் உள்ளடங்கலான உரிய பெருக்கும் மற்றும் மாற்றுமுறைகளைப் பயன்படுத்துவதை மேம்படுத்துதல் ;

(எ) குறியீட்டளவு மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்குப் புத்தகங்கள், கற்றலுக்கான பிற பொருள்வகைகள் மற்றும் உதவும் உரிய சாதனங்கள் ஆகியவற்றைப் பதினெட்டு வயது வரையிலும் கட்டணமில்லாமல் வழங்குதல்;

(ஏ) குறியீட்டளவு மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கு உரிய நேர்வுகளில் படிப்புதவித்தொகைகள் வழங்குதல்;

(ஐ) மாற்றுத்திறன்களுடைய மாணவர்களின் தேவைகளை நிறைவுசெய்வதற்குப் பாடத்திட்ட முறையிலும், தேர்வுமுறையிலும், தேர்வுத்தாளை முடிப்பதற்கான மிகை நேரம், எழுத்தர் அல்லது சொல்வதை எழுதுபவர் வசதி, இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழிப் பயிற்சிகளிலிருந்து விலக்களிப்பு போன்ற பொருத்தமான மாற்றமைவுகளைச் செய்தல்;

(ஒ) கல்விகற்றலை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சியை வளர்த்தல்; மற்றும்

(ஓ) தேவைப்படலாகும், பிற நடவடிக்கைகள் எவையும்

18. உரிய அரசும், உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளும் வயது வந்தோர் கல்வியிலும் தொடர்கல்வி செயல்திட்டங்களிலும் மாற்றுத்திறனாளிகள் பிறருக்குச் சமமாகப் பங்குகொள்வதை வளர்த்து, பாதுகாத்து, உறுதி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

வயதுவந்தோர் கல்வி.

## CHAPTER IV

## SKILL DEVELOPMENT AND EMPLOYMENT

Vocational training and self-employment.

19. (1) The appropriate Government shall formulate schemes and programmes including provision of loans at concessional rates to facilitate and support employment of persons with disabilities especially for their vocational training and self-employment.

(2) The schemes and programmes referred to in sub-section (1) shall provide for—

(a) inclusion of person with disability in all mainstream formal and non-formal vocational and skill training schemes and programmes;

(b) to ensure that a person with disability has adequate support and facilities to avail specific training;

(c) exclusive skill training programmes for persons with disabilities with active links with the market, for those with developmental, intellectual, multiple disabilities and autism;

(d) loans at concessional rates including that of microcredit;

(e) marketing the products made by persons with disabilities; and

(f) maintenance of disaggregated data on the progress made in the skill training and self- employment, including persons with disabilities.

## அத்தியாயம் IV
## திறன் மேம்பாடும் வேலைவாய்ப்பும்

உறுதொழில் பயிற்சியும் சுயவேலை வாய்ப்பும்.

19. (1) உரிய அரசு மாற்றுத்திறனாளிகளின் வேலைவாய்ப்பிற்கு குறிப்பாக, அவர்களுக்கு உறுதொழில் பயிற்சிக்கும் சுயவேலைவாய்ப்பிற்கும் வழிவகுத்து ஆதரவளிப்பதற்குச் சலுகை வீதங்களில் பெறுகடன்கள் வழங்குதல் உள்ளடங்கலான திட்டங்களையும் செயல்திட்டங்களையும் வகுத்தமைத்தல் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட திட்டங்களும் செயல்திட்டங்களும்–

(அ) மாற்றுத்திறனாளிகளைப் பொதுவான நடப்பில் உள்ள அனைத்து முறைசார்ந்த மற்றும் முறைசாரா உறுதொழில் மற்றும் திறன்பயிற்சித் திட்டங்களில் மற்றும் செயல்திட்டங்களில் சேர்த்துக்கொள்வதற்கும்;

(ஆ) மாற்றுத்திறனாளியொருவர் குறிப்பிட்ட பயிற்சியைப் பயன்படுத்திக் கொள்வதற்குப் போதுமான ஆதரவும் வசதிகளும் கொண்டிருக்கிறார் என்பதை உறுதி செய்வதற்கும்;

(இ) வளர்ச்சிசார், அறிவுத்திறன்சார், பல்வகை மாற்றுத்திறன் மற்றும் தற்புனைவுஆழ்வுடைய அத்தகைய மாற்றுத்திறனாளிகளுக்கு சந்தையுடன் செயல்பாடுடைய தீவிர தொடர்புடன் தனிப்பட்ட திறன் பயிற்சி செயல்திட்டங்களுக்கும் ;

(ஈ) சலுகை வீதங்களில் குறுகடன் உள்ளடங்கலான பெறுகடன்களுக்கும்;

(உ) மாற்றுத்திறனாளிகளால் செய்யப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்காகவும்; மற்றும்

(ஊ) மாற்றுத்திறனாளிகள் உள்ளடங்கலான திறன் பயிற்சியிலும் சுயவேலைவாய்ப்பிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் மீது பிரித்தெடுக்கப்பட்ட தரவினைப் பேணிவருவதற்கும்,

வகைசெய்தல் வேண்டும்.

Non-discrimination in employment.

20. (1) No Government establishment shall discriminate against any person with disability in any matter relating to employment:

Provided that the appropriate Government may, having regard to the type of work carried on in any establishment, by notification and subject to such conditions, if any, exempt any establishment from the provisions of this section.

(2) Every Government establishment shall provide reasonable accommodation and appropriate barrier free and conducive environment to employees with disability.

(3) No promotion shall be denied to a person merely on the ground of disability.

(4) No Government establishment shall dispense with or reduce in rank, an employee who acquires a disability during his or her service:

Provided that, if an employee after acquiring disability is not suitable for the post he was holding, shall be shifted to some other post with the same pay scale and service benefits:

Provided further that if it is not possible to adjust the employee against any post, he may be kept on a supernumerary post until a suitable post is available or he attains the age of superannuation, whichever is earlier.

(5) The appropriate Government may frame policies for posting and transfer of employees with disabilities.

20. (1) அரசு நிறுவனம் எதுவும் வேலைவாய்ப்புத் தொடர்பான பொருட்பாடு எதிலும் மாற்றுத்திறனாளி எவருக்கும் எதிராக வேற்றுமை காட்டுதல் ஆகாது: வேலைவாய்ப்பில் வேற்றுமை காட்டாமை.

**வரம்புரையாக:** உரிய அரசு, எந்தவொரு நிறுவனத்திலும் நடத்திவரப்படும் தொழிலின் வகையைக் கருத்தில் கொண்டு, அறிவிக்கை வாயிலாக மற்றும் வரைக்கட்டுகள் எவையேனுமிருப்பின், அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு, எந்தவொரு நிறுவனத்திற்கும் இந்தப் பிரிவின் வகையங்களிலிருந்து விலக்களிக்கலாம்.

(2) அரசு நிறுவனம் ஒவ்வொன்றும், மாற்றுத்திறனுடைய பணியாளர்களுக்குத் தகுமான இணக்கமாகப்போகும் மனப்பான்மையையும் உரிய தடையூறற்ற மற்றும் உகந்த சூழலையும் வகைசெய்தல் வேண்டும்.

(3) மாற்றுத்திறன் காரணமாக மட்டுமே ஒருவருக்குப் பணிஉயர்வு மறுக்கப்படுதல் ஆகாது.

(4) அரசு நிறுவனம் எதுவும் பணியின்போது மாற்றுத்திறன் ஒன்றை அடைகிற பணியாளரைத் தேவையில்லையென்று முடிவுசெய்தலோ அல்லது படிநிலையில் குறைத்தலோ ஆகாது:

**வரம்புரையாக:** பணியாளர் ஒருவர் மாற்றுத்திறன் அடைந்த பின்பு, அவர் வகித்து வந்த பதவிக்குப் பொருத்தமானவராக இல்லாதிருப்பாராயின், அவர் அதே சம்பள வீதத்துடனும் பணி நலப்பயன்களுடனும் வேறொரு பதவிக்கு மாற்றப்படுதல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக:** பணியாளரை எந்தவொரு பதவிக்கும் நேரமைவு செய்துகொள்ள இயலாதிருப்பின், அவருக்குப் பொருத்தமானதொரு பதவி கிட்டும்வரை அல்லது அவர் அகவை முதிர்வு எய்தும் வரை, இவற்றில் எது முந்தியதோ அதுவரை, அவர், மிகைப் பதவியிடம் ஒன்றில் தொடர்ந்து பணியில் வைத்துக் கொள்ளப்படலாம்.

(5) உரிய அரசு. மாற்றுத்திறன்களுடைய பணியாளர்களின் அமர்த்தத்திற்கும் பணிமாறுதலுக்கும் கொள்கைகளை வனையலாம்.

Equal opportunity policy.

21. (1) Every establishment shall notify equal opportunity policy detailing measures proposed to be taken by it in pursuance of the provisions of this Chapter in the manner as may be prescribed by the Central Government.

(2) Every establishment shall register a copy of the said policy with the Chief Commissioner or the State Commissioner, as the case may be.

Maintenance of records.

22. (1) Every establishment shall maintain records of the persons with disabilities in relation to the matter of employment, facilities provided and other necessary information in compliance with the provisions of this Chapter in such form and manner as may be prescribed by the Central Government.

(2) Every employment exchange shall maintain records of persons with disabilities seeking employment.

(3) The records maintained under sub-section (1) shall be open to inspection at all reasonable hours by such persons as may be authorised in their behalf by the appropriate Government.

Appointment of Grievance Redressal Officer.

23. (1) Every Government establishment shall appoint a Grievance Redressal Officer for the purpose of section 19 and shall inform the Chief Commissioner or the State Commissioner, as the case may be, about the appointment of such officer.

(2) Any person aggrieved with the non-compliance of the provisions of section 20, may file a complaint with the Grievance Redressal Officer, who shall investigate it and shall take up the matter with the establishment for corrective action.

21. (1) ஒவ்வொரு நிறுவனமும், மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் முறையில் இந்த அத்தியாயத்தின் வகையங்களைப் பின்பற்றித் தன்னால் எடுக்கப்படக் கருதியுள்ள நடவடிக்கைகளை விவரித்துச் சம வாய்ப்புக் கொள்கையை அறிவிக்கை செய்தல் வேண்டும். சம வாய்ப்புக் கொள்கை.

(2) ஒவ்வொரு நிறுவனமும் மேற்சொன்ன கொள்கையின் படியொன்றை, நேர்வுக்கேற்ப, தலைமை ஆணையரிடம் அல்லது மாநில ஆணையரிடம் பதிவு செய்தல் வேண்டும்.

22. (1) ஒவ்வொரு நிறுவனமும் மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வடிவத்திலும் முறையிலும் இந்த அத்தியாயத்தின் வகையங்களுக்கிணங்க, வேலைவாய்ப்பு, வழங்கப்பட்டுள்ள வசதிகள் மற்றும் தேவையான பிற தகவல் குறித்த பொருட்பாடு தொடர்பாக மாற்றுத்திறனாளிகள் பற்றிய பதிவணங்களைப் பேணி வருதல் வேண்டும். பதிவணங்களைப் பேணிவருதல் .

(2) ஒவ்வொரு வேலைவாய்ப்பகமும் வேலைவாய்ப்பு நாடுகிற மாற்றுத்திறனாளிகள் பற்றிய பதிவணங்களைப் பேணி வருதல் வேண்டும்.

(3). (1) ஆம் உட்பிரிவின்படி பேணிவரப்படும் பதிவணங்கள் உரிய அரசால் அதன் சார்பாக அதிகாரமளிக்கப்படலாகிற அத்தகைய நபர்களால் ஆய்வுசெய்யப்படுவதற்கு அனைத்து தகுமான நேரங்களிலும் பார்வைக்குப் பொதுவில் வைக்கப்படுதல் வேண்டும்.

23. (1) ஒவ்வோர் அரசு நிறுவனமும் 19ஆம் பிரிவின் நோக்கத்திற்காகக் குறை தீர்க்கும் அலுவலர் ஒருவரை அமர்த்துதல் வேண்டும் மற்றும் அத்தகைய அலுவலரின் அமர்த்தம் குறித்து, நேர்வுக்கேற்ப, தலைமை ஆணையருக்கு அல்லது மாநில ஆணையருக்குத் தெரிவித்தல் வேண்டும். குறை தீர்க்கும் அலுவலரை அமர்த்துதல்.

(2) 20 ஆம் பிரிவின் வகையங்களுக்கு இணங்கி நடக்கப்படாததால் குறையுற்ற நபர் எவரும், குறை தீர்க்கும் அலுவலரிடம் முறையீடு ஒன்றை முன்னிடலாம், அவர் அதனைப் புலனாய்வு செய்து அந்தப் பொருட்பாட்டினைத் திருத்த, நடவடிக்கைக்காக நிறுவனத்தின் கவனத்திற்கு எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

(3) The Grievance Redressal Officer shall maintain a register of complaints in the manner as may be prescribed by the Central Government, and every complaint shall be inquired within two weeks of its registration.

(4) If the aggrieved person is not satisfied with the action taken on his or her complaint, he or she may approach the District-Level Committee on disability.

## CHAPTER V

## SOCIAL SECURITY, HEALTH, REHABILITATION AND RECREATION

Social security.

24. (1) The appropriate Government shall within the limit of its economic capacity and development formulate necessary schemes and programmes to safeguard and promote the right of persons with disabilities for adequate standard of living to enable them to live independently or in the community:

Provided that the quantum of assistance to the persons with disabilities under such schemes and programmes shall be at least twenty-five per cent. higher than the similar schemes applicable to others.

(2) The appropriate Government while devising these schemes and programmes shall give due consideration to the diversity of disability, gender, age, and socio-economic status.

(3) The schemes under sub-section (1) shall provide for,—

(3) குறை தீர்க்கும் அலுவலர் மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் முறையில் முறையீடுகள் பதிவேடு ஒன்றைப் பேணி வருதல் வேண்டும் மற்றும் ஒவ்வொரு முறையீடும் அது பதிவு செய்யப்பட்டதிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் விசாரணை செய்யப்படுதல் வேண்டும்.

(4) குறையுற்ற நபர் தன்னுடைய முறையீட்டின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையில் மனநிறைவடைய வில்லையாயின், அவன் அல்லது அவள் மாற்றுத்திறனுக்கான மாவட்டநிலைக் குழுவினை அணுகலாம்.

## அத்தியாயம் V
## சமூகப் பாதுகாப்பு, நல்வாழ்வு, மறுவாழ்வளிப்பு மற்றும் இன்பப்பொழுதுபோக்கு

சமூகப் பாதுகாப்பு.

24. (1) உரிய அரசு, அதன் பொருளியல் தகுநிலை மற்றும் வளர்ச்சியின் வரம்புகளுக்கு உட்பட்டு மாற்றுத்திறனாளிகளைத் தற்சார்பாகவோ அல்லது சமுதாயத்திற்குள்ளேயோ வாழ்வதற்கு இயல்விக்கும் பொருட்டுப் போதிய வாழ்க்கைத் தரத்திற்கான அவர்களின் உரிமையை நலங்காத்து மேம்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களையும் செயல்திட்டங்களையும் வகுத்தமைத்தல் வேண்டும்:

**வரம்புரையாக:** அத்தகைய திட்டங்கள் மற்றும் செயல்திட்டங்கள்வழி மாற்றுத்திறனாளிகளுக்குரிய உதவியின் அளவானது, பிறருக்குப் பொருந்தத்தக்க அதுபோன்ற திட்டங்களுக்கானதைவிட குறைந்தது இருபத்தைந்து விழுக்காடேனும் அதிகமாக இருத்தல் வேண்டும்.

(2) உரிய அரசு, இந்தத் திட்டங்களையும் செயல்திட்டங்களையும் திட்டமிடுகையில் மாற்றுத்திறன், பாலினம், வயது மற்றும் சமூகப் பொருளியல் படிநிலை வேறுபாடுகளை உரியவாறு ஓர்வுக்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

(3). (1) ஆம் உட்பிரிவின்படியான திட்டங்கள்,–

(a) community centres with good living conditions in terms of safety, sanitation, health care and counselling;

(b) facilities for persons including children with disabilities who have no family or have been abandoned, or are without shelter or livelihood;

(c) support during natural or man-made disasters and in areas of conflict;

(d) support to women with disability for livelihood and for upbringing of their children;

(e) access to safe drinking water and appropriate and accessible sanitation facilities especially in urban slums and rural areas;

(f) provisions of aids and appliances, medicine and diagnostic services and corrective surgery free of cost to persons with disabilities with such income ceiling as may be notified;

(g) disability pension to persons with disabilities subject to such income ceiling as may be notified;

(h) unemployment allowance to persons with disabilities registered with Special Employment Exchange for more than two years and who could not be placed in any gainful occupation;

(i) care-giver allowance to persons with disabilities with high support needs;

(அ) இடர்காப்பு, துப்புரவு, உடல்நலக் காப்பு, கலந்தாய்வு ஆகியவற்றின் அடிப்படையில் நல்வாழ்க்கைத் தரங்களுடன் கூடிய சமுதாய மையங்களுக்கு ;

(ஆ) குடும்பம் இல்லாதிருக்கிற அல்லது குடும்பத்தால் கைவிடப்பட்டிருக்கிற அல்லது தங்குமிடமோ வாழ்வாதாரமோ இல்லாதிருக்கிற மாற்றுத்திறன்களுடைய சிறார்கள் உள்ளடங்கலான நபர்களுக்கான வசதிகளுக்கு;

(இ) இயற்கையான அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்ட பேரிடர்களின் போதும் மற்றும் கலகப் பகுதிகளிலும் ஆதரவுக்கு;

(ஈ) மாற்றுத்திறனுடைய பெண்களின் வாழ்வாதாரத்திற்கும் மற்றும் அவர்களுடைய குழந்தைகளை வளர்ப்பதற்கான ஆதரவுக்கும்;

(உ) முக்கியமாக, நகரகக் குடிசைப் பகுதிகளிலும் ஊரகப்பகுதிகளிலும் பாதுகாப்பான குடிநீருக்கும் தகுந்த மற்றும் அணுகத்தக்க துப்புரவு வசதிகளுக்கும் ;

(ஊ) அறிவிக்கை செய்யப்படலாகும் அத்தகைய வருமான உச்சவரம்புக்கு உட்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்குக் கட்டணமில்லாமல் கருவிகள் மற்றும் துணைக்கருவிகள், மருந்து மற்றும் நோய்கண்டறியும் சேவைகள் மற்றும் சீர்செய்யும் அறுவைச்சிகிச்சை ஆகியவற்றை வழங்குவதற்கு;

(எ) அறிவிக்கை செய்யப்படலாகும் அத்தகைய வருமான உச்சவரம்பிற்கு உட்பட்டு, மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளி உதவித் தொகை வழங்குவதற்கு;

(ஏ) சிறப்பு வேலைவாய்ப்பகத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பதிவு செய்தும் ஆதாயமுள்ள வாழ்தொழில் எதிலும் பணியமர்த்தம் பெறுவதற்கு இயலாமல்போன மாற்றுத் திறனாளிகளுக்கு வேலையின்மைப் படித்தொகை வழங்குவதற்கு ;

(ஐ) உயர் ஆதரவு தேவைப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கு காப்புஅளிப்பவர் படித்தொகைக்கு;

(j) comprehensive insurance scheme for persons with disability, not covered under the Employees State Insurance Schemes, or any other statutory or Government-sponsored insurance schemes;

(k) any other matter which the appropriate Government may think fit.

Healthcare.

25. (1) The appropriate Government and the local authorities shall take necessary measures for the persons with disabilities to provide,—

(a) free healthcare in the vicinity specially in rural area subject to such family income as may be notified;

(b) barrier -free access in all parts of Government and private hospitals and other healthcare institutions and centres;

(c) priority in attendance and treatment.

(2) The appropriate Government and the local authorities shall take measures and make schemes or programmes to promote healthcare and prevent the occurrence of disabilities and for the said purpose shall—

(a) undertake or cause to be undertaken surveys, investigations and research concerning the cause of occurrence of disabilities;

(b) promote various methods for preventing disabilities;

(c) screen all the children at least once in a year for the purpose of identifying "at-risk" cases;

(ஒ) தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டங்களிலோ அல்லது பிற சட்டமுறை அல்லது அரசால் ஊக்க ஆதரவளிக்கப்படும் காப்பீட்டுத் திட்டங்கள் எதிலுமோ உள்ளடங்காத, மாற்றுத்திறனாளிகளுக்கான விரிவான காப்பீட்டுத் திட்டத்திற்கு;

(ஓ) உரிய அரசு பொருத்தமெனக் கருதுதலாகும் பிற பொருட்பாடு எதற்கும்

வகை செய்தல் வேண்டும்.

25. (1) உரிய அரசும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளும், மாற்றுத்திறனாளிகளுக்கு,– உடல்நலக்காப்பு.

(அ) சுற்றுப்புறத்தில், முக்கியமாக ஊரகப் பகுதியில், அறிவிக்கை செய்யப்படலாகும் அத்தகைய குடும்ப வருமானத்திற்கு உட்பட்டு, இலவச உடல்நலக்காப்பிற்கும்;

(ஆ) அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளின் மற்றும் பிற உடல்நலக்காப்பு அமைவனங்கள் மற்றும் மையங்களின் அனைத்துப் பகுதிகளிலும் தடையூறற்ற அணுகும் வாய்ப்பிற்கும்;

(இ) கவனிப்பு மற்றும் சிகிச்சையில் முன்னுரிமைக்கும்,

வகைசெய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(2) உரிய அரசும், உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளும் உடல்நலக்காப்பை மேம்படுத்துவதற்கும் மாற்றுத்திறன்கள் ஏற்படாமல் தடுப்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும், திட்டங்களை அல்லது செயல்திட்டங்களை வகுத்தலும் வேண்டும் மற்றும் மேற்சொன்ன நோக்கத்திற்காக–

(அ) மாற்றுத்திறன்கள் ஏற்படுவதன் காரணம் தொடர்பாக அளவாய்வுகள், புலனாய்வுகள் மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளவும் அல்லது மேற்கொள்ளச் செய்வித்தலுக்கும்;

(ஆ) மாற்றுத்திறன்களைத் தடுப்பதற்கான பல்வேறு முறைகளை மேம்படுத்துதலுக்கும்;

(இ) "ஆபத்திலுள்ள" நோயுற்றோரைக் கண்டறியும் நோக்கத்திற்காக குறைந்தது ஆண்டிற்கு ஒரு முறையேனும் அனைத்துச் சிறார்களையும் சோதனை செய்தலுக்கும்;

(d) provide facilities for training to the staff at the primary health centres;

(e) sponsor or cause to be sponsored awareness campaigns and disseminate or cause to be disseminated information for general hygiene, health and sanitation;

(f) take measures for pre-natal, perinatal and post-natal care of mother and child;

(g) educate the public through the pre-schools, schools, primary health centres, village level workers and anganwadi workers;

(h) create awareness amongst the masses through television, radio and other mass media on the causes of disabilities and the preventive measures to be adopted;

(i) healthcare during the time of natural disasters and other situations of risk;

(j) essential medical facilities for life saving emergency treatment and procedures; and

(k) sexual and reproductive healthcare especially for women with disability.

Insurance schemes.

26. The appropriate Government shall, by notification, make insurance schemes for their employees with disabilities.

(ஈ) ஆரம்ப சுகாதார மையங்களிலுள்ள பணியாளர் தொகுதியினருக்குப் பயிற்சிக்களுக்கான வசதிகளை வழங்குதலுக்கும்;

(உ) பொதுசுகாதாரப் பேணுகை, நல்வாழ்வு மற்றும் துப்புரவு ஆகியவற்றிற்கான விழிப்புணர்வு இயக்கத்திற்கு ஆதரவளித்தலுக்கோ அல்லது ஆதரவளிக்கச் செய்வித்தலுக்கோ மற்றும் தகவல் பரப்புதலுக்கோ அல்லது பரப்பச் செய்வித்தலுக்கோ;

(ஊ) பேறுகாலத்திற்கு முந்தைய, பேறுகாலத்தின்போது மற்றும் பேறுகாலத்திற்கு பிந்தைய தாய் சேய் காப்பிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதலுக்கும்;

(எ) மழலையர் பள்ளிகள், பள்ளிகள், ஆரம்ப சுகாதார மையங்கள், கிராமப்புறப் பணியாளர்கள் மற்றும் *அங்கன்வாடிப்* பணியாளர்கள் மூலமாக பொதுமக்களுக்குக் கல்வி கற்பித்தலுக்கும்;

(ஏ) மாற்றுத்திறன்களுக்கான காரணங் களையும் மேற்கொள்ளப்படவேண்டிய தடுப்பு நடவடிக்கைகளையும் தொலைக்காட்சி, வானொலி மற்றும் பிற மக்கட்தொடர்பு ஊடகங்கள் மூலமாகப் பொதுமக்களிடையே விழிப்புணர்வை உருவாக்குதலுக்கும்;

(ஐ) இயற்கைப் பேரிடர்கள் காலத்தின்போதும் பிற ஆபத்துச் சூழல்களின்போதும் உடல்நலக்காப்புக்கும்;

(ஒ) உயிர் காக்கும் அவசர மருத்துவச் சிகிச்சை மற்றும் மருத்துவ முறைகளுக்கான இன்றியமையாத மருத்துவ வசதிகளுக்கும்; மற்றும்

(ஓ) முக்கியமாக, மாற்றுத்திறனுடைய பெண்களுக்குப் பாலியல் மற்றும் மக்கட்பேறு உடல்நலக் காப்பு வழங்குதலுக்கும்,

வகைசெய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

காப்பீட்டுத் திட்டங்கள்.

26. உரிய அரசு, அறிவிக்கை வாயிலாக மாற்றுத்திறனுடைய அதன் பணியாளர்களுக்காகக் காப்பீட்டுத் திட்டங்களை உருவாக்குதல் வேண்டும்.

Rehabilitation.

27. (1) The appropriate Government and the local authorities shall within their economic capacity and development, undertake or cause to be undertaken services and programmes of rehabilitation, particularly in the areas of health, education and employment for all persons with disabilities.

(2) For the purposes of sub-section (1), the appropriate Government and the local authorities may grant financial assistance to non-Governmental Organisations.

(3) The appropriate Government and the local authorities, while formulating rehabilitation policies shall consult the non-Governmental Organisations working for the cause of persons with disabilities.

Research and development.

28.The appropriate Government shall initiate or cause to be initiated research and development through individuals and institutions on issues which shall enhance habilitation and rehabilitation and on such other issues which are necessary for the empowerment of persons with disabilities.

Culture and recreation.

29.The appropriate Government and the local authorities shall take measures to promote and protect the rights of all persons with disabilities to have a cultural life and to participate in recreational activities equally with others which include,—

(a) facilities, support and sponsorships to artists and writers with disability to pursue their interests and talents;

(b) establishment of a disability history museum which chronicles and interprets the historical experiences of persons with disabilities;

27. (1) உரிய அரசும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளும் அவற்றின் பொருளியல் தகுநிலை மற்றும் வளர்ச்சிநிலைக்கு உட்பட்டு, மாற்றுத்திறனாளிகள் அனைவருக்குமான, குறிப்பாக நல்வாழ்வு, கல்வி வேலைவாய்ப்பு ஆகிய துறைகளில் மறுவாழ்வளிப்பதற்கான பணிகளும் செயல்திட்டங்களும் மேற்கொள்ளுதலோ அல்லது மேற்கொள்ளச் செய்வித்தலோ வேண்டும். மறு வாழ்வளிப்பு.

(2). (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, உரிய அரசும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளும் அரசுசாரா அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்கலாம்.

(3) உரிய அரசும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளும், மறுவாழ்வளிப்புக் கொள்கைகளை வகுக்கையில் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக இயங்கிவரும் அரசுசாரா அமைப்புகளுடன் கலந்தாய்வு செய்தல் வேண்டும்.

28. உரிய அரசு, மாற்றுத் திறனாளிகளுக்கு வாழ்வளித்தல் மறுவாழ்வளித்தல் ஆகிய பொருட்பாடுகளை உயர்த்துவதன் மீதும், அவர்களுக்கு உரிமையளிப்பதற்குத் தேவையான அத்தகைய பிற பொருட்பாடுகள் மீதும், தனிநபர்கள் மூலமாகவும் அமைவனங்கள் மூலமாகவும் ஆராய்ச்சியையும் மேம்பாட்டினையும் தொடங்குதலோ அல்லது தொடங்கச் செய்வித்தலோ வேண்டும். ஆராய்ச்சியும் மேம்பாடும்.

29. உரிய அரசும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளும் மாற்றுத்திறனாளிகள் அனைவரும் பிறருக்குச் சரிசமமாகப் பண்பாட்டு வாழ்க்கையொன்றை வாழ்வதற்கும் இன்பப்பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் பங்கு கொள்வதற்கு அவர்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அவை,– பண்பாடும் இன்பப் பொழுதுபோக்கும்.

(அ) மாற்றுத்திறனுடைய கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் அவர்களின் ஆர்வங்களையும் தனித்திறமைகளையும் தொடர்ந்து மேம்படுத்துவதற்கான வசதிகள், ஆதரவு மற்றும் ஊக்க ஆதரவுகள்;

(ஆ) மாற்றுத்திறனாளிகளின் வரலாற்று அனுபவங்களைக் காலவரிசைப்படி தொகுப்பதற்கும் பொருள் விளக்கம் தருவதற்குமான மாற்றுத்திறன் வரலாற்று அருங்காட்சியகம் ஒன்றை நிறுவுதல்;

(c) making art accessible to persons with disabilities;

(d) promoting recreation centres, and other associational activities;

(e) facilitating participation in scouting, dancing, art classes, outdoor camps and adventure activities;

(f) redesigning courses in cultural and arts subjects to enable participation and access for persons with disabilities;

(g) developing technology, assistive devices and equipments to facilitate access and inclusion for persons with disabilities in recreational activities; and

(h) ensuring that persons with hearing impairment can have access to television programmes with sign language interpretation or sub-titles.

Sporting activities.

30. (1) The appropriate Government shall take measures to ensure effective participation in sporting activities of the persons with disabilities.

(இ) மாற்றுத்திறனாளிகளுக்குக் கலையினை அணுகத்தக்கதாக ஆக்குதல்;

(ஈ) இன்பப்பொழுதுபோக்கு மையங்கள் மற்றும் இணைந்த பிற செயல்பாடுகளை ஊக்குவித்தல்;

(உ) சாரணர் பயிற்சி, நடனம், கலை வகுப்புகள், வெளிப்புற முகாம்கள் மற்றும் துணிகரச் செயல்களில் பங்குகொள்ள வழிவகுத்தல்;

(ஊ) மாற்றுத்திறனாளிகள் பங்குகொள்வதற்கும் அணுகுவதற்கும் இயல்விக்கும் பொருட்டுப் பண்பாடு மற்றும் கலைப்பாடங்களின் பாடவகைப் பயிலாறுகளை மறுவடிவமைத்தல் ;

(எ) இன்பப்பொழுதுபோக்குச் செயல்பாடுகளை மாற்றுத்திறனாளிகள் அணுகுவதற்கும் அவற்றில் சேர்த்துக்கொள்வதற்கும் வழிவகுப்பதற்கு ஏற்ற வகையில் தொழில்நுட்பம், உதவு சாதனங்கள் மற்றும் கருவிகளை மேம்படுத்துதல்; மற்றும்

(ஏ) செவித்திறன் குறைபாடுடையவர்களுக்குச் சைகைமொழிப் பொருள்விளக்கம் அல்லது துணைத் தலைப்புகளைக் கொண்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் காணும் வாய்ப்பை உறுதி செய்தல்,

ஆகியவற்றை உள்ளடக்கும்.

விளையாட்டுச் செயல்பாடுகள்.

30. (1) உரிய அரசு, மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுச் செயல்பாடுகளில் பயனுறுவகையில் திறம்படப் பங்குகொள்வதை உறுதி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் வேண்டும்.

(2) The sports authorities shall accord due recognition to the right of persons with disabilities to participate in sports and shall make due provisions for the inclusion of persons with disabilities in their schemes and programmes for the promotion and development of sporting talents.

(3) Without prejudice to the provisions contained in sub-sections (1) and (2), the appropriate Government and the sports authorities shall take measures to,—

(a) restructure courses and programmes to ensure access, inclusion and participation of persons with disabilities in all sporting activities;

(b) redesign and support infrastructure facilities of all sporting activities for persons with disabilities;

(c) develop technology to enhance potential, talent, capacity and ability in sporting activities of all persons with disabilities;

(2) விளையாட்டு அதிகாரஅமைப்புகள், விளையாட்டுகளில் பங்குகொள்வதற்கு மாற்றுத் திறனாளிகளின் உரிமைக்கு உரிய ஏற்பளிப்பு வழங்குதல் வேண்டும்; மற்றும் விளையாட்டுகளில் தனித் திறமைகளை மேம்படுத்துவதற்காகவும் வளர்ப்பதற்காகவும் அவற்றின் திட்டங்களிலும் செயல்திட்டங்களிலும் மாற்றுத் திறனாளிகளை இணைத்துக்கொள்வதற்காக உரிய வகையங்களைச் செய்தல் வேண்டும்.

(3). (1), (2) ஆகிய உட்பிரிவுகளில் அடங்கிய வகையங்களுக்குக் குந்தகமின்றி, உரிய அரசும், விளையாட்டு அதிகாரஅமைப்புகளும்,–

(அ) விளையாட்டுச் செயல்பாடுகள் அனைத்திலும் மாற்றுத்திறனாளிகள் வாய்ப்பைப் பெற்று, இணைத்துக்கொள்ளப்படுவதையும் பங்குகொள்வதையும் உறுதி செய்யும்பொருட்டுப் பாடவகை பயிலாறுகளையும் செயல் திட்டங்களையும் மறுஅமைப்புச் செய்வதற்கும்;

(ஆ) மாற்றுத்திறனாளிகளுக்கான அனைத்து விளையாட்டுச் செயல்பாடுகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மறுவடிவமைப்பதற்கும், ஆதரவளிப்பதற்கும் ;

(இ) விளையாட்டுச் செயல்பாடுகளில் மாற்றுத்திறனாளிகள் அனைவரின் உள்ளார்ந்த ஆற்றலையும், தனித்திறமையையும், தகுநிலையையும் மற்றும் திறமையையும் மேம்படுத்தும்பொருட்டு தொழில்நுட்பத்தை வளர்ப்பதற்கும்;

(d) provide multi-sensory essentials and features in all sporting activities to ensure effective participation of all persons with disabilities;

(e) allocate funds for development of state of art sport facilities for training of persons with disabilities;

(f) promote and organise disability specific sporting events for persons with disabilities and also facilitate awards to the winners and other participants of such sporting events.

## CHAPTER VI

## SPECIAL PROVISIONS FOR PERSONS WITH BENCHMARK DISABILITES

Free education for children with benchmark disabilities.

31. (1) Notwithstanding anything contained in the Rights of Children to Free and Compulsory Education Act, 2009, every child with benchmark disability between the age of six to eighteen years shall have the right to free education in a neighbourhood school, or in a special school, of his choice.

35/2009.

(2) The appropriate Government and local authorities shall ensure that every child with benchmark disability has access to free education in an appropriate environment till he attains the age of eighteen years.

(ஈ) மாற்றுத்திறனாளிகள் அனைவரும், அனைத்து விளையாட்டுச் செயல்பாடுகளிலும் திறம்பட பங்குகொள்வதை உறுதிசெய்யும் பொருட்டுப் பல்புலன்சார் இன்றியமையாக் கூறுகளையும் தனிக்கூறுகளையும் வழங்குவதற்கும்;

(உ) மாற்றுத்திறனாளிகளுக்குப் பயிற்சியளிப் பதற்காக நவீன விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்காக நிதிகளைப் பகிர்ந் தொதுக்குவதற்கும்;

(ஊ) மாற்றுத்திறனாளிகளுக்கெனத் தனிமுறை மாற்றுத்திறன் விளையாட்டு நிகழ்ச்சிகளை ஊக்குவித்து ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அத்தகைய விளையாட்டு நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் கலந்துகொண்ட பிறருக்கும் பரிசுகள் வழங்குவதற்கு வழிவகுப்பதற்கும் கூட,

நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## அத்தியாயம் VI

## குறியீட்டளவு மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வகையங்கள்.

குறியீட்டளவு மாற்றுத்–திறனுடைய சிறார்களுக்கு இலவசக் கல்வி.

35/2009. 31. (1) இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான குழந்தைகளின் உரிமைகள் சட்டம், 2009 இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஆறு முதல் பதினெட்டு வயதுக்கு இடையேயுள்ள குறியீட்டளவு மாற்றுத்திறனுடைய ஒவ்வொரு சிறாரும், தன் விருப்பப்படி, அருகிலுள்ள பள்ளி ஒன்றிலோ அல்லது சிறப்புப் பள்ளி ஒன்றிலோ, இலவசக் கல்விக்கு உரிமை உடையவர் ஆவார்.

(2) உரிய அரசும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளும் குறியீட்டளவு மாற்றுத்திறனுடைய ஒவ்வொரு சிறாரும், அவர் பதினெட்டு வயது நிறைவெய்தும் வரையில் உரிய சூழலொன்றில் இலவசக் கல்விக்கான வாய்ப்பு கொண்டிருக்கிறார் என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

Reservation in higher educational institutions.

32. (1) All Government institutions of higher education and other higher education institutions receiving aid from the Government shall reserve not less than five per cent. seats for persons with benchmark disabilities.

(2) The persons with benchmark disabilities shall be given an upper age relaxation of five years for admission in institutions of higher education.

Identification of posts for reservation.

33. The appropriate Government shall—

(i) identify posts in the establishments which can be held by respective category of persons with benchmark disabilities in respect of the vacancies reserved in accordance with the provisions of section 34;

(ii) constitute an expert committee with representation of persons with benchmark disabilities for identification of such posts; and

(iii) undertake periodic review of the identified posts at an interval not exceeding three years.

Reservation.

34. (1) Every appropriate Government shall appoint in every Government establishment, not less than four per cent. of the total number of vacancies in the cadre strength in each group of posts meant to be filled with persons with benchmark disabilities of which, one per cent. each shall be reserved for persons with benchmark disabilities under clauses (a), (b) and (c) and one per cent. for persons with benchmark disabilities under clauses (d) and (e), namely:—

32. (1) அனைத்து அரசு உயர் கல்வி நிறுவனங்களும் அரசிடமிருந்து நிதிபெறும் பிற உயர் கல்வி நிறுவனங்களும் ஐந்து விழுக்காட்டிற்குக் குறையாத இடங்களைக் குறியீட்டளவு மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

உயர்கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு.

(2) குறியீட்டளவு மாற்றுத்திறனாளிகளுக்கு, உயர் கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கான உச்சவயதில் ஐந்து ஆண்டுகள் தளர்வு கொடுக்கப்படுதல் வேண்டும்.

33. உரிய அரசு–

இட ஒதுக்கீட்டிற்கானப் பதவியிடங்களைக் கண்டறிதல்.

(i) 34 ஆம் பிரிவின் வகையங்களுக்கிணங்க நிறுவனங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடங்கள் பொறுத்து குறியீட்டளவு மாற்றுத்திறனாளிகளில் அந்தந்த வகையினரால் வகிக்கத்தக்க பதவியிடங்களைக் கண்டறிதலும்;

(ii) அத்தகைய பதவியிடங்களைக் கண்டறிவதற்காகக் குறியீட்டளவு மாற்றுத் திறனாளிகளின் சார்பாற்றத்துடன் வல்லுநர் குழு ஒன்றை அமைத்தலும்; மற்றும்

(iii) கண்டறியப்பட்ட பதவியிடங்களை மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத கால இடைவெளியொன்றில் காலமுறை ஆய்வு மேற்கொள்ளுதலும்,

வேண்டும்.

34. (1) உரிய அரசு ஒவ்வொன்றும் அரசு நிறுவனம் ஒவ்வொன்றிலும், குறியீட்டளவு மாற்றுத்திறனாளிகளைக் கொண்டு நிரப்பப்படக் கருதப்பட்டுள்ள ஒவ்வொரு பணியிடத் தொகுதியிலும் உள்ள பணிமுறைப் பிரிவின் காலியிடங்களின் மொத்த எண்ணிக்கையில் நான்கு விழுக்காட்டிற்குக் குறையாமல் அவர்களை அமர்த்துதல் வேண்டும், அவற்றில் ஒவ்வொன்றிலும், ஒரு விழுக்காடு, (அ), (ஆ), மற்றும் (இ) ஆகிய கூறுகளின்படியான குறியீட்டளவு மாற்றுத்திறனாளிகளுக்காகவும் மற்றும் ஒரு விழுக்காடு (ஈ) மற்றும் (உ) ஆகிய கூறுகளின்படியான குறியீட்டளவு மாற்றுத்திறனாளிகளுக்காகவும் ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும், அவையாவன:–

இட ஒதுக்கீடு.

(a) blindness and low vision;

(b) deaf and hard of hearing;

(c) locomotor disability including cerebral palsy, leprosy cured, dwarfism, acid attack victims and muscular dystrophy;

(d) autism, intellectual disability, specific learning disability and mental illness;

(e) multiple disabilities from amongst persons under clauses (a) to (d) including deaf-blindness in the posts identified for each disabilities:

Provided that the reservation in promotion shall be in accordance with such instructions as are issued by the appropriate Government from time to time:

Provided further that the appropriate Government, in consultation with the Chief Commissioner or the State Commissioner, as the case may be, may, having regard to the type of work carried out in any Government establishment, by notification and subject to such conditions, if any, as may be specified in such notifications exempt any Government establishment from the provisions of this section.

(2) Where in any recruitment year any vacancy cannot be filled up due to non-availability of a suitable person with benchmark disability or for any other sufficient reasons, such vacancy shall be carried forward in the succeeding recruitment year and if in the succeeding recruitment year also suitable person with benchmark disability is not available, it may first be filled by interchange among the five categories and only when there is no person with disability available for the post in that year, the employer shall fill up the vacancy by appointment of a person, other than a person with disability:

(அ) பார்வையின்மை மற்றும் குறைந்த பார்வைத்திறன்;

(ஆ) காது கேளாமை மற்றும் தெளிவாகக் கேட்க இயலாமை;

(இ) மூளைச் சீர்குலைவு, தொழுநோய்க் குணமடைந்தவர், குள்ளஉருவத்தன்மை, அமில வீச்சால் பாதிக்கப்பட்டோர் மற்றும் தசைநசிவு உள்ளடங்கலான நரம்புகள் ஒத்து இயங்காமை;

(ஈ) தற்புனைவு ஆழ்வு, அறிவுசார் மாற்றுத்திறன், குறித்தவகை கற்றல் மாற்றுத்திறன் மற்றும் மன நோய்;

(உ) ஒவ்வொரு மாற்றுத்திறனிற்கும் கண்டறிப்பட்ட பதவியிடங்களில் செவித்திறன்–பார்வைதிறன் இன்மை உள்ளடங்கலான (அ) முதல் (ஈ) வரையிலான கூறுகளின் கீழ்வரும் நபர்களுக் கிடையேயிருந்து பல்வகை மாற்றுத்திறன்கள்:

**வரம்புரையாக:** பதவி உயர்வில் இட ஒதுக்கீடானது உரிய அரசால் அவ்வப்போது வழங்கப்படுகிறவாறான அத்தகைய அறிவுறுத்தங்களுக்கு இணங்க இருத்தல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக:** உரிய அரசு, நேர்வுக்கேற்ப, தலைமை ஆணையருடனோ அல்லது மாநில ஆணையருடனோ கலந்தாய்ந்து, அரசு நிறுவனம் எதிலும் நடத்தப்பட்டுவரும் பணியின் வகையைக் கருத்திற்கொண்டு, அறிவிக்கை வாயிலாக மற்றும் அத்தகைய அறிவிக்கைகளில் குறித்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகள் எவையேனுமிருப்பின், அவற்றிற்கு உட்பட்டு, அரசு நிறுவனம் எதற்கும் இந்தப் பிரிவின் வகையங்களிலிருந்து விலக்களிக்கலாம்.

(2) ஆளெடுப்பு ஆண்டு எதிலும் குறியீட்டளவு மாற்றுத்திறனுடைய தகுந்த நபர் ஒருவர் கிடைக்காத காரணத்திற்காகவோ அல்லது பிற போதுமான காரணங்கள் எவற்றிற்காகவுமோ, காலியிடம் எதுவும் நிரப்பப்பட கிடைக்காதிருப்பின், அத்தகைய காலியிடம் அடுத்துப் பின்வரும் ஆளெடுப்பு ஆண்டிற்குக் கொண்டு செல்லப்படுதல் வேண்டும் மற்றும் அடுத்துவரும் ஆளெடுப்பு ஆண்டிலும் கூட குறியீட்டளவு மாற்றுத்திறனுடைய தகுந்த நபர் கிடைக்காதிருப்பின், அது முதலில் ஐந்து வகையினரிடையே ஒன்றுக்கொன்று மாற்றாக நிரப்பப்படலாம் மற்றும் அந்த ஆண்டில் அந்தப் பதவியிடத்திற்கு மாற்றுத்திறனாளி எவரும் கிடைக்காதபோது மட்டுமே, வேலைதருநர் மாற்றுத்திறனாளி அல்லாத பிற நபர் ஒருவரை அமர்த்தி அந்தக் காலியிடத்தை நிரப்புதல் வேண்டும்:

Provided that if the nature of vacancies in an establishment is such that a given category of person cannot be employed, the vacancies may be interchanged among the five categories with the prior approval of the appropriate Government.

(3) The appropriate Government may, by notification, provide for such relaxation of upper age limit for employment of persons with benchmark disability, as it thinks fit.

Incentives to employers in private sector.

35. The appropriate Government and the local authorities shall, within the limit of their economic capacity and development, provide incentives to employer in private sector to ensure that at least five per cent. of their work force is composed of persons with benchmark disability.

Special employment exchange.

36. The appropriate Government may, by notification, require that from such date, the employer in every establishment shall furnish such information or return as may be prescribed by the Central Government in relation to vacancies appointed for persons with benchmark disability that have occurred or are about to occur in that establishment to such special employment exchange as may be notified by the Central Government and the establishment shall thereupon comply with such requisition.

Special schemes and development programmes.

37.The appropriate Government and the local authorities shall, by notification, make schemes in favour of persons with benchmark disabilities, to provide,—

(a) five per cent. reservation in allotment of agricultural land and housing in all relevant schemes and development programmes, with appropriate priority to women with benchmark disabilities;

**வரம்புரையாக:** நிறுவனம் ஒன்றிலுள்ள காலியிடங்களின் தன்மை ஒரு குறிப்பிட்ட வகையினரை வேலைக்கமர்த்துவதற்கு இயலாத ஒன்றாக இருக்குமாயின், அந்தக் காலியிடங்கள், உரிய அரசின் முன்ஒப்பேற்புடன் ஐந்து வகையினரிடையே ஒன்றுக்கொன்று மாற்றிக் கொள்ளப்படலாம்.

(3) உரிய அரசு, அறிவிக்கை வாயிலாகத் தான் பொருத்தமெனக் கருதுகிறவாறு குறியீட்டளவு மாற்றுத்திறனாளிகளின் வேலையமர்த்தத்திற்கான அத்தகைய உச்ச வயதுவரம்பைத் தளர்த்த வகைசெய்யலாம்.

தனியார் துறையிலுள்ள வேலை தருநர்களுக்கு ஊக்கத்தொகை.

35. உரிய அரசும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளும், அதன் பொருளியல் தகுநிலை மற்றும் வளர்ச்சியின் வரம்பிற்கு உட்பட்டு, தனியார் துறையில் உள்ள வேலைதருநருக்கு, அவர்களுடைய வேலையாள் தொகுதியானது, குறைந்தது ஐந்து விழுக்காடேனும் குறியீட்டளவு மாற்றுத்திறனாளிகளைக் கொண்டதாயிருக்கிறது என்பதை உறுதி செய்யும் பொருட்டு ஊக்கத்தொகை வழங்குதல் வேண்டும்.

சிறப்பு வேலை வாய்ப்பகம்.

36. உரிய அரசு, அறிவிக்கை வாயிலாக, மைய அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் அத்தகைய தேதியிலிருந்து ஒவ்வொரு நிறுவனத்திலுமுள்ள வேலைதருநரும் அந்த நிறுவனத்தில் குறியீட்டளவு மாற்றுத்திறனாளிகளுக்கென உருவாக்கப்பட்டிருக்கிற அல்லது உருவாக்கப்படவிருக்கிற குறித்திடப்பட்ட காலியிடங்கள் பொறுத்து, மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய தகவலை அல்லது விவரஅறிக்கையை அத்தகைய சிறப்பு வேலை வாய்ப்பகத்திற்கு அளித்தல் வேண்டும் என்று வேண்டுறுத்தலாம்; மற்றும் அந்த நிறுவனம் அதன் பேரில் அத்தகைய வேண்டுறுத்தத்திற்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

சிறப்புத் திட்டங்களும் வளர்ச்சிச் செயல் திட்டங்களும்.

37. உரிய அரசும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளும், அறிவிக்கை வாயிலாக, குறியீட்டளவு மாற்றுத் திறனாளிகளின் நலச் சார்பாக,–

(அ) குறியீட்டளவு மாற்றுத்திறனுடைய பெண்களுக்கு உரிய முன்னுரிமையுடன், பொருத்தமான அனைத்து திட்டங்கள் மற்றும் வளர்ச்சிச் செயல் திட்டங்களில் வரும் வேளாண் நிலம் மற்றும் குடியிருப்பை ஒதுக்கிக்கொடுப்பதில் ஐந்து விழுக்காடு ஒதுக்கீட்டிற்கும்;

(b) five per cent. reservation in all poverty alleviation and various developmental schemes with priority to women with benchmark disabilities;

(c) five per cent. reservation in allotment of land on concessional rate, where such land is to be used for the purpose of promoting housing, shelter, setting up of occupation, business, enterprise, recreation centres and production centres.

## CHAPTER VII

## SPECIAL PROVISIONS FOR PERSONS WITH DISABILITIES WITH HIGH SUPPORT NEEDS

Special provisions for persons with disabilities with high support.

38. (1) Any person with benchmark disability, who considers himself to be in need of high support, or any person or organisation on his or her behalf, may apply to an authority, to be notified by the appropriate Government, requesting to provide high support.

(2) On receipt of an application under sub-section (1), the authority shall refer it to an Assessment Board consisting of such Members as may be prescribed by the Central Government.

(3) The Assessment Board shall assess the case referred to it under sub-section (1) in such manner as may be prescribed by the Central Government, and shall send a report to the authority certifying the need of high support and its nature.

(4) On receipt of a report under sub-section (3), the authority shall take steps to provide support in accordance with the report and subject to relevant schemes and orders of the appropriate Government in this behalf.

(ஆ) குறியீட்டளவு மாற்றுத்திறனுடைய பெண்களுக்கு உரிய முன்னுரிமையுடன், வறுமை ஒழிப்பு மற்றும் பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் அனைத்திலும் ஐந்து விழுக்காடு ஒதுக்கீட்டிற்கும்;

(இ) சலுகை வீதத்தில் நிலம் ஒதுக்குதலில், அத்தகைய நிலம், குடியிருப்பு, தங்குமிடம் ஆகியவற்றை மேம்படுத்தும் வாழ்தொழில், ஆகுதொழில், வணிகத்தொழில் இன்பப் பொழுதுபோக்கு மையங்கள் மற்றும் உற்பத்தி மையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தும் நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படவுள்ளவிடத்து, ஐந்து விழுக்காடு ஒதுக்கீட்டிற்கும்,

வகைசெய்வதற்குத் திட்டங்களை வகுத்தல் வேண்டும்.

## அத்தியாயம் VII

## உயர் ஆதரவுத் தேவைகளுடைய மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வகையங்கள்

உயர் ஆதரவுத் தேவைகளுடைய மாற்றுத் திறனாளிகளுக் கான சிறப்பு வகையங்கள்.

38. (1) உயர் ஆதரவுத் தேவையுள்ளவராக எனத் தன்னைக் கருதுகிற குறியீட்டளவு மாற்றுத்திறனாளி எவரும் அல்லது அவன் அல்லது அவள் சார்பாக எந்தவொரு நபரும் அல்லது அமைப்பு எதுவும் உரிய அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும், அதிகாரஅமைப்புக்கு உயர் ஆதரவு ஒன்றிற்கு வழங்குமாறு வேண்டி, விண்ணப்பம் செய்யலாம்.

(2) அதிகாரஅமைப்பு (1) ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பமொன்றைப் பெற்றதன் பேரில் அதனை மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய உறுப்பினர்களைக் கொண்ட மதிப்பீட்டுக் குழுமம் ஒன்றிற்குக் குறித்தனுப்புதல் வேண்டும்.

(3) மதிப்பீட்டுக் குழுமம், (1) ஆம் உட்பிரிவின்படி அதற்குக் குறித்தனுப்பப்பட்ட நேர்வினை மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மதிப்பீடு செய்தல் வேண்டும்; மேலும், உயர் ஆதரவுத் தேவையையும் அதன் தன்மையையும் உறுதிச்சான்றளித்து, அதிகாரஅமைப்பிற்கு அறிக்கையொன்றை அனுப்புதல் வேண்டும்.

(4) அதிகாரஅமைப்பு, (3) ஆம் உட்பிரிவின்படி அறிக்கையொன்றைப் பெற்றதன் பேரில், அந்த அறிக்கைக்கு இணங்கவும் இதற்கென பொருத்தமான திட்டங்கள் மற்றும் உரிய அரசின் ஆணைகளுக்குட்பட்டும் ஆதரவு வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## CHAPTER VIII

## DUTIES AND RESPONSIBILITIES OF APPROPRIATE GOVERNMENTS

Awareness campaigns.

39. (1) The appropriate Government, in consultation with the Chief Commissioner or the State Commissioner, as the case may be, shall conduct, encourage, support or promote awareness campaigns and sensitisation programmes to ensure that the rights of the persons with disabilities provided under this Act are protected.

(2) The programmes and campaigns specified under sub-section (1) shall also,—

(a) promote values of inclusion, tolerance, empathy and respect for diversity;

(b) advance recognition of the skills, merits and abilities of persons with disabilities and of their contributions to the workforce, labour market and professional fee;

(c) foster respect for the decisions made by persons with disabilities on all matters related to family life, relationships, bearing and raising children;

(d) provide orientation and sensitisation at the school, college, University and professional training level on the human condition of disability and the rights of persons with disabilities;

(e) provide orientation and sensitisation on disabling conditions and rights of persons with disabilities to employers, administrators and co-workers;

## அத்தியாயம் VIII
## உரிய அரசுகளின் கடமைகளும் பொறுப்புகளும்

39. (1) உரிய அரசு, நேர்வுக்கேற்ப, தலைமை ஆணையருடனோ அல்லது மாநில ஆணையருடனோ கலந்தாய்ந்து, இந்தச் சட்டத்தின்படி வகைசெய்யப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பாதுகாக்கப் படுகின்றனவா என்பதை உறுதிசெய்வதற்கு விழிப்புணர்வு பரப்புரைகளையும் கூருணர்வு செயல்திட்டங்களையும் நடத்துதலோ, ஊக்குவித்தலோ, ஆதரித்தலோ அல்லது மேம்படுத்தலோ வேண்டும். விழிப்புணர்வு பரப்புரைகள்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி குறித்துரைக்கப்பட்ட செயல்திட்டங்களும் பரப்புரைகளும்,–

(அ) சேர்த்துக்கொள்ளுதல், சகிப்புத்தன்மை, ஒத்துணர்வு ஆகியவற்றின் விழுமியங்களை மேம்படுத்துதலும் வேறுபாட்டிற்கு மதிப்பளித்தலும்;

(ஆ) மாற்றுத்திறனாளிகளின் திறன்கள், நற்கூறுகள் மற்றும் ஆற்றல்கள் ஆகியவற்றையும் வேலையாள் தொகுதி, தொழிலாளர் வளம், விழைதொழில் கட்டணம் ஆகியவற்றிற்கு அவர்களுடைய பங்களிப்புகளுக்கு ஏற்பளித்து முன்னெடுத்துச் செல்லுதலும்;

(இ) குடும்ப வாழ்க்கை, உறவுகள், குழந்தைகளைப் பெற்று வளர்த்தல் தொடர்பான அனைத்துப் பொருட்பாடுகளிலும் மாற்றுத்திறனாளிகளால் எடுக்கப்படும் முடிவுகளை மதித்துப் பேணுதலும்;

(ஈ) மாற்றுத்திறனின் மனிதபடிநிலை மற்றும் மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் குறித்துப் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மற்றும் விழைதொழில்பயிற்சி நிலையில் ஆற்றுப்படுத்தலுக்கும் கூருணர்விற்கும் வகைசெய்தலும்;

(உ) மாற்றுத்திறனாளிகளின் ஏலாமை நிலைமைகள் மற்றும் உரிமைகள் குறித்து வேலைதருநர்கள், நிருவாகிகள் மற்றும் உடன் பணிபுரிபவர்களுக்கு ஆற்றுப்படுத்தலுக்கும் கூருணர்விற்கும் வகைசெய்தலும்;

(f) ensure that the rights of persons with disabilities are included in the curriculum in Universities, colleges and schools.

Accessibility.

40. The Central Government shall, in consultation with the Chief Commissioner, formulate rules for persons with disabilities laying down the standards of accessibility for the physical environment, transportation, information and communications, including appropriate technologies and systems, and other facilities and services provided to the public in urban and rural areas.

Access to transport.

41. (1) The appropriate Government shall take suitable measures to provide,—

(a) facilities for persons with disabilities at bus stops, railway stations and airports conforming to the accessibility standards relating to parking spaces, toilets, ticketing counters and ticketing machines;

(b) access to all modes of transport that conform the design standards, including retrofitting old modes of transport, wherever technically feasible and safe for persons with disabilities, economically viable and without entailing major structural changes in design;

(c) accessible roads to address mobility necessary for persons with disabilities.

(எ) பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பள்ளிகளின் பாடத்திட்டங்களில் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் சேர்க்கப்படுவதை உறுதி செய்தலும்,

வேண்டும்.

40. மைய அரசு, தலைமை ஆணையருடன் கலந்தாய்ந்து, மாற்றுத்திறனாளிகளுக்காக, நகர மற்றும் ஊரகப் பகுதிகளில் பொது மக்களுக்கு வகை செய்யப்பட்டுள்ள உரிய தொழில்நுட்பங்கள் மற்றும் முறைமைகள் மற்றும் பிற வசதிகள் மற்றும் சேவைகள் உள்ளடங்கலான நேரடியான சூழல், போக்குவரத்து, தகவல் மற்றும் செய்தித்தொடர்புகள் ஆகியவற்றை அணுகத்தக்க தரநிலைகளை விதித்து விதிகளை வகுத்தல் வேண்டும். அணுகத்தக்க தன்மை.

41. (1) உரிய அரசு,– போக்குவரத்திற்கான அணுக்கம்.

(அ) பேருந்து நிறுத்தங்களிலும், இருப்பூர்த்திய நிலையங்களிலும் மற்றும் வானூர்தித் தளங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்காக ஊர்திகள் நிறுத்துமிடங்கள், கழிப்பறைகள், பயணச்சீட்டு வழங்குமிடங்கள் மற்றும் பயணச்சீட்டு வழங்குபொறிகள் பொறுத்து, அணுகத்தக்க தரநிலைகளை ஒத்திருக்கும் வசதிகளுக்கும்;

(ஆ) மாற்றுத்திறனாளிகளுக்குத் தொழில்நுட்ப முறையில் செய்யக் கூடியதாகவும் பாதுகாப்பானதாகவும், சிக்கனமாகவும் செய்யத்தக்கதாகவும் மற்றும் வடிவமைப்பில் பெரிய, கட்டமைப்பு மாற்றங்களுக்கு தேவையாக்காமல் இருக்குமிடத்தெல்லாம் பழைய போக்குவரத்து முறைகளில் புதிய சாதனங்களைக் கொண்டு மாற்றுவது உள்ளடங்கலாக, வடிவமைப்புத் தரநிலைகளை ஒத்திருக்கும் அனைத்துப் போக்குவரத்து முறைக்குமான அணுக்கத்திற்கும்;

(இ) மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான இடப்பெயர்வை கையாளுவதற்கு அணுகத்தக்க சாலைகளுக்கும்,

வகை செய்வதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(2) The appropriate Government shall develop schemes programmes to promote the personal mobility of persons with disabilities at affordable cost to provide for,—

(a) incentives and concessions;

(b) retrofitting of vehicles; and

(c) personal mobility assistance.

Access to information and communication technology.

42. The appropriate Government shall take measures to ensure that,—

(i) all contents available in audio, print and electronic media are in accessible format;

(ii) persons with disabilities have access to electronic media by providing audio description, sign language interpretation and close captioning;

(iii) electronic goods and equipment which are meant for every day use are available in universal design.

Consumer goods.

43. The appropriate Government shall take measures to promote development, production and distribution of universally designed consumer products and accessories for general use for persons with disabilities.

Mandatory observance of accessibility norms.

44. (1) No establishment shall be granted permission to build any structure if the building plan does not adhere to the rules formulated by the Central Government under section 40.

(2) உரிய அரசு, மாற்றுத்திறனாளிகளுக்கு இயன்ற கட்டணத்தில் அவர்களுடைய தனிப்பட்ட இடப்பெயர்வை ஊக்குவிக்க,–

(அ) ஊக்கத்தொகைகள் மற்றும் சலுகைகள்;

(ஆ) ஊர்திகளில் புதிய சாதனங்களைக் கொண்டு மாற்றுதல்; மற்றும்

(இ) தனிப்பட்ட இடப்பெயர்விற்கான உதவி

ஆகியவற்றிற்கு வகைசெய்வதற்கான திட்டங்களையும், செயல்திட்டங்களையும் உருவாக்குதல் வேண்டும்.

தகவல் மற்றும் செய்தித் தொழில் நுட்பத்திற்கு அணுக்கம்.

42. உரிய அரசு,–

(i) ஒலியுணர், அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் உள்ள அனைத்துத் தகவல்களும் அணுகத்தக்க வடிவத்தில் இருக்கின்றனவா என்பதையும்;

(ii) மாற்றுத்திறனாளிகளுக்கு ஒலியுணர் விவரிப்பு, சைகை மொழிப் பொருள்விளக்கம் மற்றும் பொருளுக்கு நெருக்கமான தலைப்பினை வழங்கி, மின்னணு ஊடகத்திற்கு அணுக்கம் கொண்டிருக்கின்றனரா என்பதையும்;

(iii) நாள்தோறும் பயன்படுத்து–வதற்கெனக் கருதப்படுகிறவான மின்னணுச் சரக்குகளும் சாதனங்களும் அனைவருக்குமான வடிவமைப்பில் கிடைக்கின்றனவா என்பதையும்,

உறுதிசெய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

நுகர்வோர் சரக்குகள்.

43. உரிய அரசு அனைவருக்குமாக வடிவமைக்கப்பட்ட நுகர்வோர் பொருள்களையும் துணைப்பொருள்களையும் மாற்றுத்திறனாளிகளின் பொதுவான பயன்பாட்டிற்காக மேம்படுத்தி, உற்பத்தி செய்து பகிர்ந்தளித்தலை வளர்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

அணுகும் வாய்ப்பு விதிகளைக் கட்டாயமாகக் கடைபிடித்தல்.

44. எந்தவொரு நிறுவனத்தின் கட்டிட உருவ வரைபடம் 40 ஆம் பிரிவின்படி மைய அரசால் வகுக்கப்பட்ட விதிகளை பின்பற்றாமல் இருக்குமாயின் கட்டுமானம் எதுவும் கட்டியெழுப்புவதற்கு அனுமதி வழங்கப்படுதல் ஆகாது.

(2) No establishment shall be issued a certificate of completion or allowed to take occupation of a building unless it has adhered to the rules formulated by the Central Government.

Time limit for making existing infrastructure and premises accessible and action for that purpose.

45. (1) All existing public buildings shall be made accessible in accordance with the rules formulated by the Central Government within a period not exceeding five years from the date of notification of such rules:

Provided that the Central Government may grant extension of time to the States on a case to case basis for adherence to this provision depending on their state of preparedness and other related parameters.

(2) The appropriate Government and the local authorities shall formulate and publish an action plan based on prioritisation, for providing accessibility in all their buildings and spaces providing essential services such as all primary health centres, civil hospitals, schools, railway stations and bus stops.

Time limit for accessibility by service providers.

46. The service providers whether Government or private shall provide services in accordance with the rules on accessibility formulated by the Central Government under section 40 within a period of two years from the date of notification of such rules:

Provided that the Central Government in consultation with the Chief Commissioner may grant extension of time for providing certain category of services in accordance with the said rules.

(2) எந்தவொரு நிறுவனத்தின் கட்டிடம் ஒன்று, மைய அரசால் வகுக்கப்பட்ட விதிகளைப் பின்பற்றியிருந்தாலன்றி பணிமுடிவு உறுதிச்சான்று ஒன்று வழங்கப்படுதலோ அல்லது அதனைக் கையடைவில் எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுதலோ ஆகாது.

நிலவுறும் உள்கட்டமைப்பு–களையும் வளாகங்களையும் அணுகத்தக்கன வாக்குவதற்கான காலவரம்பும் அந்த நோக்கத்திற்கான நடவடிக்கையும்.

45. (1) நிலவுறும் பொதுக்கட்டிடங்கள் அனைத்தும், மைய அரசால் வகுக்கப்பட்ட விதிகளின்படி, அத்தகைய விதிகள் அறிவிக்கை செய்யப்பட்ட தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலஅளவு ஒன்றுக்குள் அணுகத்தக்கதாக ஆக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக:** மைய அரசு, அந்தஅந்த நேர்வின் அடிப்படையொன்றில் மாநிலங்களுக்கு, அவற்றின் ஆயத்தநிலை நிலையையும் பிற தொடர்புடைய அளவீடுகளையும் பொறுத்து இந்த வகையத்தைப் பின்பற்றுவதற்குக் காலநீட்டிப்பு வழங்கலாம்.

(2) உரிய அரசும் உள்ளாட்சி அதிகார அமைப்புகளும், முன்னுரிமை அடிப்படையில், ஆரம்ப சுகாதார மையங்கள், பொது மருத்துவமனைகள், பள்ளிகள், இருப்பூர்திய நிலையங்கள் மற்றும் பேருந்து நிறுத்தங்கள் போன்ற அனைத்து இன்றியமையாச் சேவைகளை வழங்கும் அவற்றின் கட்டிடங்கள் மற்றும் இடங்களை அணுகத்தக்கதாக ஆக்குவதற்காக செயல்திட்டம் ஒன்றை வகுத்து வெளியிடுதல் வேண்டும்.

சேவை வழங்குநர்கள் அணுகத்தக்க–தன்மையை வழங்குவதற்கான காலவரம்பு.

46. சேவை வழங்குநர்களாக இருக்கும் அரசோ தனியாரோ 40 ஆம் பிரிவின்படி மைய அரசால் வகுக்கப்பட்ட அணுகத்தக்கதன்மைக்கான விதிகளின்படி அத்தகைய விதிகள் அறிவிக்கை செய்யப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலஅளவு ஒன்றுக்குள் சேவைகளை வழங்குதல் வேண்டும்:

**வரம்புரையாக:** மைய அரசு, தலைமை ஆணையருடன் கலந்தாய்ந்து மேற்சொன்ன விதிகளின்படி குறித்தசில வகைச் சேவைகளை வழங்குவதற்குக் கால நீட்டிப்பு வழங்கலாம்.

Human resource development.

47. (1) Without prejudice to any function and power of Rehabilitation Council of India constituted under the Rehabilitation Council of India Act, 1992, the appropriate Government shall endeavour to develop human resource for the purposes of this Act and to that end shall,— 34/1992.

(a) mandate training on disability rights in all courses for the training of Panchayati Raj Members, legislators, administrators, police officials, judges and lawyers;

(b) induct disability as a component for all education courses for schools, colleges and University teachers, doctors, nurses, para-medical personnel, social welfare officers, rural development officers, asha workers, anganwadi workers, engineers, architects, other professionals and community workers;

(c) initiate capacity building programmes including training in independent living and community relationships for families, members of community and other stakeholders and care providers on care giving and support;

(d) ensure independence training for persons with disabilities to build community relationships on mutual contribution and respect;

(e) conduct training programmes for sports teachers with focus on sports, games, adventure activities;

34/1992. 47. (1) இந்திய மறுவாழ்வளிப்பு மன்றச் சட்டம், 1992 இன் படி அமைக்கப்பட்ட இந்திய மறுவாழ்வளிப்பு மன்றத்தின் செயற்பணி மற்றும் அதிகாரம் எதற்கும் குந்தகமின்றி, உரிய அரசு, இந்தச்சட்டத்தின் நோக்கங்களுக்காக மனித வளத்தை மேம்படுத்துவதற்கு முனைந்து முயலுதல் வேண்டும்; மேலும் அந்த நோக்கில்,– மனிதவள மேம்பாடு.

(அ) ஊராட்சிமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஆட்சியாளர்கள், காவல்துறை அலுவலர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள் ஆகியோருக்குப் பயிற்சியளிப்பதற்கான, பாடவகைப்பயிலாறுகள் அனைத்திலும் மாற்றுத்திறன் உரிமைகள் மீது பயிற்சியைக் கட்டாயமாக்குதலும் ;

(ஆ) பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள், சமூக நல அலுவலர்கள், ஊரக வளர்ச்சி அலுவலர்கள், 'ஆஷா' பணியாளர்கள், *அங்கன்வாடிப்* பணியாளர்கள், பொறியாளர்கள், கட்டிடக்கலைஞர்கள், பிற விழை தொழிலர்கள் மற்றும் சமூகப் பணியாளர்கள் ஆகியோருக்குமான அனைத்துக் கல்விப் பாடவகைப் பயிலாறுகளிலும், மாற்றுத்திறனை ஒரு பாடப்பகுதியாகப் புகுத்துதலும்;

(இ) காப்பு அளித்தலுக்கும் ஆதரவளித்தலுக்கும் குடும்பங்கள், கூட்டுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அக்கறையுடைய பிறருக்கும் மற்றும் காப்பு வழங்குநருக்கும் தற்சார்பு வாழ்க்கையிலும், கூட்டுக்குழு உறவுகளிலும் பயிற்சியளிப்பது உள்ளடங்கலான தகுநிலைக் கட்டமைப்புச் செயல்திட்டங்களைத் தொடங்குதலும்;

(ஈ) ஒருவருக்கொருவர் பங்களித்தல் மற்றும் மதித்தல் மீது சமுதாய உறவுகளைக் கட்டமைக்க மாற்றுத்திறனாளிளுக்குத் தற்சார்புப் பயிற்சியை உறுதி செய்தலும்;

(உ) விளையாட்டுத்துறை ஆசிரியர்களுக்கு விளையாட்டுகள், திறன்விளையாட்டுகள், துணிகரச் செயல்கள் மீது கவனம் செலுத்தப் பயிற்சிச் செயல்திட்டங்களை நடத்துதலும்;

(f) any other capacity development measures as may be required.

(2) All Universities shall promote teaching and research in disability studies including establishment of study centres for such studies.

(3) In order to fulfil the obligation stated in sub-section (1), the appropriate Government shall in every five years undertake a need based analysis and formulate plans for the recruitment, induction, sensitisation, orientation and training of suitable personnel to undertake the various responsibilities under this Act.

Social audit.

48. The appropriate Government shall undertake social audit of all general schemes and programmes involving the persons with disabilities to ensure that the scheme and programmes do not have an adverse impact upon the persons with disabilities and need the requirements and concerns of persons with disabilities.

## CHAPTER IX

## REGISTRATION OF INSTITUTIONS FOR PERSONS WITH DISABILITIES AND GRANTS TO SUCH INSTITUTIONS

Competent authority.

49. The State Government shall appoint an authority as it deems fit to be a competent authority for the purposes of this Chapter.

Registration.

50. Save as otherwise provided under this Act, no person shall establish or maintain any institution for persons with disabilities except in accordance with a certificate of registration issued in this behalf by the competent authority:

(ஊ) தேவைப்படலாகும் ஆற்றல் வளர்க்கும் பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும்,

வேண்டும்.

(2) அனைத்துப் பல்கலைக்கழகங்களும், மாற்றுத்திறன்சார் படிப்புகளில், அத்தகைய படிப்புகளுக்காகக் கல்வி மையங்களை நிறுவுதல் உள்ளடங்களாக, கற்பித்தலையும் ஆராய்ச்சியையும் மேம்படுத்துதல் வேண்டும்.

(3). (1) ஆம் உட்பிரிவில் சொல்லப்பட்ட கடப்பாட்டினை நிறைவேற்றும் பொருட்டு, உரிய அரசு ஒவ்வோர் ஐந்து ஆண்டுகளிலும், இந்தச் சட்டத்தின்படி பல்வேறு பொறுப்புகளை மேற்கொள்வதற்குத் தகுந்த பணியாளர்களை ஆளெடுத்தல், பணியில் சேர்த்துக்கொள்ளுதல், கூருணர்வுஊட்டுதல், ஆற்றுப்படுத்துதல், பயிற்சியளித்தல் ஆகியவற்றிற்குத் தேவை அடிப்படையிலான பகுப்பாய்வு ஒன்றை மேற்கொண்டு திட்டங்களை வகுத்தமைத்தல் வேண்டும்.

சமுதாயத் தணிக்கை.

48. உரிய அரசு, மாற்றுத்திறனாளிகள் உள்ளடங்கிய அனைத்துப் பொதுவியலான திட்டங்களையும், செயல்திட்டங்களையும், அந்தத் திட்டங்களும் செயல் திட்டங்களும் மாற்றுத்திறனாளிகள் மீது எதிர் விளைவு ஒன்றைக் கொண்டிருக்கவில்லை என்பதையும் மாற்றுத்திறனாளிகளின் தேவைகளுக்கும் அக்கறை–களுக்கும் அவசியம் என்பதையும் உறுதிசெய்வதற்கு, சமுதாயத் தணிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## அத்தியாயம் IX

## மாற்றுத்திறனாளிகளுக்கான அமைவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் அத்தகைய அமைவனங்களுக்கான மானியங்கள்

தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு.

49. மாநில அரசு, இந்த அத்தியாயத்தின் நோக்கங்களுக்காக, தகுதிறமுள்ள ஒரு அதிகாரஅமைப்பாக இருப்பதற்கு, தாம் பொருத்தமெனக் கருதுகிறவாறான அதிகாரஅமைப்பு ஒன்றை அமர்த்துதல் வேண்டும்.

பதிவு செய்தல்.

50. இந்தச் சட்டத்தின்படி பிறவாறாக வகை செய்யப்பட்டிருப்பது நீங்கலாக, எந்தவொரு நபரும், தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பினால் இதற்கென வழங்கப்படும் ஒரு பதிவு உறுதிச்சான்றின்படி அல்லாமல் மாற்றுத்திறனாளிகளுக்காக அமைவனம் எதனையும் நிறுவுதலோ அல்லது நடத்திவருதலோ ஆகாது:

Provided that an institution for care of mentally ill persons, which holds a valid licence under section 8 of the Mental Health Act, 1987 or any other Act for the time being in force, shall not be required to be registered under this Act. 14/1987.

Application and grant of certificate of registration.

51. (1) Every application for a certificate of registration shall be made to the competent authority in such form and in such manner as may be prescribed by the State Government.

(2) On receipt of an application under sub-section (1), the competent authority shall make such enquiries as it may deem fit and on being satisfied that the applicant has complied with the requirements of this Act and the rules made thereunder, it shall grant a certificate of registration to the applicant within a period of ninety days of receipt of application and if not satisfied, the competent authority shall, by order, refuse to grant the certificate applied for:

Provided that before making any order refusing to grant a certificate, the competent authority shall give the applicant a reasonable opportunity of being heard and every order of refusal to grant a certificate shall be communicated to the applicant in writing.

(3) No certificate of registration shall be granted under sub-section (2) unless the institution with respect to which an application has been made is in a position to provide such facilities and meet such standards as may be prescribed by the State Government.

14/1987. **வரம்புரையாக:** மனநலச் சட்டம், 1987 இன் 8 ஆம் பிரிவின்படியோ அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதன்படியுமோ செல்லுந்தன்மையுடைய உரிமம் ஒன்று வைத்திருக்கிற, மன நோயாளிகளைப் பேணிக் காப்பதற்கான அமைவனம் ஒன்று, இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட வேண்டுறுத்தப்படுதல் ஆகாது.

51. (1) பதிவு உறுதிச்சான்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வடிவத்திலும் முறையிலும் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பிற்குச் செய்யப்படுதல் வேண்டும். பதிவு உறுதிச் சான்றுக்கான விண்ணப்பமும் அது வழங்கப்படுதலும்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி விண்ணப்ப மொன்றைப் பெற்றதன்பேரில், தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு தாம் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய விசாரணைகளைச் செய்து, விண்ணப்பதாரர், இந்தச் சட்டத்தின் மற்றும் அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின் வேண்டுறுத்தங்களுக்கு இணங்கி நடந்திருக்கிறார் என்று மனநிறைவடைவதன் பேரில், அது விண்ணப்பம் பெறப்பட்டதிலிருந்து தொண்ணூறுநாள் காலஅளவு ஒன்றுக்குள் விண்ணப்பதாரருக்குப் பதிவு உறுதிச்சான்று ஒன்றை வழங்குதல் வேண்டும்; மற்றும் மனநிறைவடையவில்லையாயின், தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு, ஆணையின் வழி, விண்ணப்பித்துள்ள உறுதிச்சான்றை வழங்க மறுத்தல் வேண்டும்:

**வரம்புரையாக:** உறுதிச்சான்று ஒன்றை வழங்க மறுத்து ஆணை எதுவும் பிறப்பிப்பதற்கு முன்பு, தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு விண்ணப்பதாரருக்குக் கேட்கப் படுவதற்கான தகுமான வாய்ப்பொன்று நல்குதல் வேண்டும்; மற்றும் உறுதிச் சான்றை வழங்க மறுக்கும் ஆணை ஒவ்வொன்றும் விண்ணப்பதாரருக்கு எழுத்துவடிவில் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(3) அமைவனத்தால் எதன் பொருட்டு விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டிருக்கிறதோ அது, மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வசதிகளை வழங்கக்கூடிய மற்றும் அத்தகைய தரநிலைகளை நிறைவு செய்யக்கூடிய நிலையில் இருந்தாலன்றி, (2) ஆம் உட்பிரிவின்படி பதிவு உறுதிச்சான்று எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

(4) The certificate of registration granted under sub-section (2),—

(a) shall, unless revoked under section 52 remain in force for such period as may be prescribed by the State Government;

(b) may be renewed from time to time for a like period; and

(c) shall be in such form and shall be subject to such conditions as may be prescribed by the State Government.

(5) An application for renewal of a certificate of registration shall be made not less than sixty days before the expiry of the period of validity.

(6) A copy of the certificate of registration shall be displayed by the institution in a conspicuous place.

(7) Every application made under sub-section (1) or sub-section (5) shall be disposed of by the competent authority within such period as may be prescribed by the State Government.

Revocation of registration.

52. (1) The competent authority may, if it has reason to believe that the holder of a certificate of registration granted under sub-section (2) of section 51 has,—

(a) made a statement in relation to any application for the issue or renewal of the certificate which is incorrect or false in material particulars; or

(4). (2) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட பதிவு உறுதிச்சான்றானது, –

(அ) 52 ஆம் பிரிவின்படி முறித்தறவு செய்யப்பட்டாலன்றி, மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலஅளவிற்குச் செல்லாற்றலில் இருந்துவருதல் வேண்டும்;

(ஆ) அவ்வப்போது, அதைப் போன்றதோர் காலஅளவிற்குப் புதுப்பிக்கப்படலாம்; மற்றும்

(இ) மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

(5) பதிவு உறுதிச்சான்று ஒன்றைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பமொன்று, அதன் செல்லுந்தன்மையின் காலஅளவு கழிவுறுவதற்குக் குறைந்தது அறுபது நாட்களுக்கு முன்பாக செய்யப்படுதல் வேண்டும்.

(6) பதிவு உறுதிச்சான்றின் படியொன்று தெளிவாக தெரியும் ஓர் இடத்தில், அமைவனத்தால், காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(7). (1) ஆம் உட்பிரிவின்படியோ அல்லது (5) ஆம் உட்பிரிவின்படியோ செய்யப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும், மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலஅளவிற்குள் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பினால் தீர்வு செய்யப்படுதல் வேண்டும்.

பதிவை முறித்தறவு செய்தல்.

52. (1) தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு, 51 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட பதிவு உறுதிச்சான்று ஒன்றை வைத்திருப்பவர்,–

(அ) உறுதிச்சான்றை வழங்குவதற்காகவோ அல்லது புதுப்பிப்பதற்காகவோ விண்ணப்பம் எதனையும் பொறுத்து முக்கியமான விவரங்களில் தவறானதாகவோ அல்லது பொய்யானதாகவோ இருக்கிற விவரவுரையொன்றைச் செய்திருக்கிறார் என்றோ; அல்லது

(b) committed or has caused to be committed any breach of rules or any conditions subject to which the certificate was granted,

it may, after making such inquiry, as it deems fit, by order, revoke the certificate:

Provided that no such order shall be made until an opportunity is given to the holder of the certificate to show cause as to why the certificate of registration shall not be revoked.

(2) Where a certificate of registration in respect of an institution has been revoked under sub-section (1), such institution shall cease to function from the date of such revocation:

Provided that where an appeal lies under section 53 against the order of revocation, such institution shall cease to function,—

(a) where no appeal has been preferred immediately on the expiry of the period prescribed for the filing of such appeal; or

(b) where such appeal has been preferred, but the order of revocation has been upheld, from the date of the order of appeal.

(3) On the revocation of a certificate of registration in respect of an institution, the competent authority may direct that any person with disability who is an inmate of such institution on the date of such revocation, shall be—

(ஆ) எந்த விதிகளுக்கு அல்லது வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு உறுதிச்சான்று வழங்கப்பட்டதோ அந்த விதிகளை அல்லது வரைக்கட்டுகள் எவற்றிலும் மீறுகை செய்திருக்கிறார் அல்லது செய்யும்படி செய்வித்திருக்கிறார் என்றோ

நம்புவதற்குக் காரணம் கொண்டிருக்குமாயின், அது, தான் பொருத்தமெனக் கருதும் அத்தகைய விசாரணையைச் செய்த பின்பு, ஆணையின் வழி, அந்த உறுதிச்சான்றினை முறித்தறவு செய்யலாம்:

**வரம்புரையாக:** அத்தகைய ஆணை எதுவும், பதிவு உறுதிச் சான்று ஏன் முறித்தறவு செய்யப்படக் கூடாது என்பது குறித்துக் காரணங்காட்டுவதற்கு உறுதிச்சான்றை வைத்திருப்பவருக்கு வாய்ப்பு ஒன்று நல்கும் வரையில் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி அமைவனம் ஒன்றைப் பொறுத்த பதிவு உறுதிச்சான்று ஒன்று முறித்தறவு செய்யப்பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய அமைவனம் அத்தகைய முறித்தறவுத் தேதியிலிருந்து செயல்படுதல் அற்றுப்போதல் வேண்டும்:

**வரம்புரையாக:** முறித்தறவு ஆணைக்கு எதிராக 53 ஆம் பிரிவின்படி மேல்முறையீடு ஒன்று அமைந்திருக்கிறவிடத்து, அத்தகைய அமைவனம்,—

(அ) அத்தகைய மேல்முறையீட்டை முன்னிடுவதற்காக வகுத்துரைக்கப்பட்ட காலஅளவு கழிவுறுவதன் பேரில், உடனடியாக மேல்முறையீடு எதுவும் கொணரப்பட்டிராதவிடத்து; அல்லது

(ஆ) அத்தகைய மேல்முறையீடு கொணரப் பட்டிருந்து, ஆனால் முறித்தறவு ஆணை உறுதி செய்யப்பட்டிருக்கிறவிடத்து, மேல்முறையீட்டு ஆணையின் தேதியிலிருந்து,

செயல்படுதல் அற்றுப்போதல் வேண்டும்.

(3) ஓர் அமைவனத்தின் பதிவு உறுதிச்சான்று முறித்தறவு செய்யப்படுவதன் பேரில், தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பு அத்தகைய முறித்தறவுத் தேதியன்று அத்தகைய அமைவனத்தில் தங்கியிருப்பவர்களில் ஒருவராக இருக்கிற மாற்றுத்திறனாளி எவரும் ,—

(a) restored to the custody of his or her parent, spouse or lawful guardian, as the case may be; or

(b) transferred to any other institution specified by the competent authority.

(4) Every institution which holds a certificate of registration which is revoked under this section shall, immediately after such revocation, surrender such certificate to the competent authority.

Appeal.

53. (1) Any person aggrieved by the order of the competent authority refusing to grant a certificate of registration or revoking a certificate of registration may, within such period as may be prescribed by the State Government, prefer an appeal to such appellate authority, as may be notified by the State Government against such refusal or revocation.

(2) The order of the appellate authority on such appeal shall be final.

Act not to apply to institutions established or maintained by Central or State Government.

54. Nothing contained in this Chapter shall apply to an institution for persons with disabilities established or maintained by the Central Government or a State Government.

Assistance to registered institutions.

55. The appropriate Government may within the limits of their economic capacity and development, grant financial assistance to registered institutions to provide services and to implement the schemes and programmes in pursuance of the provisions of this Act.

(அ) நேர்வுக்கேற்ப, அவனுடைய அல்லது அவளுடைய பெற்றோர், வாழ்க்கைத்துணை அல்லது சட்டமுறையான காப்பாளரின் பொறுப்பில் மீண்டும் ஒப்படைக்கப்படுதல் வேண்டும் என்றோ; அல்லது

(ஆ) தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பினால் குறித்துரைக்கப்பட்ட பிற அமைவனம் எதற்கும் மாற்றப்படுதல் வேண்டும் என்றோ,

பணிக்கலாம்.

(4) இந்தப் பிரிவின்படி முறித்தறவு செய்யப்பட்டுள்ள பதிவு உறுதிச்சான்று ஒன்றை வைத்திருக்கும் அமைவனம் ஒவ்வொன்றும், அத்தகைய முறித்தறவிற்கு உடன் பின்பு, அத்தகைய உறுதிச்சான்றினைத் தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பிடம் ஒப்படைத்து விடுதல் வேண்டும்.

53. (1) பதிவு உறுதிச்சான்று ஒன்றை வழங்க மறுத்த அல்லது பதிவு உறுதிச்சான்று ஒன்றை முறித்தறவு செய்த தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பின் ஆணையினால் குறையுற்ற நபர் எவரும், மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலஅளவிற்குள், அத்தகைய மறுப்பு அல்லது முறித்தறவிற்கு எதிராக மாநில அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும், அத்தகைய மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பிடம் மேல்முறையீடு ஒன்றைக் கொணரலாம். மேல்முறையீடு.

(2) அத்தகைய மேல்முறையீட்டின் மீதான மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பின் ஆணை அறுதியானதாகும்.

54. இந்த அத்தியாயத்தில் அடங்கியுள்ள எதுவும், மைய அரசாலோ அல்லது ஒரு மாநில அரசாலோ நிறுவப்பட்ட அல்லது நடத்திவரப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான அமைவனம் ஒன்றுக்குப் பொருந்துதல் ஆகாது. மைய அல்லது மாநில அரசால் நிறுவப்பட்ட அல்லது நடத்திவரப்படும் அமைவனங் களுக்குச் சட்டம் பொருந்து– வதில்லை.

55. உரிய அரசு, அதன் பொருளியல் தகுதிறன் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றின் வரம்புகளுக்கு உட்பட்டு, இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு இணங்க சேவைகள் வழங்குவதற்கும் திட்டங்களையும் செயல்திட்டங்களையும் செயற்படுத்துவதற்கும், பதிவுபெற்ற அமைவனங்களுக்கு நிதியுதவி வழங்கலாம். பதிவு செய்யப்பட்ட அமைவனங்– களுக்கு உதவி.

## CHAPTER X
## CERTIFICATION OF SPECIFIED DISABILITIES

Guidelines for assessment of specified disabilities.

56. The Central Government shall notify guidelines for the purpose of assessing the extent of specified disability in a person.

Designation of certifying authorities.

57. (1) The appropriate Government shall designate persons, having requisite qualifications and experience, as certifying authorities, who shall be competent to issue the certificate of disability.

(2) The appropriate Government shall also notify the jurisdiction within which and the terms and conditions subject to which, the certifying authority shall perform its certification functions.

Procedure for certification.

58. (1) Any person with specified disability, may apply, in such manner as may be prescribed by the Central Government, to a certifying authority having jurisdiction, for issuing of a certificate of disability.

(2) On receipt of an application under sub-section (1), the certifying authority shall assess the disability of the concerned person in accordance with relevant guidelines notified under section 56, and shall, after such assessment, as the case may be,—

(a) issue a certificate of disability to such person, in such form as may be prescribed by the Central Government;

## அத்தியாயம் X

## குறித்துரைக்கப்பட்ட மாற்றுத்திறன்களுக்கு உறுதிச் சான்றளித்தல்

குறித்துரைக்கப்பட்ட மாற்றுத்திறன்களை மதிப்பிடுவதற்கான வழிகாட்டு நெறிகள்.

56. மைய அரசு, ஒருவரிடம் இருக்கும் குறித்துரைக்கப்பட்ட மாற்றுத்திறன் அளவினை மதிப்பீடு செய்யும் நோக்கத்திற்காக, வழிகாட்டு நெறிகளை அறிவிக்கை செய்தல் வேண்டும்.

உறுதிச்சான்றளிக்கும் அதிகாரஅமைப்புகளைப் பெயர்குறித்தமர்த்துதல்.

57. (1) உரிய அரசு, மாற்றுத்திறன் உறுதிச்சான்று வழங்குவதற்குத் தகுதிறமுள்ளவராக இருக்க வேண்டிய, தேவையான தகுதிப்பாடுகளும் பட்டறிவும் கொண்டவர்களை, உறுதிச்சான்றளிக்கும் அதிகாரஅமைப்புகளாகப் பெயர்குறித்தமர்த்துதல் வேண்டும்.

(2) உரிய அரசு, உறுதிச்சான்றளிக்கும் அதிகாரஅமைப்பானது, எந்த அதிகாரவரம்பிற்குள்ளும் மற்றும் எந்த வரையுரைகள் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டும், அதன் உறுதிச்சான்றளித்தல் செயற்பணிகளைப் புரிதல் வேண்டும் என்பதையும் கூட அறிவிக்கை செய்தல் வேண்டும்.

உறுதிச் சான்றளிப்பதற்கான நெறிமுறை.

58. (1) குறித்துரைக்கப்பட்ட மாற்றுத்திறனுடைய எவரும், மாற்றுத்திறன் உறுதிச்சான்று ஒன்று வழங்கப்படுவதற்காக, மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், அதிகாரவரம்புடைய உறுதிச்சான்றளிக்கும் அதிகாரஅமைப்பு ஒன்றுக்கு விண்ணப்பிக்கலாம்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி, விண்ணப்பமொன்றைப் பெற்றதன் பேரில், உறுதிச்சான்றளிக்கும் அதிகாரஅமைப்பு, 56 ஆம் பிரிவின்படி அறிவிக்கை செய்யப்பட்ட தொடர்புடைய வழிகாட்டுநெறிகளின்படி சார்புடைய நபருக்குள்ள மாற்றுத்திறனை மதிப்பீடு செய்தல் வேண்டும் மற்றும் அத்தகைய மதிப்பீட்டிற்குப் பின்பு, நேர்வுக்கேற்ப,–

(அ) மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வடிவத்தில், மாற்றுத்திறன் உறுதிச்சான்று ஒன்றை அத்தகைய நபருக்கு வழங்குதலோ;

(b) inform him in writing that he has no specified disability.

(3) The certificate of disability issued under this section shall be valid across the country.

Appeal against a decision of certifying authority.

59. (1) Any person aggrieved with decision of the certifying authority, may appeal against such decision, within such time and in such manner as may be prescribed by the State Government, to such appellate authority as the State Government may designate for the purpose.

(2) On receipt of an appeal, the appellate authority shall decide the appeal in such manner as may be prescribed by the State Government.

## CHAPTER XI

## CENTRAL AND STATE ADVISORY BOARDS ON DISABILITY AND DISTRICT LEVEL COMMITTEE

Constitution of Central Advisory Board on Disability.

60. (1) The Central Government shall, by notification, constitute a body to be known as the Central Advisory Board on Disability to exercise the powers conferred on, and to perform the functions assigned to it, under this Act.

(2) The Central Advisory Board shall consist of,—

(a) the Minister in charge of Department of Disability Affairs in the Central Government, Chairperson, ex officio;

(b) the Minister of State in charge dealing with Department of Disability Affairs in the Ministry in the Central Government, Vice Chairperson, ex officio;

(c) three Members of Parliament, of whom two shall be elected by Lok Sabha and one by the Rajya Sabha, Members, ex officio;

(ஆ) அவர் குறித்துரைக்கப்பட்ட மாற்றுத்திறனை கொண்டிருக்கவில்லை என்று எழுத்து வடிவில் அவருக்குத் தெரிவித்தலோ,

வேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி வழங்கப்படும் மாற்றுத்திறன் உறுதிச்சான்று, நாடு முழுவதிலும் செல்லுந்தன்மையுடையது ஆகும்.

உறுதிச் சான்றளிக்கும் அதிகார அமைப்பின் முடிபு ஒன்றுக்கு எதிராக மேல்முறையீடு.

59. (1) உறுதிச்சான்றளிக்கும் அதிகாரஅமைப்பின் முடிபினால் குறையுற்ற நபர் எவரும், அத்தகைய முடிபுக்கு எதிராக, மேல்முறையீடு செய்யும் நோக்கத்திற்காக மாநில அரசு பெயர்குறித்தமர்த்தும் அத்தகைய மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பிற்கு, மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள்ளும் மற்றும் அத்தகைய முறையிலும் மேல்முறையீடு செய்யலாம்.

(2) மேல்முறையீடு ஒன்றைப் பெற்றதன் பேரில், மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பு, மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மேல்முறையீட்டை முடிபு செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் XI

## மாற்றுத்திறனுக்கான மைய மற்றும் மாநில அறிவுரைக் குழுமங்களும் மாவட்ட அளவிலான குழுவும்

மாற்றுத் திறனுக்கான மைய அறிவுரைக் குழுமத்தை அமைத்தல்.

60. (1) மைய அரசு, அறிவிக்கை வாயிலாக, மாற்றுத்திறனுக்கான மைய அறிவுரைக் குழுமம் எனப்படும் குழுமம் ஒன்றை இந்தச் சட்டத்தின்படி, அதற்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதற்கும், அதற்குக் குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளைப் புரிவதற்கும், அமைத்தல் வேண்டும்.

(2) மைய அறிவுரைக் குழுமம்,—

(அ) மைய அரசில் மாற்றுத்திறன் அலுவற்பாடுகள் துறையின் பொறுப்பைக் கொண்ட அமைச்சர், **பதவிவழித்** தலைமையர் ;

(ஆ) மைய அரசில் மாற்றுத்திறன் அலுவற்பாடுகள் துறையினைக் கையாளும் அமைச்சகத்தின் பொறுப்பைக் கொண்ட இணை அமைச்சர் , **பதவிவழித்** துணைத் தலைமையர்;

(இ) நாடாளுமன்றத்தின் மூன்று உறுப்பினர்கள், அவர்களில் இருவர் மக்களவையாலும், ஒருவர் மாநிலங்களவையாலும் தேர்ந்தெடுக்கப் பெறுபவர், **பதவிவழி** உறுப்பினர்கள் ;

(d) the Ministers in charge of Disability Affairs of all States and Administrators or Lieutenant Governors of the Union territories, Members, ex officio;

(e) Secretaries to the Government of India in charge of the Ministries or Departments of Disability Affairs, Social Justice and Empowerment, School Education and Literacy, and Higher Education, Women and Child Development, Expenditure, Personnel and Training, Administrative Reforms and Public Grievances, Health and Family Welfare, Rural Development, Panchayati Raj, Industrial Policy and Promotion, Urban Development, Housing and Urban Poverty Alleviation, Science and Technology, Communications and Information Technology, Legal Affairs, Public Enterprises, Youth Affairs and Sports, Road Transport and Highways and Civil Aviation, Members, ex officio;

(f) Secretary, National Institute of Transforming India (NITI) Aayog, Member, ex officio;

(g) Chairperson, Rehabilitation Council of India, Member, ex officio;

(h) Chairperson, National Trust for the Welfare of Persons with Autism, Cerebral Palsy, Mental Retardation and Multiple Disabilities, Member, ex officio;

(i) Chairman-cum-Managing Director, National Handicapped Finance Development Corporation, Member, ex officio;

(j) Chairman-cum-Managing Director, Artificial Limbs Manufacturing Corporation, Member, ex officio

(k) Chairman, Railway Board, Member, ex officio;

(ஈ) அனைத்து மாநிலங்களின் மாற்றுத்திறன் அலுவற்பாடுகளின் பொறுப்பைக் கொண்ட அமைச்சர்கள் மற்றும் ஒன்றியத்து ஆட்சிநிலவரைகளின் ஆளுகையர்கள் அல்லது துணை நிலை ஆளுநர்கள், **பதவிவழி** உறுப்பினர்கள் ;

(உ) மைய அரசின் மாற்றுத்திறன் அலுவற்பாடுகள், சமூக நீதி மற்றும் உரிமையளித்தல், பள்ளிக் கல்வி மற்றும் எழுத்தறிவு மற்றும் உயர் கல்வி, பெண்கள் மற்றும் சிறார் மேம்பாடு, செலவினம், பணியாளர் மற்றும் பயிற்சி, நிருவாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைகள், நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம், ஊரக வளர்ச்சி, ஊராட்சி ஆளுகை, தொழிற்துறைக் கொள்கை மற்றும் வளர்ச்சி, நகர்ப்புற வளர்ச்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், செய்தித்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம், சட்ட அலுவற்பாடுகள், பொதுத்துறை வணிகத்தொழில்கள், இளைஞர் அலுவற்பாடுகள் மற்றும் விளையாட்டுகள், சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் மற்றும் குடியியல் வான்வழிப் பயணம் ஆகிய அமைச்சகங்களின் அல்லது துறைகளின் பொறுப்பைக் கொண்ட இந்திய அரசு செயலாளர்கள், **பதவிவழி** உறுப்பினர்கள்;

(ஊ) இந்தியாவின் மாற்றத்திற்கான தேசிய நிறுவனம் (NITI) ஆயோக் இன் செயலாளர், **பதவிவழி** உறுப்பினர் ;

(எ) இந்திய மறுவாழ்வளிப்பு மன்றத்தின் தலைமையர், **பதவிவழி** உறுப்பினர்;

(ஏ) தற்புனைவுஆழ்வு, மூளைச் சீர்குலைவு, மனவளர்ச்சி குறைபாடு மற்றும் பல்வகை மாற்றுத்திறன்களை உடைய நபர்களின் நலவாழ்விற்கான தேசியப் பொறுப்புக்கட்டளைத் தலைமையர், **பதவிவழி** உறுப்பினர் ;

(ஐ) குறைபாடுடையோர் நிதி மேம்பாட்டுத் தேசிய கழகத் தலைமையாளர் மற்றும் மேலாண்மை இயக்குநர், **பதவிவழி** உறுப்பினர் ;

(ஒ) செயற்கை இயக்க உறுப்புகள் உற்பத்திக் கழகத் தலைமையாளர் மற்றும் மேலாண்மை இயக்குநர், **பதவிவழி** உறுப்பினர் ;

(ஓ) இருப்பூர்திய வாரியத் தலைமையாளர், **பதவிவழி** உறுப்பினர் ;

(l) Director-General, Employment and Training, Ministry of Labour and Employment, Member, ex officio;

(m) Director, National Council for Educational Research and Training, Member, ex officio;

(n) Chairperson, National Council of Teacher Education, Member, ex officio;

(o) Chairperson, University Grants Commission, Member, ex officio;

(p) Chairperson, Medical Council of India, Member, ex officio;

(q) Directors of the following Institutes:—

(i) National Institute for the Visually Handicapped, Dehradun;

(ii) National Institute for the Mentally Handicapped, Secunderabad;

(iii) Pandit Deen Dayal Upadhyay Institute for the Physically Handicapped, New Delhi;

(iv) Ali Yavar Jung National Institute for the Hearing Handicapped, Mumbai;

(v) National Institute for the Orthopaedically Handicapped, Kolkata;

(vi) National Institute of Rehabilitation Training and Research, Cuttack;

(vii) National Institute for Empowerment of Persons with Multiple Disabilities, Chennai;

(vii) National Institute for Mental Health and Sciences, Bangalore;

(ஔ) தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சிக்கான, தலைமை இயக்குநர், **பதவிவழி** உறுப்பினர் ;

(க) கல்விசார் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசிய மன்ற இயக்குநர், **பதவிவழி** உறுப்பினர் ;

(ங) தேசிய ஆசிரியர் கல்வி மன்றத் தலைமையர், **பதவிவழி** உறுப்பினர் ;

(ச) பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைமையர், **பதவிவழி** உறுப்பினர் ;

(ஞ) இந்திய மருத்துவ மன்ற தலைமையர், **பதவிவழி** உறுப்பினர் ;

(ட) பின்வரும் நிறுவனங்களின் இயக்குநர்கள்:–

(i) பார்வைத்திறன் குறைபாடுடைய–வருக்கான தேசிய நிறுவனம், டேராடூன்;

(ii) மனவளர்ச்சிக் குறைபாடுடை–யோருக்கான தேசிய நிறுவனம், செக்கந்திராபாத்;

(iii) பண்டித தீன் தயாள் உபாத்யாயா உடல்திறன் குறைபாடுடையோருக்கான நிறுவனம், புது தில்லி ;

(iv) அலி யவார்ஜங் செவித்திறன் குறைபாடுடையோருக்கான தேசிய நிறுவனம், மும்பை ;

(v) எலும்புசார் குறைபாடுடையோருக்கான தேசிய நிறுவனம், கொல்கத்தா ;

(vi) மறுவாழ்வளிப்புப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் தேசிய நிறுவனம், கட்டாக் ;

(vii) பல்வகை மாற்றுத்திறனுடைய–வர்களுக்கு உரிமையளிப்பதற்கான தேசிய நிறுவனம், சென்னை;

(viii) மன நலம் மற்றும் அறிவியல் தேசிய நிறுவனம், பெங்களூரு;

(ix) Indian Sign Language Research and Training Centre, New Delhi, Members, ex officio;

(r) Members to be nominated by the Central Government,—

(i) five Members who are experts in the field of disability and rehabilitation;

(ii) ten Members, as far as practicable, being persons with disabilities, to represent non - Governmental Organisations concerned with disabilities or disabled persons organisations:

Provided that out of the ten Members nominated, at least, five Members shall be women and at least one person each shall be from the Scheduled Castes and the Scheduled Tribes;

(iii) up to three representatives of national level chambers of commerce and industry;

(s) Joint Secretary to the Government of India dealing with the subject of disability policy, Member-Secretary, ex officio.

Terms and conditions of Service of members.

61. (1) Save as otherwise provided under this Act, a Member of the Central Advisory Board nominated under clause (r) of sub-section (2) of section 60 shall hold office for a term of three years from the date of his nomination:

Provided that such a Member shall, notwithstanding the expiration of his term, continue to hold office until his successor enters upon his office.

(ix) இந்தியச் சைகை மொழி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், புது தில்லி,

**பதவிவழி** உறுப்பினர்கள் ;

(ண) மைய அரசால் நியமனம் செய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள்,–

(i) மாற்றுத்திறன் மற்றும் மறுவாழ்வளிப்புக் களத்தில் வல்லுநர்களாக இருக்கிற ஐந்து உறுப்பினர்கள்;

(ii) மாற்றுத்திறன்கள் தொடர்புடைய அரசுசாரா அமைப்புகளை அல்லது மாற்றுத்திறன் அமைப்புகளைச் சார்பாற்றம் செய்வதற்கு, நடைமுறையில் இயலுமளவுக்கு, மாற்றுத்திறனாளிகளாக இருக்கும் பத்து உறுப்பினர்கள்:

**வரம்புரையாக:** நியமனம் செய்யப்படும் பத்து உறுப்பினர்களில், குறைந்தது ஐந்து உறுப்பினர்களேனும் பெண்களாக இருத்தல் வேண்டும்; மற்றும் பட்டியலில்கண்ட சாதியினர், பட்டியலில்கண்ட பழங்குடியினர் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் இருந்து குறைந்தது ஒருவரேனும் இருத்தல் வேண்டும்;

(iii) வாணிபம் மற்றும் விசைத்தொழில் தேசிய நிலைச் சங்கங்களின் மூன்று சார்பாற்றுநர்கள் வரை ;

(த) மாற்றுத்திறன் கொள்கை பொருட்–பாடுகளைக் கையாளும் இந்திய அரசு இணைச் செயலாளர், *பதவிவழி* உறுப்பினர் செயலாளர், ஆகியோரைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

உறுப்பினர்–களுக்கான பணிவரை–யுரைகளும் பணிவரைக்–கட்டுகளும்.

61. (1) இந்தச் சட்டத்தின்படி பிறவாறாக வகைசெய்யப்பட்டிருப்பது நீங்கலாக, 60 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ண) கூறின்படி நியமனம் செய்யப்பட்ட மைய அறிவுரைக் குழுமத்தின் உறுப்பினர் ஒருவர் அவருடைய நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுக் காலவரை ஒன்றுக்குப் பதவி வகிப்பார்:

**வரம்புரையாக:** அத்தகைய உறுப்பினர் ஒருவர், அவர்தம் பதவிக் காலம் கழிவுற்றபோதிலும் அவருக்கு அடுத்துவருபவர், பதவி ஏற்கும் வரையில் தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்.

(2) The Central Government may, if it thinks fit, remove any Member nominated under clause (r) of sub-section (2) of section 60, before the expiry of his term of office after giving him a reasonable opportunity of showing cause against the same.

(3) A Member nominated under clause (r) of sub-section (2) of section 60 may at any time resign his office by writing under his hand addressed to the Central Government and the seat of the said Member shall thereupon becomes vacant.

(4) A casual vacancy in the Central Advisory Board shall be filled by a fresh nomination and the person nominated to fill the vacancy shall hold office only for the remainder of the term for which the Member in whose place he was so nominated.

(5) A Member nominated under sub-clause (i) or sub-clause (iii) of clause (r) of sub-section (2) of section 60 shall be eligible for renomination.

(6) The Members nominated under sub-clause (i) and sub-clause (ii) of clause (r) of sub-section (2) of section 60 shall receive such allowances as may be prescribed by the Central Government.

Disqualifications.

62. (1) No person shall be a Member of the Central Advisory Board, who

(a) is, or at any time has been, adjudged insolvent or has suspended payment of his debts or has compounded with his creditors, or

(2) மைய அரசு, அது பொருத்தமெனக் கருதுமாயின், 60 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ண) கூறின்படி நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் எவரையும், அவருடைய பதவிக்காலம் கழிவுறுவதற்கு முன்பே, பணியறவு செய்வதற்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கான தகுமான வாய்ப்பு ஒன்றை அவருக்கு நல்கிய பின்பு பணியறவு செய்யலாம்.

(3). 60 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ண) கூறின்படி, நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் எச்சமயத்திலும் தம் கையொப்பமிட்டு எழுத்துவழி மைய அரசுக்குத் தெரிவித்துத் தன் பதவியை விட்டு விலகிக்கொள்ளலாம்; மேலும் மேற்சொன்ன உறுப்பினரின் பதவியிடம் அதன் பேரில் காலியாதல் வேண்டும்.

(4) மைய அறிவுரைக் குழுமத்தில் இடையெழும் காலியிடம் ஒன்று புதிய நியமனம் ஒன்றின் மூலம் நிரப்பப்படுதல் வேண்டும்; மற்றும் அந்தக் காலியிடத்தை நிரப்புவதற்கு நியமனம் செய்யப்படும் நபர் அவர் எந்த உறுப்பினருக்குப் பதிலாக அவ்வாறு நியமனம் செய்யப்பட்டாரோ அந்த உறுப்பினரின் எஞ்சிய பதவிக் காலத்திற்கு மட்டுமே பதவி வகிப்பார்.

(5).60 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்(ண) கூறின் (i) ஆம் உட்கூறின்படியோ அல்லது (iii) ஆம் உட்கூறின்படியோ நியமனம் செய்யப்பட்ட ஓர் உறுப்பினர் மறுநியமனம் செய்யப்படுவதற்குத் தகுமையுடையவர் ஆவார்.

(6)·60 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ண) கூறின் (i) ஆம் உட்கூறு மற்றும் (ii) ஆம் உட்கூறு ஆகியவற்றின்படி நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படித்தொகைகளைப் பெறுவர்.

தகுதிக்கேடுகள்.

62. (1). (அ) நொடித்துப்போனவர் என்று தீர்ப்பளிக்கப்பட்ட, அல்லது எச்சமயத்திலேனும் தீர்ப்பளிக்கப்பட்டிருந்திருக்கிற, அல்லது அவருடைய உறுகடன்களின் செலுத்தத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிற அல்லது தமக்குக் கடன் கொடுத்தவர்களுடன் இணக்கம் செய்து கொண்டிருக்கிற, அல்லது

(b) is of unsound mind and stands so declared by a competent court, or

(c) is, or has been, convicted of an offence which, in the opinion of the Central Government, involves moral turpitude, or

(d) is, or at any time has been, convicted of an offence under this Act, or

(e) has so abused his position in the opinion of the Central Government as a Member so as to render his continuance in the office is prejudicial interests of the general public.

(2) No order of removal shall be made by the Central Government under this section unless the Member concerned has been given a reasonable opportunity of showing cause against the same.

(3) Notwithstanding anything contained in sub-section (1) or sub-section (5) of section 61, a Member who has been removed under this section shall not be eligible for renomination as a Member.

Vacation of seats by Members.

63.If a Member of the Central Advisory Board becomes subject to any of the disqualifications specified in section 62, his seat shall become vacant.

Meetings of the Central Advisory Board on disability.—

64. The Central Advisory Board shall meet at least once in every six months and shall observe such rules of procedure in regard to the transaction of business at its meetings as may be prescribed.

(ஆ) பித்துப்பிடித்தவராக இருக்கிற மற்றும் தகுதிறமுள்ள நீதிமன்றம் ஒன்றினால் அத்தகையவரென விளம்பப்பெறுகிற, அல்லது

(இ) ஒழுக்கக்கேட்டிற்கு உள்ளாகிறது என மைய அரசு கருதும் ஒரு குற்றச்செயலுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட, அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்–பட்டிருந்திருக்கிற, அல்லது

(ஈ) இந்தச் சட்டத்தின்படி, ஒரு குற்றச்செயலுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது எச்சமயத்திலேனும் குற்றத் தீர்ப்பளிக்கப் பட்டிந்திருக்கிற, அல்லது

(உ) ஓர் உறுப்பினராகப் பதவியில் அவர் தொடர்ந்திருப்பது பொதுமக்களின் நலன்களுக்குக் குந்தகமாக இருக்கிறதென மைய அரசு கருதுகிறவாறு தம் பதவிநிலையை நெறித்தவறிப் பயன்படுத்தியிருக்கிற,

எந்தவொரு நபரும், மைய அறிவுரைக் குழுமத்தின் ஓர் உறுப்பினராக இருத்தல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி பணியறவு செய்யப்படுவதற்கு எதிராகக் காரணம் காட்டுவதற்குத் தொடர்புடைய உறுப்பினருக்குத் தகுமான வாய்ப்பொன்று நல்கப்பட்டிருந்தாலன்றி, பணியறவு ஆணை எதுவும் மைய அரசால் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(3) 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலோ அல்லது (5) ஆம் உட்பிரிவிலோ அடங்கிய எது எவ்வாறிருப்பினும், இந்தப் பிரிவின்படி பணியறவு செய்யப்பட்டிருக்கிற உறுப்பினர் ஒருவர் உறுப்பினராக மறுநியமனம் செய்யப்படுவதற்குத் தகுமையுடையவர் ஆகார்.

உறுப்பினர்கள் பதவியிடங்கள் காலியிடமாதல்.

63. மைய அறிவுரைக் குழுமத்தின் உறுப்பினர் ஒருவர் 62 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதிக்கேடுகளில் எதற்கும் உள்ளாவாராயின், அவருடைய பதவியிடம் காலியாதல் வேண்டும்.

மாற்றுத்–திறனுக்கான மைய அறிவுரைக் குழுமத்தின் கூட்டங்கள்.

64. மைய அறிவுரைக் குழுமம் ஒவ்வோர் ஆறு மாதங்களுக்குக் குறைந்தது ஒரு முறையேனும் கூடுதல் வேண்டும்; மற்றும் அதன் கூட்டங்களில், அலுவல் நடத்துவது பொறுத்து வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நடைமுறை விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

Functions of Central Advisory Board on disability.

65. (1) Subject to the provisions of this Act, the Central Advisory Board on disability shall be the national-level consultative and advisory body on disability matters, and shall facilitate the continuous evolution of a comprehensive policy for the empowerment of persons with disabilities and the full enjoyment of rights.

(2) In particular and without prejudice to the generality of the foregoing provisions, the Central Advisory Board on disability shall perform the following functions, namely:—

(a) advise the Central Government and the State Governments on policies, programmes, legislation and projects with respect to disability;

(b) develop a national policy to address issues concerning persons with disabilities;

(c) review and coordinate the activities of all Departments of the Government and other Governmental and non-Governmental Organisations which are dealing with matters relating to persons with disabilities;

(d) take up the cause of persons with disabilities with the concerned authorities and the international organisations with a view to provide for schemes and projects for the persons with disabilities in the national plans;

(e) recommend steps to ensure accessibility, reasonable accommodation, non-discrimination for persons with disabilities vis-a-vis information, services and the built environment and their participation in social life;

65. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, மாற்றுத்திறனுக்கான மைய அறிவுரைக் குழுமமானது, மாற்றுத்திறன் பொருட்பாடுகள் மீதான தேசியநிலைக் கலந்தாய்வு மற்றும் அறிவுரைக்குழுமமாக இருக்கும் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உரிமையளிப்பதற்கும் உரிமைகளை முழுமையாகத் துய்ப்பதற்கும் ஒரு முழுமையான கொள்கை ஒன்றினைத் தொடர்ந்து உருவாக்குவதற்கும் வழிவகுத்தல் வேண்டும். மாற்றுத்– திறனுக்கான மைய அறிவுரைக் குழுமத்தின் செயற்பணிகள்.

(2) குறிப்பாகவும் மேலே கண்ட வகையங்களின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், மாற்றுத்திறனுக்கான மைய அறிவுரைக் குழுமம் பின்வரும் செயற்பணிகளைப் புரிதல் வேண்டும், அவையாவன:–

(அ) மாற்றுத்திறன் பொறுத்த கொள்கைகள், செயல் திட்டங்கள், சட்டமியற்றல் மற்றும் செயல்முறைத் திட்டங்கள் மீது மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் அறிவுரை வழங்குதல்;

(ஆ) மாற்றுத்திறனாளிகள் தொடர்புடைய பிரச்சினைகளைக் கையாளுவதற்குத் தேசிய கொள்கை ஒன்றை உருவாக்குதல்;

(இ) மாற்றுத்திறனாளிகள் தொடர்பான பொருட்பாடுகளைக் கையாளும் அனைத்து அரசு துறைகள் மற்றும் பிற அரசுசார் மற்றும் அரசுசாரா அமைப்புகளின் செயல்பாடுகளை மறுஆய்வு செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்;

(ஈ) தேசிய திட்டங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான திட்டங்களுக்கும் செயல்முறைத் திட்டங்களுக்கும் வகைசெய்யும் பொருட்டு, தொடர்புடைய அதிகாரஅமைப்புகளிடமும் பன்னாட்டிடை அமைப்புகளிடமும் மாற்றுத்திறனாளிகளுக்கான செயல்நோக்கத்தைக் கொண்டுசெல்லுதல்;

(உ) மாற்றுத்திறனாளிகளுக்குத் தகவல், சேவைகள் மற்றும் கட்டமைக்கப்பட்ட சூழல் மற்றும் அவர்கள் சமுதாய வாழ்க்கையில் பங்குகொள்ளுதல் ஆகியவை பொறுத்து அணுகும் வாய்ப்பு, தகுமான இணக்கம், வேற்றுமை காட்டாமை ஆகியவற்றை உறுதிசெய்வதற்கு நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்;

(f) monitor and evaluate the impact of laws, policies and programmes to achieve full participation of persons with disabilities; and

(g) such other functions as may be assigned from time to time by the Central Government.

State Advisory Board on disability.

66. (1) Every State Government shall, by notification, constitute a body to be known as the State Advisory Board on disability to exercise the powers conferred on, and to perform the function assigned to it, under this Act.

(2) The State Advisory Board shall consist of—

(a) the Minister in charge of the Department in the State Government dealing with disability matters, Chairperson, ex officio;

(b) the Minister of State or the Deputy Minister in charge of the Department in the State Government dealing with disability matters, if any, Vice-Chairperson, ex officio;

(c) secretaries to the State Government in charge of the Departments of Disability Affairs, School Education, Literacy and Higher Education, Women and Child Development, Finance, Personnel and Training, Health and Family Welfare, Rural Development, Panchayati Raj, Industrial Policy and Promotion, Labour and Employment, Urban Development, Housing and Urban Poverty Alleviation, Science and Technology, Information Technology, Public Enterprises, Youth Affairs and Sports, Road Transport and any other Department, which the State Government considers necessary, Members, ex officio;

(ஊ) மாற்றுத்திறனாளிகள் முழுமையாகப் பங்குகொள்வதை எய்துவதற்கு,சட்டங்கள், கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்களின் விளைவைத் தொடர்ந்து கண்காணித்து மதிப்பீடு செய்தல்; மற்றும்

(எ) மைய அரசால் அவ்வப்போது குறித்தளிக்கப்படலாகும் அத்தகைய பிற செயற்பணிகள்.

66. (1) ஒவ்வொரு மாநில அரசும் அறிவிக்கை வாயிலாக, மாற்றுத்திறனுக்கான மாநில அறிவுரைக் குழுமம் எனப்படும் குழுமம் ஒன்றை, இந்தச்சட்டத்தின்படி அதற்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதற்கும், குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளைப் புரிவதற்கும் அமைத்தல் வேண்டும். மாற்றுத்–திறனுக்கான மாநில அறிவுரைக் குழுமம்.

(2) மாநில அறிவுரைக் குழுமம் .–

(அ) மாநில அரசில் மாற்றுத்திறன் பொருட்பாடுகளைக் கையாளும் துறையின் பொறுப்பைக் கொண்ட அமைச்சர், **பதவிவழித்** தலைமையர் ;

(ஆ) மாநில அரசில் மாற்றுத்திறன் பொருட்பாடுகளைக் கையாளும் துறையின் பொறுப்பைக் கொண்ட இணை அமைச்சர் அல்லது துணை அமைச்சர், எவரேனுமிருப்பின், அவர், **பதவிவழித்** துணைத் தலைமையர் ;

(இ) மாற்றுத்திறன் அலுவற்பாடுகள், பள்ளிக் கல்வி, எழுத்தறிவு மற்றும் உயர் கல்வி, பெண்கள் மற்றும் சிறார் மேம்பாடு, நிதி, பணியாளர்கள் மற்றும் பயிற்சி, நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம், ஊரக வளர்ச்சி, ஊராட்சி ஆளுகை, தொழிற் துறைக் கொள்கை மற்றும் வளர்ச்சி, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, நகர்ப்புற வளர்ச்சி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், பொதுத்துறை வணிகத்தொழில்கள், இளைஞர் அலுவற்பாடுகள் மற்றும் விளையாட்டுகள், சாலைப் போக்குவரத்து மற்றும் மாநில அரசு தேவையெனக் கருதும் பிற துறை எதுவும் ஆகிய துறைகளின் பொறுப்பைக் கொண்ட மாநில அரசு செயலாளர்கள், **பதவிவழி** உறுப்பினர்கள் ;

(d) three Members of the State Legislature of whom two shall be elected by the Legislative Assembly and one by the Legislative Council, if any, and where there is no Legislative Council, three Members shall be elected by the Legislative Assembly, Members, ex officio;

(e) Members to be nominated by the State Government:—

(i) five Members who are experts in the field of disability and rehabilitation;

(ii) five Members to be nominated by the State Government by rotation to represent the districts in such manner as may be prescribed:

Provided that no nomination under this sub-clause shall be made except on the recommendation of the district administration concerned;

(iii) ten persons as far as practicable, being persons with disabilities, to represent non-Governmental Organisations or associations which are concerned with disabilities:

Provided that out of the ten persons nominated under this clause, at least, five shall be women and at least one person each shall be from the Scheduled Castes and the Scheduled Tribes;

(iv) not more than three representatives of the State Chamber of Commerce and Industry;

(ஈ) மாநிலச் சட்டமன்றத்தின் மூன்று உறுப்பினர்கள், அவர்களில் இருவர் சட்டமன்றப் பேரவையினாலும் மற்றும் ஒருவர் சட்டமன்ற மேலவை ஏதுமிருப்பின், அதனாலும் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்; மற்றும் சட்டமன்ற மேலவை இல்லாதவிடத்து, மூன்று உறுப்பினர்களும் சட்டமன்றப் பேரவையினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும், பதவிவழி உறுப்பினர்கள் ;

(உ) மாநில அரசால் நியமனம் செய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள்:—

(i) மாற்றுத்திறன் மற்றும் மறுவாழ்—வளிப்புக் களத்தில் வல்லுநர்களாக இருக்கும் ஐந்து உறுப்பினர்கள்;

(ii) மாவட்டங்களைச் சார்பாற்றம் செய்வதற்கு மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய முறையில் சுழற்சிமுறையில் நியமனம் செய்யப்பட வேண்டிய ஐந்து உறுப்பினர்கள்:

**வரம்புரையாக:** இந்த உட்கூறின்படியான நியமனம் எதுவும் தொடர்புடைய மாவட்ட நிருவாகத்தின் பரிந்துரையின்பேரில் அல்லாமல் செய்யப்படுதல் ஆகாது.

(iii) மாற்றுத்திறன்கள் தொடர்புடைய அரசுசாரா அமைவனங்களை அல்லது சங்கங்களைச் சார்பாற்றம் செய்வதற்கு, நடைமுறையில் இயலுமளவு, மாற்றுத் திறனாளிகளாக இருக்கும் பத்து நபர்கள்:

**வரம்புரையாக:** இந்தக் கூறின்படி நியமிக்கப்படும் பத்து நபர்களில் குறைந்தது ஐவரேனும் பெண்களாக இருத்தல் வேண்டும்; மற்றும் பட்டியலில்கண்ட சாதி, பட்டியலில்கண்ட பழங்குடிகளில் இருந்து ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒருவரேனும் இருத்தல் வேண்டும்.

(iv) மாநில வாணிபம் மற்றும் விசைத்தொழில் சங்கத்தின் மூன்று சார்பாற்றுநர்களுக்கு மேற்படாமல்;

(f) officer not below the rank of Joint Secretary in the Department dealing with disability matters in the State Government, Member-Secretary, ex officio.

Terms and conditions of service of Members.

67. (1) Save as otherwise provided under this Act, a Member of the State Advisory Board nominated under clause (e) of sub-section (2) of section 66, shall hold office for a term of three years from the date of his nomination:

Provided that such a Member shall, notwithstanding the expiration of his term, continue to hold office until his successor enters upon his office.

(2) The State Government may, if it thinks fit, remove any Member nominated under clause (e) of sub-section (2) of section 66, before the expiry of his term of office after giving him a reasonable opportunity of showing cause against the same.

(3) A Member nominated under clause (e) of sub-section (2) of section 66 may at any time resign his office by writing under his hand addressed to the State Government and the seat of the said Member shall thereupon become vacant.

(4) A casual vacancy in the State Advisory Board shall be filled by a fresh nomination and the person nominated to fill the vacancy shall hold office only for the remainder of the term for which the Member in whose place he was so nominated.

(5) A Member nominated under sub-clause (i) or sub-clause (iii) of clause (e) of sub-section (2) of section 66 shall be eligible for renomination.

(ஊ) மாநில அரசில் மாற்றுத்திறன் பொருட்பாடுகளைக் கையாளும் துறையில் இணைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத அலுவலர், **பதவிவழி** உறுப்பினர் செயலாளர்,

ஆகியோரைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

உறுப்பினர்–களுக்கான பணி வரையுரைகளும் வரைக்கட்டு–களும்.

67. (1) இந்தச் சட்டத்தின்படி பிறவாறாக வகைசெய்யப்பட்டிருப்பது நீங்கலாக, 66 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) கூறின்படி நியமனம் செய்யப்பட்ட மாநில அறிவுரைக் குழுமத்தின் உறுப்பினர் ஒருவர், அவருடைய நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுக் காலவரை ஒன்றுக்குப் பதவி வகிப்பார்:

**வரம்புரையாக:** அத்தகைய உறுப்பினர் ஒருவர், அவர்தம் பதவிக்காலம் கழிவுற்றபோதிலும், அவருக்கு அடுத்து வருபவர் அவர்தம் பதவியை ஏற்கும் வரையில் தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்.

(2) மாநில அரசு, தாம் பொருத்தமெனக் கருதுமாயின் 66 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) கூறின்படி நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் எவரையும், அவருடைய பதவிக் காலம் கழிவுறுவதற்கு முன்பே, பணியறவு செய்வதற்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கான தகுமான வாய்ப்பு ஒன்றை அவருக்கு நல்கிய பின்பு பணியறவு செய்யலாம்.

(3) 66 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) கூறின்படி நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் எச்சமயத்திலும், தம் கையொப்பமிட்டு எழுத்து வழி மாநில அரசுக்குத் தெரிவித்துத் தன் பதவியை விட்டு விலகிக்கொள்ளலாம்; மேலும் மேற்சொன்ன உறுப்பினரின் பதவியிடம் அதன் பேரில் காலியாதல் வேண்டும்.

(4) மாநில அறிவுரைக் குழுமத்தில் இடையெழும் காலியிடம் ஒன்று புதிய நியமனம் மூலமாக நிரப்பப்படுதல் வேண்டும்; மற்றும் அந்தக் காலியிடத்தை நிரப்புவதற்கு நியமனம் செய்யப்படும் நபர் அவர் எந்த உறுப்பினருக்குப் பதிலாக அவ்வாறு நியமனம் செய்யப்பட்டாரோ அந்த உறுப்பினரின் எஞ்சிய பதவிக்காலத்திற்கு மட்டுமே பதவி வகிப்பார்.

(5) 66 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) கூறின் (i) ஆம் உட்கூறின்படியோ அல்லது (iii) ஆம் உட்கூறின்படியோ நியமனம் செய்யப்பட்டஉறுப்பினர் ஒருவர் மறுநியமனம் செய்யப்படுவதற்குத் தகுமையுடையவர் ஆவார்.

(6) The Members nominated under sub-clause (i) and sub-clause (ii) of clause (e) of sub-section (2) of section 66 shall receive such allowances as may be prescribed by the State Government.

Disqualification.

68. (1) No person shall be a Member of the State Advisory Board, who—

(a) is, or at any time has been, adjudged insolvent or has suspended payment of his debts or has compounded with his creditors, or

(b) is of unsound mind and stands so declared by a competent court, or

(c) is, or has been, convicted of an offence which, in the opinion of the State Government, involves moral turpitude, or

(d) is, or at any time has been, convicted of an offence under this Act, or

(e) has so abused in the opinion of the State Government his position as a Member as to render his continuance in the State Advisory Board detrimental to the interests of the general public.

(2) No order of removal shall be made by the State Government under this section unless the Member concerned has been given a reasonable opportunity of showing cause against the same.

(6) 66. ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (உ) கூறின் (i) ஆம் உட்கூறு மற்றும் (ii) ஆம் உட்கூறின்படி நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள் மாநில அரசால், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படித்தொகைகளைப் பெறுவர்.

68. எந்த நபரும்,– தகுதிக்கேடு.

(1). (அ) நொடித்துப்போனவர் என்று தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது எச்சமயத்திலேனும் தீர்ப்பளிக்கப்பட்டிருந்திருக்கிற அல்லது அவருடைய உறுகடன்கள் செலுத்தத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிற அல்லது தனக்குக் கடன் கொடுத்தவர்களுடன் இணக்கம் செய்து கொண்டிருக்கிற, அல்லது

(ஆ) பித்துப்பிடித்தவராக இருக்கிற மற்றும் தகுதிறமுள்ள நீதிமன்றம் ஒன்றினால் அத்தகையவரென விளம்பப்பெறுகிற, அல்லது

(இ) ஒழுக்கக்கேட்டிற்கு உள்ளாவது என மாநில அரசு கருதும், ஒரு குற்றச்செயலுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிற, அல்லது

(ஈ) இந்தச் சட்டத்தின்படி ஒரு குற்றச்செயலுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது எச்சமயத்திலேனும் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டிருக்கிற, அல்லது

(உ) ஓர் உறுப்பினராக மாநில அறிவுரைக் குழுமத்தில் அவர் தொடர்ந்திருப்பது பொதுமக்கள் நலன்களைக் குந்தகமாக்கும் என மாநில அரசு கருதுகிறவாறு அவருடைய தகுநிலையை நெறிதவறிப் பயன்படுத்தியிருக்கிற,

எந்தவொரு நபரும் மாநில அறிவுரைக் குழுமத்தின் ஓர் உறுப்பினராக இருத்தல் ஆகாது.

(2) பணியறவு ஆணைக்கு எதிராகக் காரணம் காட்டுவதற்குத் தொடர்புடைய உறுப்பினருக்குத் தகுமான வாய்ப்பு ஒன்றை நல்கியிருந்தாலன்றி, இந்தப் பிரிவின்படி மாநில அரசால், பணியறவு ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(3) Notwithstanding anything contained in sub-section (1) or sub-section (5) of section 67, a Member who has been removed under this section shall not be eligible for renomination as a Member.

Vacation of seats.

69. If a Member of the State Advisory Board becomes subject to any of the disqualifications specified in section 68 his seat shall become vacant.

Meetings of State Advisory Board on disability.

70. The State Advisory Board shall meet at least once in every six months and shall observe such rules or procedure in regard to the transaction of business at its meetings as may be prescribed by the State Government.

Functions of State Advisory Board on disability.

71 .( 1) Subject to the provisions of this Act, the State Advisory Board shall be the State-level consultative and advisory body on disability matters, and shall facilitate the continuous evolution of a comprehensive policy for the empowerment of persons with disabilities and the full enjoyment of rights.

(2) In particular and without prejudice to the generality of the foregoing provisions, the State Advisory Board on disability shall perform the following functions, namely:—

(a) advise the State Government on policies, programmes, legislation and projects with respect to disability;

(b) develop a State policy to address issues concerning persons with disabilities;

(c) review and coordinate the activities of all Departments of the State Government and other Governmental and non-Governmental Organisations in the State which are dealing with matters relating to persons with disabilities;

(3)·67 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலோ அல்லது (5) ஆம் உட்பிரிவிலோ அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தப் பிரிவின்படி பணியறவு செய்யப்பட்டிருக்கிற உறுப்பினர் ஒருவர் உறுப்பினராக மறுநியமனம் செய்யப்படுவதற்குத் தகுமையுடையவர் ஆகார்.

பதவியிடங்கள் காலியாதல்.

69. மாநில அறிவுரைக் குழுமத்தின் உறுப்பினர் ஒருவர் 68 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தகுதிக்கேடுகளில் எதற்கும் உள்ளாவாராயின் அவருடைய பதவியிடம் காலியாதல் வேண்டும்.

மாற்றுத்–திறனுக்கான மாநில அறிவுரைக் குழுமத்தின் கூட்டங்கள்.

70. மாநில அறிவுரைக் குழுமம் ஒவ்வோர் ஆறு மாதங்களுக்கும் குறைந்தது ஒரு முறையேனும் கூடுதல் வேண்டும்; மற்றும் அதன் கூட்டங்களில் அலுவல் நடத்துவது பொறுத்து மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விதிகளை அல்லது நடைமுறைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

மாற்றுத்–திறனுக்கான மாநில அறிவுரைக் குழுமத்தின் செயற்பணிகள்.

71. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு உட்பட்டு, மாற்றுத்திறனுக்கான மாநில அறிவுரைக் குழுமமானது, மாற்றுத்திறன் பொருட்பாடுகள் மீதான மாநிலநிலைக் கலந்தாய்வு மற்றும் அறிவுரைக் குழுமமாக இருக்கும்; மற்றும் மாற்றுத்திறனாளிக்களுக்கு உரிமையளிப்பதற்கும், உரிமைகளை முழுமையாகத் துய்ப்பதற்கும் ஒரு முழுமையான கொள்கை ஒன்றினைத் தொடர்ந்து உருவாக்குவதற்கு வழிவகுத்தல் வேண்டும்.

(2) குறிப்பாகவும் மேலே கண்ட வகையங்களின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், மாற்றுத்திறனுக்கான மாநில அறிவுரைக் குழுமம் பின்வரும் செயற்பணிகளைப் புரிதல் வேண்டும், அவையாவன:–

(அ) மாற்றுத்திறன் பொறுத்த கொள்கைகள், செயல்திட்டங்கள், சட்டமியற்றல் மற்றும் செயல்முறைத் திட்டங்கள் மீது மாநில அரசுக்கு அறிவுரை வழங்குதல்;

(ஆ) மாற்றுத்திறனாளிகள் தொடர்புடைய பிரச்சினைகளைக் கையாளுவதற்கு மாநிலக் கொள்கையொன்றை உருவாக்குதல்;

(இ) மாற்றுத்திறனாளிகள் தொடர்பான பொருட்பாடுகளைக் கையாளும் அனைத்து மாநில அரசுத் துறைகளின் மற்றும் மாநிலத்தில் உள்ள பிற அரசுசார் மற்றும் அரசுசாரா அமைப்புகளின் செயல்பாடுகளை மறுஆய்வு செய்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்;

(d) take up the cause of persons with disabilities with the concerned authorities and the international organisations with a view to provide for schemes and projects for the persons with disabilities in the State plans;

(e) recommend steps to ensure accessibility, reasonable accommodation, non-discrimination for persons with disabilities, services and the built environment and their participation in social life on an equal basis with others;

(f) monitor and evaluate the impact of laws, policies and programmes designed to achieve full participation of persons with disabilities; and

(g) such other functions as may be assigned from time to time by the State Government.

District-level Committee on disability.

72. The State Government shall constitute District-level Committee on disability to perform such functions as may be prescribed by it.

Vacancies not to invalidate proceedings.

73. No act or proceeding of the Central Advisory Board on disability, a State Advisory Board on disability, or a District-level Committee on disability shall be called in question on the ground merely of the existence of any vacancy in or any defect in the constitution of such Board or Committee, as the case may be.

(ஈ) மாநிலத் திட்டங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான திட்டங்களுக்கும் செயல்முறைத் திட்டங்களுக்கும் வகைசெய்யும் பொருட்டு, தொடர்புடைய அதிகாரஅமைப்புகளிடமும் பன்னாட்டிடை அமைப்புகளிடமும் மாற்றுத் திறனாளிகளுக்கானச் செயல்நோக்கத்தைக் கொண்டு செல்லுதல் ;

(உ) மாற்றுத்திறனாளிகள் பிறருக்கு சமம் என்ற அடிப்படையில் சேவைகளுக்கும் கட்டமைக்கப்பட்ட சூழல் மற்றும் அவர்கள் சமுதாய வாழ்வில் பங்குகொள்வதற்கும், அணுகும் வாய்ப்பு, தகுமான இணக்கம், வேற்றுமை காட்டாமை ஆகியவற்றை உறுதி செய்வதற்கு நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்;

(ஊ) மாற்றுத்திறனாளிகள் முழுமையாகப் பங்குகொள்வதை எய்துவதற்கு வடிவமைக்கப்பட்ட சட்டங்கள், கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்கள் ஆகியவற்றின் விளைவைத் தொடர்ந்து கண்காணித்து மதிப்பீடு செய்தல்; மற்றும்

(எ) மாநில அரசால் அவ்வப்போது குறித்தளிக்கப்படலாகும் அத்தகைய பிற செயற்பணிகள்.

மாற்றுத்–திறனுக்கான மாவட்டநிலைக் குழு.

72. மாநில அரசு அதனால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய செயற்பணிகளைப் புரிவதற்கு மாற்றுத்திறனுக்கான மாவட்டநிலைக் குழுவை அமைத்தல் வேண்டும்.

காலியிடங்கள் நடவடிக்–கைகளைச் செல்லுந்தன்மை–யற்றதாக்காது.

73. மாற்றுத்திறனுக்கான மைய அறிவுரைக் குழுமம், மாற்றுத்திறனுக்கான ஒரு மாநில அறிவுரைக் குழுமம் அல்லது மாற்றுத்திறன் மாவட்ட நிலைக் குழு இவற்றின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் நேர்வுக்கேற்ப, அத்தகைய குழுமத்திலோ அல்லது குழுவிலோ காலியிடம் எதுவும் அல்லது அதன் அமைப்பாக்கத்தில் குறைபாடு ஏதும் இருப்பதன் காரணமாக மட்டுமே எதிர்த்து வாதிடப்படுதல் ஆகாது.

## CHAPTER XII

## CHIEF COMMISSIONER AND STATE COMMISSIONER FOR PERSONS WITH DISABILITIES

Appointment of Chief Commissioner and Commissioners.

74. (1) The Central Government may, by notification, appoint a Chief Commissioner for Persons with Disabilities (hereinafter referred to as the "Chief Commissioner") for the purposes of this Act.

(2) The Central Government may, by notification appoint two Commissioners to assist the Chief Commissioner, of which one Commissioner shall be a persons with disability.

(3) A person shall not be qualified for appointment as the Chief Commissioner or Commissioner unless he has special knowledge or practical experience in respect of matters relating to rehabilitation.

(4) The salary and allowances payable to and other terms and conditions of service (including pension, gratuity and other retirement benefits) of the Chief Commissioner and Commissioners shall be such as may be prescribed by the Central Government.

(5) The Central Government shall determine the nature and categories of officers and other employees required to assist the Chief Commissioner in the discharge of his functions and provide the Chief Commissioner with such officers and other employees as it thinks fit.

(6) The officers and employees provided to the Chief Commissioner shall discharge their functions under the general superintendence and control of the Chief Commissioner.

(7) The salaries and allowances and other conditions of service of officers and employees shall be such as may be prescribed by the Central Government.

## அத்தியாயம் XII

## மாற்றுத்திறனாளிகளுக்கான தலைமை ஆணையர் மற்றும் மாநில ஆணையர்

தலைமை ஆணையரையும் ஆணையர்–களையும் அமர்த்துதல்.

74. (1) மைய அரசு, அறிவிக்கை வாயிலாக இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக (இதனில்இதன்பின்பு "தலைமை ஆணையர்" எனச் சுட்டப்படுபவர்) மாற்றுத்திறனாளிகளுக்கான தலைமை ஆணையர் ஒருவரை அமர்த்தலாம்.

(2) மைய அரசு, அறிவிக்கை வாயிலாக, தலைமை ஆணையருக்கு உதவிபுரிவதற்கு இரண்டு ஆணையர்களை அமர்த்தலாம்; அவர்களில் ஓர் ஆணையர் ஒரு மாற்றுத்திறனாளியாக இருத்தல் வேண்டும்.

(3) எந்தவொரு நபரும் அவர் மறுவாழ்வளிப்புத் தொடர்பான பொருட்பாடுகள் பொறுத்துத் தனியறிவோ அல்லது செயலுறு பட்டறிவோ கொண்டிருந்தாலன்றித் தலைமை ஆணையராகவோ அல்லது ஆணையராகவோ அமர்த்தப் பெறுவதற்குத் தகுதிப்பாடுடையவர் ஆகார்.

(4) தலைமை ஆணையருக்கும் ஆணையர்களுக்கும் வழங்கத்தக்க வரையூதியமும் படித்தொகைகளும் (ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் ஓய்வுக்கால பிற நலப்பயன்கள் உள்ளடங்கலான) பிற பணி வரையுரைகளும் வரைக்கட்டுகளும் மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(5) மைய அரசு, தலைமை ஆணையர் தம் செயற்பணிகளை ஆற்றுகையில் அவருக்கு உதவிபுரிவதற்குத் தேவைப்படும் அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களின் தன்மையையும் வகைகளையும் தீர்மானித்துத் தலைமை ஆணையருக்குத் தாம் பொருத்தமெனக் கருதும் அத்தகைய அலுவலர்களையும் பிற பணிபுரிபவர்களையும் வழங்குதல் செய்தல் வேண்டும்.

(6) தலைமை ஆணையருக்கு வழங்கப்படும் அலுவலர்களும் பணியாளர்களும் தலைமை ஆணையரின் பொதுவான கண்காணிப்பு மற்றும் கட்டாள்கையின் கீழ் தம் செயற்பணிகளை ஆற்றி வருதல் வேண்டும்.

(7) அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் வரையூதியங்களும் படித்தொகைகளும் மற்றும் பிற பணி வரைக்கட்டுகளும் மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகையவாறு இருத்தல் வேண்டும்.

(8) The Chief Commissioner shall be assisted by an advisory committee comprising of not more than eleven members drawn from the experts from different disabilities in such manner as may be prescribed by the Central Government.

Functions of Chief Commissioner.

75. (1) The Chief Commissioner shall—

(a) identify, suo motu or otherwise, the provisions of any law or policy, programme and procedures, which are inconsistent with this Act and recommend necessary corrective steps;

(b) inquire, suo motu or otherwise, deprivation of rights of persons with disabilities and safeguards available to them in respect of matters for which the Central Government is the appropriate Government and take up the matter with appropriate authorities for corrective action;

(c) review the safeguards provided by or under this Act or any other law for the time being in force for the protection of rights of persons with disabilities and recommend measures for their effective implementation;

(d) review the factors that inhibit the enjoyment of rights of persons with disabilities and recommend appropriate remedial measures;

(e) study treaties and other international instruments on the rights of persons with disabilities and make recommendations for their effective implementation;

(8) தலைமை ஆணையர், மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் பல்வேறு மாற்றுத்திறனுடைய வல்லுநர்களால் வருவிக்கப்பட்ட, பதினொன்றுக்கு மேற்படாத உறுப்பினர்களை உள்ளடக்கிய ஓர் அறிவுரைக் குழுவினால் உதவி புரியப்படுதல் வேண்டும்.

75. (1) தலைமை ஆணையர், – தலைமை ஆணையரின் செயற்பணிகள்.

(அ) இந்தச் சட்டத்துடன் முரண்படுகிற எந்தவொரு சட்டம் அல்லது கொள்கையின் வகையங்கள், செயல்திட்டம் மற்றும் நெறிமுறைகளையும், தானே முற்பட்டோ அல்லது பிறவாறாகவோ, கண்டறிதலும் சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தலும்;

(ஆ) மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பறிக்கப்படுவதையும், மைய அரசு, உரிய அரசாக இருக்கிற பொருட்பாடுகள் பொறுத்த அவர்களுக்குக் கிடைக்கத்தக்க காப்பணைவுகளையும், தாமே முற்பட்டோ அல்லது பிறவாறாகவோ, விசாரணை செய்து, அந்தப் பொருட்பாட்டினைச் சரிசெய்யும் நடவடிக்கைக்காக உரிய அதிகாரஅமைப்புகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்லுதல் ;

(இ) மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதனாலுமோ வகை செய்யப்பட்டுள்ள காப்பணைவுகளை மறுஆய்வு செய்து, அவற்றைத் திறம்படச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்தலும் ;

(ஈ) மாற்றுத்திறனாளிகள் தம் உரிமைகளைத் துய்ப்பதைத் தடுத்து நிறுத்தும் காரணிகளை மறுஆய்வு செய்து, உரிய தீருதவி நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்தலும்;

(உ) மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் மீதான உடன்படிக்கைகளையும் பிற பன்னாட்டிடை முறையாவணங்களையும் ஆராய்ந்து அவற்றைத் திறம்பட செயற்படுத்துவதற்காகப் பரிந்துரை செய்தலும்;

(f) undertake and promote research in the field of the rights of persons with disabilities;

(g) promote awareness of the rights of persons with disabilities and the safeguards available for their protection;

(h) monitor implementation of the provisions of this Act and schemes, programmes meant for persons with disabilities;

(i) monitor utilisation of funds disbursed by the Central Government for the benefit of persons with disabilities; and

(j) perform such other functions as the Central Government may assign.

(2) The Chief Commissioner shall consult the Commissioners on any matter while discharging its functions under this Act.

Action of appropriate authorities on recommendation of Chief Commissioner

76. Whenever the Chief Commissioner makes a recommendation to an authority in pursuance of clause (b) [1][of sub- section (1)] of section 75, that authority shall take necessary action on it, and inform the Chief Commissioner of the action taken within three months from the date of receipt of the recommendation:

Provided that where an authority does not accept a recommendation, it shall convey reasons for non- acceptance to the Chief Commissioner within a period of three months, and shall also inform the aggrieved person.

(ஊ) மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பற்றிய செயற்களத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளுதலும் வளர்த்தலும்;

(எ) மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் மற்றும் அவற்றைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அவர்களுக்குக் கிடைத்துள்ள காப்பணைவுகள் பற்றியும் விழிப்புணர்வை வளர்த்தலும்;

(ஏ) இந்தச் சட்டத்தின் வகையங்களும் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு எனக் கருதப்படும் திட்டங்களும் செயல்திட்டங்களும் செயற்படுத்தப்படுவதைத் தொடர்ந்து கண்காணித்தலும்;

(ஐ) மாற்றுத்திறனாளிகளின் நலப்பயனுக்காக மைய அரசால் பிரித்தளிக்கப்படும் நிதி பயன்படுத்தப்படுவதைத் தொடர்ந்து கண்காணித்தலும்; மற்றும்

(ஒ) மைய அரசு குறித்தளிக்கலாகும் அத்தகைய பிற செயற்பணிகளைப் புரிதலும்,

வேண்டும்.

(2) தலைமை ஆணையர், இந்தச் சட்டத்தின்படி எந்தவொரு பொருட்பாட்டின் மீதும் தன் செயற்பணிகளை ஆற்றுகையில் ஆணையர்களைக் கலந்தாய்வு செய்தல் வேண்டும்.

தலைமை ஆணையரின் பரிந்துரையின் மீது உரிய அதிகார–அமைப்புகளின் நடவடிக்கைகள்.

76. 75 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) கூறுக்கு இணங்கத் தலைமை ஆணையர், ஓர் அதிகாரஅமைப்புக்குப் பரிந்துரையொன்று செய்யும்போதெல்லாம், அந்த அதிகாரஅமைப்பு பரிந்துரையைப் பெற்ற தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அதன் மீது தேவையான நடவடிக்கை எடுத்து, எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றித் தலைமை ஆணையருக்குத் தெரிவித்தல் வேண்டும் :

**வரம்புரையாக:** ஓர் அதிகாரஅமைப்பு பரிந்துரையொன்றை ஏற்றுக்கொள்ளாதவிடத்து, ஏற்றுக்கொள்ளாமைக்கான காரணங்களை அது, மூன்று மாதக் காலஅளவுக்குள் தலைமை ஆணையருக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்; மேலும் குறையுற்றவருக்கும் தெரிவித்தல் வேண்டும்.

Powers of Chief Commissioner.

77. (1) The Chief Commissioner shall, for the purpose of discharging his functions under this Act, have the same powers of a civil court as are vested in a court under the Code of Civil Procedure, 1908 while trying a suit, in respect of the following matters, namely:— 5/1908.

(a) summoning and enforcing the attendance of witnesses;

(b) requiring the discovery and production of any documents;

(c) requisitioning any public record or copy thereof from any court or office;

(d) receiving evidence on affidavits; and

(e) issuing commissions for the examination of witnesses or documents.

(2) Every proceeding before the Chief Commissioner shall be a judicial proceeding within the meaning of sections 193 and 228 of the Indian Penal Code and the Chief Commissioner shall be deemed to be a civil court for the purposes of section 195 and Chapter XXVI of the Code of Criminal Procedure, 1973 . 45/1860. 2/1974.

Annual and special reports by Chief Commissioner.

78. (1) The Chief Commissioner shall submit an annual report to the Central Government and may at any time submit special reports on any matter, which, in his opinion, is of such urgency or importance that it shall not be deferred till submission of the annual report.

(2) The Central Government shall cause the annual and the special reports of the Chief Commissioner to be laid before each House of Parliament, along with a memorandum of action taken or proposed to be taken on his recommendations and the reasons for non-acceptance the recommendations, if any.

77. (1) தலைமை ஆணையர், இந்தச் சட்டத்தின்படி தன் செயற்பணிகளை ஆற்றும் நோக்கத்திற்காக, பின்வரும் பொருட்பாடுகள் பொறுத்த, உரிமை வழக்கு ஒன்றை விசாரணை செய்கையில், உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தொகுப்பு, 1908 இன்படி நீதிமன்றம் ஒன்றில் உற்றமைந்துள்ளவாறு உரிமையியல் நீதிமன்றம் ஒன்றுக்குள்ள அதே அதிகாரங்களை உடையவர் ஆவார், அவையாவன:–

தலைமை ஆணைய–ருக்குள்ள அதிகாரங்கள்.

5/1908.

(அ) சான்றளிப்பவர்களை அழைப்பாணை அனுப்பி வரவழைத்தல்;

(ஆ) ஆவணம் எதனையும் வெளிக்கொணர்ந்து முன்னிலைப்படுத்துமாறு வேண்டுறுத்துதல்;

(இ) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் பொதுப்பதிவணம் அல்லது அதன்படி எதனையும் பெறுவதற்கு வேண்டுறுத்தலாணை இடுதல்;

(ஈ) ஆணையுறுதிஆவணங்களைச் சான்றாக ஏற்றல்;

(உ) சான்றளிப்பவர்களை விசாரணை செய்வதற்கும் ஆவணங்களை ஆய்வு செய்வதற்காகவும் பணிப்பாணைகளைப் பிறப்பித்தல்.

(2) தலைமை ஆணையர் முன்புள்ள நடவடிக்கை ஒவ்வொன்றும், இந்தியத் தண்டனைச் சட்டத் தொகுப்பின் 193 மற்றும் 228 ஆம் பிரிவுகளின் பொருளின்படி ஒரு நீதித்துறை நடவடிக்கை ஆகும்; மற்றும் குற்றவியல் விசாரணை முறைச் சட்டத் தொகுப்பு, 1973 இன் 195 ஆம் பிரிவு மற்றும் அத்தியாயம் XXVI ஆகியவற்றின் நோக்கங்களுக்கு, தலைமை ஆணையர், ஓர் உரிமையியல் நீதிமன்றமாகக் கொள்ளப் பெறுவார்.

45/1860.

2/1974.

78. (1) தலைமை ஆணையர் மைய அரசுக்கு ஆண்டறிக்கை ஒன்றைப் பணிந்தனுப்புதல் வேண்டும்; மற்றும் ஆண்டறிக்கையைப் பணிந்தனுப்பும் வரையிலும் தள்ளிப்போடுதல் ஆகாது என அவர் கருதும், அத்தகைய அவசரமாகவோ முக்கியமானதாகவோ இருக்கும் பொருட்பாடு எதன் மீதும் எச்சமயத்திலும் தனி அறிக்கைகளைப் பணிந்தனுப்பலாம்.

தலைமை ஆணையரால் அனுப்பப்படும் ஆண்டு மற்றும் தனி அறிக்கைகள்.

(2) மைய அரசு, தலைமை ஆணையரின் ஆண்டு மற்றும் தனி அறிக்கைகளை, அவருடைய பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட அல்லது எடுக்கக்கருதப்படும் நடவடிக்கை பற்றியும், பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளாமைக்கான காரணங்கள் எவையேனுமிருப்பின், அவற்றைப் பற்றியும், விவரக்குறிப்புடன் சேர்த்து நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்குமாறு செய்வித்தல் வேண்டும்.

(3) The annual and special reports shall be prepared in such form, manner and contain such details as may be prescribed by the Central Government.

Appointment of State Commissioner in States.

79. (1) The State Government may, by notification, appoint a State Commissioner for Persons with Disabilities (hereinafter referred to as the "State Commissioner") for the purposes of this Act.

(2) A person shall not be qualified for appointment as the State Commissioner unless he has special knowledge or practical experience in respect of matters relating to rehabilitation.

(3) The salary and allowances payable to and other terms and conditions of service (including pension, gratuity and other retirement benefits) of the State Commissioner shall be such as may be prescribed by the State Government.

(4) The State Government shall determine the nature and categories of officers and other employees required to assist the State Commissioner in the discharge of his functions and provide the State Commissioner with such officers and other employees as it thinks fit.

(5) The officers and employees provided to the State Commissioner shall discharge his functions under the general superintendence and control of the State Commissioner.

(6) The salaries and allowances and other conditions of service of officers and employees shall be such as may be prescribed by the State Government.

(7) The State Commissioner shall be assisted by an advisory committee comprising of not more than five members drawn from the experts in the disability sector in such manner as may be prescribed by the State Government.

(3) ஆண்டு மற்றும் தனி அறிக்கைகள் மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய வடிவத்திலும் முறையிலும் தயாரிக்கப்படுதலும் மற்றும் அத்தகைய விவரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

மாநிலங்களில் மாநில ஆணையரை அமர்த்துதல்.

79. (1) மாநில அரசு, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக (இதனில் இதன்பின்பு "மாநில ஆணையர்" எனச் சுட்டப்படுபவர்) மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் ஒருவரை அமர்த்தலாம்.

(2) எந்தவொரு நபரும் அவர் மறுவாழ்வளிப்புத் தொடர்பான பொருட்பாடுகள் பொறுத்துத் தனியறிவோ அல்லது செயலுறு பட்டறிவோ கொண்டிருந்தாலன்றி, மாநில ஆணையராக அமர்த்தப்பெறுவதற்குத் தகுதிப்பாடுடையவர் ஆகார்.

(3) மாநில ஆணையருக்கு வழங்கத்தக்க வரையூதியங்களும் படித்தொகைகளும் அவர்களுக்கான (ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் ஓய்வுக்கால பிற நலப்பயன்கள் உள்ளடங்கலான) பிற பணி வரையுரைகளும் வரைக்கட்டுகளும் மாநில அரசால் வகுத்துரைக்கப் படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(4) மாநில அரசு, மாநில ஆணையர் தம் செயற்பணிகளை ஆற்றுகையில் அவருக்கு உதவிபுரிவதற்குத் தேவைப்படும் அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களின் தன்மையையும் வகைகளையும் தீர்மானித்து மாநில ஆணையருக்கு அது பொருத்தமெனக் கருதும் அத்தகைய அலுவலர்களையும் பிற பணியாளர்களையும் வழங்குதல் வேண்டும்.

(5) மாநில ஆணையருக்கு வழங்கப்படும் அலுவலர்களும் பணியாளர்களும் மாநில ஆணையரின் பொதுவான கண்காணிப்பு மற்றும் கட்டாள்கையின் கீழ் தம் செயற்பணிகளை ஆற்றி வருதல் வேண்டும்.

(6) அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் வரையூதியங்களும் படித்தொகைகளும் மற்றும் பிற பணி வரைக்கட்டுகளும் மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகையவாறு இருத்தல் வேண்டும்.

(7) மாநில ஆணையர் மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மாற்றுத்திறன் துறையில் வல்லுநர்களிலிருந்து ஐந்துக்கு மேற்படாத உறுப்பினர்களை உள்ளடக்கிய ஓர் அறிவுரைக் குழுவினால் உதவி புரிதல் வேண்டும்.

Functions of State Commissioner

**80.** The State Commissioner shall—

(a) identify, suo motu or otherwise, provision of any law or policy, programme and procedures, which are in consistent with this Act, and recommend necessary corrective steps;

(b) inquire, suo motu or otherwise deprivation of rights of persons with disabilities and safeguards available to them in respect of matters for which the State Government is the appropriate Government and take up the matter with appropriate authorities for corrective action;

(c) review the safeguards provided by or under this Act or any other law for the time being in force for the protection of rights of persons with disabilities and recommend measures for their effective implementation;

(d) review the factors that inhibit the enjoyment of rights of persons with disabilities and recommend appropriate remedial measures;

(e) undertake and promote research in the field of the rights of persons with disabilities;

(f) promote awareness of the rights of persons with disabilities and the safeguards available for their protection;

(g) monitor implementation of the provisions of this Act and schemes, programmes meant for persons with disabilities;

80. மாநில ஆணையர்,–

மாநில ஆணையரின் செயற்பணிகள்.

(அ) இந்தச் சட்டத்துடன் முரண்படுகிற எந்தவொரு சட்டம் அல்லது கொள்கையின் வகையம், செயல்திட்டம் மற்றும் நெறிமுறைகளையும், தானே முற்பட்டோ அல்லது பிறவாராகவோ, கண்டறிதலும் தேவையான சரிசெய்யும் நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தலும்;

(ஆ) மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பறிக்கப்படுவதையும், மாநில அரசு, உரிய அரசாக இருக்கிற பொருட்பாடுகள் பொறுத்த அவர்களுக்குக் கிடைக்கத்தக்க காப்பணைவுகளையும், தாமே முற்பட்டோ அல்லது பிறவாறாகவோ, விசாரணை செய்து, அந்தப் பொருட்பாட்டினைச் சரிசெய்யும் நடவடிக்கைக்காக உரிய அதிகாரஅமைப்புகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்லுதலும்;

(இ) மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இந்தச் சட்டத்தாலோ அதன் வழியாலோ அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதனாலுமோ வகை செய்யப்பட்டுள்ள காப்பணைவுகளை மறுஆய்வு செய்து அவற்றைத் திறம்பட செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்தலும் ;

(ஈ) மாற்றுத்திறனாளிகள், தம் உரிமைகளைத் துய்ப்பதைத் தடுத்துநிறுத்தும் காரணிகளை மறுஆய்வு செய்து தீருதவிற்கான உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்தலும்;

(உ) மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் பற்றிய செயற்களத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளுதலும் வளர்த்தலும்;

(ஊ) மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் மற்றும் அவற்றைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு கிடைத்துள்ள காப்பணைவுகள் பற்றியும் விழிப்புணர்வை வளர்த்தலும்;

(எ) இந்தச் சட்டத்தின் வகையங்களும் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு எனக் கருதப்படும் திட்டங்களும் செயல்திட்டங்களும் செயற்படுத்தப் படுவதைத் தொடர்ந்து கண்காணித்தலும்;

(h) monitor utilisation of funds disbursed by the State Government for the benefits of persons with disabilities; and

(i) perform such other functions as the State Government may assign.

Action by appropriate authorities on recommendation of State Commissioner

81.Whenever the State Commissioner makes a recommendation to an authority in pursuance of clause (b) of section 80, that authority shall take necessary action on it, and inform the State Commissioner of the action taken within three months from the date of receipt of the recommendation:

Provided that where an authority does not accept a recommendation, it shall convey reasons for non- acceptance to the State Commissioner for Persons with Disabilities within the period of three months, and shall also inform the aggrieved person.

Powers of State Commissioner.

82. (1) The State Commissioner shall, for the purpose of discharging their functions under this Act, have the same powers of a civil court as are vested in a court under the Code of Civil Procedure, 1908 while trying a suit, in respect of the following matters, namely:— 5/1908.

(a) summoning and enforcing the attendance of witnesses;

(b) requiring the discovery and production of any documents;

(c) requisitioning any public record or copy thereof from any court or office;

(d) receiving evidence on affidavits; and

(ஏ) மாற்றுத்திறனாளிகளின் நலப்பயனுக்காக மாநில அரசால் பிரித்தளிக்கப்படும் நிதி பயன்படுத்தப்படுவதைத் தொடர்ந்து கண்காணித்தலும்; மற்றும்

(ஐ) மாநில அரசு குறித்தளிக்கலாகும் அத்தகைய பிற செயற்பணிகளைப் புரிதலும்,

வேண்டும்.

மாநில ஆணையரின் பரிந்துரையின் மீது உரிய அதிகார–அமைப்புகளால் எடுக்கப்படும் நடவடிக்கைகள்.

81. 80 ஆம் பிரிவின் (ஆ) கூறுக்கு இணங்க மாநில ஆணையர் ஓர் அதிகாரஅமைப்புக்கு பரிந்துரையொன்று செய்யும்போதெல்லாம்,அந்த அதிகாரஅமைப்பு பரிந்துரையைப் பெற்ற தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்அதன்மீது தேவையான நடவடிக்கை எடுத்து, எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி மாநில ஆணையருக்குத் தெரிவித்தல் வேண்டும்:

**வரம்புரையாக:** ஓர் அதிகாரஅமைப்பு பரிந்துரையொன்றை ஏற்றுக்கொள்ளாதவிடத்து, அது மூன்று மாதகாலஅளவிற்குள் ஏற்றுக்கொள்ளாமைக்கான காரணங்களை மாநில ஆணையருக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்; அத்துடன் குறையுற்றவரும் தெரிவித்தல் வேண்டும்.

மாநில ஆணையருக்–குள்ள அதிகாரங்கள்.

82. (1) மாநில ஆணையர், இந்தச் சட்டத்தின்படி தன் செயற்பணிகளை ஆற்றும் நோக்கத்திற்காக, பின்வரும் பொருட்பாடுகள் பொறுத்த உரிமை வழக்கு ஒன்றை விசாரணை செய்கையில் உரிமையியல் விசாரணைமுறைச்
5/1908. சட்டத்தொகுப்பு, 1908 இன்படி நீதிமன்றம் ஒன்றில் உற்றமைந்துள்ளவாறு உரிமையியல் நீதிமன்றம் ஒன்றுக்குள்ள அதே அதிகாரங்கள் உடையவர் ஆவார். அவையாவன:

(அ) சான்றளிப்பவர்களை அழைப்பாணை அனுப்பி வரவழைத்தல்;

(ஆ) ஆவணம் எதனையும் வெளிக்கொணர்ந்து முன்னிலைப்படுத்துமாறு வேண்டுறுத்துதல்;

(இ) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் பொதுப் பதிவணம் அல்லது அதன் படி எதனையும் பெறுவதற்கு வேண்டுறுத்தலாணை இடுதல்;

(ஈ) ஆணையுறுதி ஆவணங்களைச் சான்றாக ஏற்றல்;

(e) issuing commissions for the examination of witnesses or documents.

(2) Every proceeding before the State Commissioner shall be a judicial proceeding within the meaning of sections 193 and 228 of the Indian Penal Code and the State Commissioners shall be deemed to be a civil court for the purposes of section 195 and Chapter XXVI of the Code of Criminal Procedure, 1973. 45 / 1860. 2 / 1974.

Annual and special reports by State Commissioner.

83. (1) The State Commissioner shall submit an annual report to the State Government and may at any time submit special reports on any matter, which, in its opinion, is of such urgency or importance that it shall not be deferred till submission of the annual report.

(2) The State Government shall cause the annual and the special reports of the State Commissioner for persons with disabilities to be laid before each House of State Legislature where it consists of two Houses or where such Legislature consist of one House, before that House along with a memorandum of action taken or proposed to be taken on the recommendation of the State Commissioner and the reasons for non-acceptance the recommendations, if any.

(3) The annual and special reports shall be prepared in such form, manner and contain such details as may be prescribed by the State Government.

## CHAPTER XIII

## SPECIAL COURT

Special Court.

84. For the purpose of providing speedy trial, the State Government shall, with the concurrence of the Chief Justice of the High Court, by notification, specify for each district, a Court of Session to be a Special Court to try the offences under this Act.

(உ) சான்றளிப்பவர்களை விசாரணை செய்வதற்கும் ஆவணங்களை ஆய்வு செய்வதற்காகவும் பணிப்பாணைகளைப் பிறப்பித்தல்.

(2) மாநில ஆணையர் முன்புள்ள நடவடிக்கை
45/1860. ஒவ்வொன்றும், இந்தியத் தண்டனைச் சட்டத்தொகுப்பின் 193 மற்றும் 228 ஆம் பிரிவுகளின் பொருளின்படி ஒரு நீதித்துறை நடவடிக்கை ஆகும்;
2/1974. மற்றும் குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தொகுப்பு, 1973 இன் 195 ஆம் பிரிவு மற்றும் அத்தியாயம் XXVI ஆகியவற்றின் நோக்கங்களுக்கு மாநில ஆணையர் ஓர் உரிமையியல் நீதிமன்றமாகக் கொள்ளப்பெறுவார்.

மாநில ஆணையரால் அனுப்பப்படும் ஆண்டு மற்றும் தனி அறிக்கைகள்.

83. (1) மாநில ஆணையர் மாநில அரசிற்கு ஆண்டறிக்கை ஒன்றைப் பணிந்தனுப்புதல் வேண்டும்; மற்றும் ஆண்டறிக்கையைப் பணிந்தனுப்பும் வரையிலும் தள்ளிப்போடுதல் ஆகாது என அவர் கருதும் அத்தகைய, அவசரமானதாகவோ முக்கியமானதாகவோ இருக்கும் பொருட்பாடு எதன்மீதும் எச்சமயத்திலும் தனி அறிக்கைகளைப் பணிந்தனுப்பலாம்.

(2) மாநில அரசு, மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ஆண்டு மற்றும் தனி அறிக்கைகளை மாநில ஆணையரின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட அல்லது எடுக்கக் கருதப்படும் நடவடிக்கை பற்றியும் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளாமைக்கான காரணங்கள் எவையேனுமிருப்பின் அவற்றைப் பற்றியும், விவரக்குறிப்புடன் சேர்த்து, மாநிலச் சட்டமன்றம் ஈரவைகளைக் கொண்டிருக்கிறவிடத்து அந்த அவை ஒவ்வொன்றின் முன்பும், அத்தகைய சட்டமன்றம் ஓர் அவையைக் கொண்டிருக்கிறவிடத்து அந்த அவை முன்பு வைக்குமாறு செய்வித்தல் வேண்டும்.

(3) ஆண்டு மற்றும் தனி அறிக்கைகள் மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய வடிவத்திலும் முறையிலும் தயாரிக்கப்படுதலும் மற்றும் அத்தகைய விவரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

## அத்தியாயம் XIII
## தனி நீதிமன்றம்

தனி நீதிமன்றம்.

84. மாநில அரசு, உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியின் ஒருங்கிசைவுடன், விரைவான விசாரணைக்கு வகைசெய்யும் நோக்கத்திற்காக, இந்தச் சட்டத்தின்படியான குற்றச்செயல்களை விசாரணை செய்வதற்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும், அறிவிக்கை வாயிலாக, அமர்வு நீதிமன்றம் ஒன்றை ஒரு தனி நீதிமன்றமாகக் குறித்துரைத்தல் வேண்டும்.

Special Public Prosecutor.

85.(1) For every Special Court, the State Government may, by notification, specify a Public Prosecutor or appoint an advocate, who has been in practice as an advocate for not less than seven years, as a Special Public Prosecutor for the purpose of conducting cases in that Court.

(2) The Special Public Prosecutor appointed under sub-section (1) shall be entitled to receive such fees or remuneration as may be prescribed by the State Government.

## CHAPTER XIV

## NATIONAL FUND FOR PERSONS WITH DISABILITIES

National Fund for persons with disabilities.

86 .(1) There shall be constituted a Fund to be called the National Fund for persons with disabilities and there shall be credited thereto—

(a) all sums available under the Fund for people with disabilities, constituted vide notification No.S.O. 573 (E), dated the 6/1890.
11th August, 1983 and the Trust Fund for Empowerment of Persons with Disabilities, constituted vide notification No. 30-03/2004-DDII, dated the 21st November, 2006, under the Charitable Endowment Act, 1890.

(b) all sums payable by banks, corporations, financial institutions in pursuance of judgment dated the 16th April, 2004 of the Hon'ble Supreme Court in Civil Appeal Nos. 4655 and 5218 of 2000;

(c) all sums received by way of grant, gifts, donations, benefactions, bequests or transfers;

(d) all sums received from the Central Government including grants-in-aid;

85. (1) தனி நீதிமன்றம் ஒவ்வொன்றுக்கும், மாநில அரசு, அறிவிக்கை வாயிலாக, அந்த நீதிமன்றத்தில் வழக்குகளை நடத்தும் நோக்கத்திற்காக ஒரு சிறப்பு அரசு குற்றத்துறை வழக்குரைஞராக அரசு குற்றவியல் வழக்குரைஞர் ஒருவரைக் குறித்துரைக்கலாம் அல்லது ஏழு ஆண்டுகளுக்குக் குறையாமல் வழக்குரைஞராகத் தொழிலாற்றியிருந்திருக்கிற, வழக்குரைஞர் ஒருவரை அமர்த்தலாம். அரசு குற்றவியல் தனி வழக்குரைஞர்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி அமர்த்தப்பெற்ற சிறப்பு அரசு குற்றவியல் வழக்குரைஞர் மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணங்கள் அல்லது பணியூதியம் பெறுவதற்கு உரிமை கொண்டவர் ஆவார்.

## அத்தியாயம் XIV

## மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிதியம்

86. (1) மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிதியம் என அழைக்கப்படும் நிதியம் ஒன்று அமைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அதில்,– மாற்றுத்திறனா–ளிகளுக்கான தேசிய நிதியம்.

6/1890. (அ) அறநிலைக் கட்டளைகள் சட்டம், 1890 இன்படி 1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு 11 ஆம் தேதியிடப்பட்ட அறிவிக்கை எண் எஸ். ஓ. 573 (E) இல் காண்கிறவாறு அமைக்கப்பட்ட மாற்றுத்திறனுடைய மக்களுக்கான நிதியம் மற்றும் 2006 ஆம் ஆண்டு,நவம்பர் 21 ஆம் தேதியிடப்பட்ட அறிவிக்கை எண்30–03/2004–டிடி II இல் காண்கிறவாறு அமைக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு உரிமையளிப்பதற்கான பொறுப்புக் கட்டளை நிதியம் ஆகியவற்றின் கீழ் கிடைக்குமாறு உள்ள பணத்தொகைகள் அனைத்தும்;

(ஆ) உரிமையியல் மேல்முறையீட்டு எண்கள் 4655, 5218/2000 ஆகியவற்றில் மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரைக்கு இணங்க வங்கிகளாலும், கூட்டுருமங்களாலும், நிதி நிறுவனங்களாலும் வழங்கத்தக்க பணத்தொகைகள் அனைத்தும்;

(இ) மானியம், கொடைகள், நன்கொடைகள், அறச்செயலுக்கான நன்கொடை, விருப்புறுதி ஆவண வழிக் கொடைகள் அல்லது உரிமைமாற்றங்கள் மூலமாகப் பெறப்படும் பணத்தொகைகள் அனைத்தும்;

(ஈ) மைய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் உள்ளடங்கலான பணத்தொகைகள் அனைத்தும்;

(e) all sums from such other sources as may be decided by the Central Government.

(2) The Fund for persons with disabilities shall be utilised and managed in such manner as may be prescribed.

Accounts and audit.

87. (1) The Central Government shall maintain proper accounts and other relevant records and prepare an annual statement of accounts of the Fund including the income and expenditure accounts in such form as may be prescribed in consultation with the Comptroller and Auditor-General of India.

(2) The accounts of the Fund shall be audited by the Comptroller and Auditor-General of India at such intervals as may be specified by him and any expenditure incurred by him in connection with such audit shall be payable from the Fund to the Comptroller and Auditor-General of India.

(3) The Comptroller and Auditor-General of India and any other person appointed by him in connection with the audit of the accounts of the Fund shall have the same rights, privileges and authority in connection with such audit as the Comptroller and Auditor-General of India generally has in connection with the audit of the Government accounts, and in particular, shall have the right to demand production of books of account, connected vouchers and other documents and papers and to inspect any of the offices of the Fund.

(4) The accounts of the Fund as certified by the Comptroller and Auditor-General of India or any other person appointed by him in this behalf, together with the audit report thereon, shall be laid before each House of Parliament by the Central Government.

(உ) மைய அரசால் முடிவு செய்யப்படலாகும் அத்தகைய பிற வளஆதாரங்களிலிருந்து பெறப்படும் பணத்தொகைகள் அனைத்தும்,

வரவு வைக்கப்பட்டுவருதல் வேண்டும்.

(2) மாற்றுத்திறனாளிகளுக்கான நிதியமானது, வகுத்துரைக்கலாகும் அத்தகைய முறையில், பயன்படுத்தப்படுதலும் மேலாண்மை செய்யப்படுதலும் வேண்டும்.

87. (1) மைய அரசு, இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையருடன் கலந்தாய்வு செய்து, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வடிவத்தில் வருமானம் மற்றும் செலவினக் கணக்குகள் உள்ளடங்கலான, முறையான கணக்குகளையும் தொடர்புற்ற பிற பதிவணங்களையும் பேணிவருதலும் மற்றும் நிதியத்தின் ஆண்டுக் கணக்கு அறிக்கையொன்றைத் தயாரித்தலும் வேண்டும். கணக்குகளும் தணிக்கையும்.

(2) நிதியத்தின் கணக்குகள் இந்தியக் கணக்காய்வர் தலைமைத் தணிக்கையரால், அவர் குறித்துரைக்கலாகும் அத்தகைய கால இடைவெளிகளில், தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய தணிக்கை தொடர்பாக அவரால் செய்ய நேரிட்ட செலவினம் எதுவும், நிதியத்திலிருந்து இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையருக்கு வழங்கத்தக்கதாகும்.

(3) இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர் மற்றும் நிதியத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்வது தொடர்பாக அவரால் அமர்த்தப்பெற்ற நபர் எவரும், அரசு கணக்குகளைத் தணிக்கை செய்வது தொடர்பாக இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர் பொதுவாக கொண்டிருக்கும் அதே உரிமைகளும், சிறப்புரிமைகளும், அதிகாரஅடைவும், அத்தகைய தணிக்கை தொடர்பாகக் கொண்டிருப்பார் மற்றும் குறிப்பாக, கணக்குப் புத்தகங்கள், தொடர்புடைய செலவுச்சீட்டுகள் மற்றும் பிற ஆவணங்கள், வரைத்தாள்கள் ஆகியவற்றை முன்னிடுமாறு கோருவதற்கும், நிதியத்தின் அலுவலகங்களில் எதனையும் ஆய்வு செய்வதற்குமான உரிமை கொண்டிருப்பார்;

(4) இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையராலோ அல்லது இதற்கென அவரால் அமர்த்தப்பெற்ற பிற நபர் எவராலுமோ உறுதிசான்றளிக்கப் பட்டவாறான நிதியத்தின் கணக்குகள், அவற்றின் மீதான தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து, மைய அரசால் நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

## CHAPTER XV

## STATE FUND FOR PERSONS WITH DISABILITIES

State Fund for persons with disabilities.

88. (1) There shall be constituted a Fund to be called the State Fund for persons with disabilities by a State Government in such manner as may be prescribed by the State Government.

(2) The State Fund for persons with disabilities shall be utilised and managed in such manner as may be prescribed by the State Government.

(3) Every State Government shall maintain proper accounts and other relevant records of the State Fund for persons with disabilities including the income and expenditure accounts in such form as may be prescribed by the State Government in consultation with the Comptroller and Auditor-General of India.

(4) The accounts of the State Fund for persons with disabilities shall be audited by the Comptroller and Auditor-General of India at such intervals as may be specified by him and any expenditure incurred by him in connection with such audit shall be payable from the State Fund to the Comptroller and Auditor-General of India.

(5) The Comptroller and Auditor-General of India and any person appointed by him in connection with the audit of the accounts of the State Fund for persons with disabilities shall have the same rights, privileges and authority in connection with such audit as the Comptroller and Auditor-General of India generally has in connection with the audit of the Government accounts, and in particular, shall have right to demand production of books of accounts, connected vouchers and other documents and papers and to inspect any of the offices of the State Fund.

## அத்தியாயம் XV

## மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில நிதியம்

மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில நிதியம்.

88. (1) மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில நிதியம் என அழைக்கப்படும் நிதியம் ஒன்று மாநில அரசால் அமைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

(2) மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில நிதியமானது, மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் பயன்படுத்தப்படுத்தலும் மேலாண்மை செய்யப்படுதலும் வேண்டும்.

(3) ஒவ்வொரு மாநில அரசும், இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையருடன் கலந்தாய்வு செய்து, மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வடிவத்தில், வருமானம், செலவினக் கணக்குகள் உள்ளடங்கலான மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில நிதியத்தின் முறையான கணக்குகளையும் தொடர்புற்ற பிற பதிவணங்களையும் பேணிவருதல் வேண்டும்.

(4) மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில நிதியத்தின் கணக்குகள் இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரால், அவரால் குறித்துரைக்கப்படலாகும் அத்தகைய கால இடைவெளிகளில் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய தணிக்கை தொடர்பாக அவரால் செய்ய நேரிட்ட செலவினம் எதுவும், மாநில நிதியத்திலிருந்து இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையருக்கு வழங்கத்தக்கதாகும்.

(5) இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையரும் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில நிதியத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்வது தொடர்பாக அவரால் அமர்த்தப்பெற்ற நபர் எவரும் அரசு கணக்குகளைத் தணிக்கை செய்வது தொடர்பாக இந்திய கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையர் பொதுவாகக் கொண்டிருக்கும் அதே உரிமைகளும், சிறப்புரிமைகளும் அதிகாரஅடைவும் அத்தகைய தணிக்கை தொடர்பாகக் கொண்டிருப்பர் மற்றும் குறிப்பாக, கணக்குப் புத்தகங்கள் தொடர்புடைய செலவுச்சீட்டுகள் மற்றும் பிற ஆவணங்கள் மற்றும் வரைதாள்கள் ஆகியவற்றை முன்னிடுமாறு கோருவதற்கும் மாநில நிதியத்தின் அலுவலகங்களை ஆய்வு செய்வதற்குமான உரிமை கொண்டிருப்பார்.

(6) The accounts of the State Fund for persons with disabilities as certified by the Comptroller and Auditor-General of India or any other person appointed by him in this behalf together with the audit report thereon shall be laid before each House of the State Legislature where it consists of two Houses or where such Legislature consists of one House before that House.

## CHAPTER XVI
## OFFENCES AND PENALTIES

Punishment for contravention of provisions of Act or rules or regulations made thereunder.

89.Any person who contravenes any of the provisions of this Act, or of any rule made thereunder shall for first contravention be punishable with fine which may extend to ten thousand rupees and for any subsequent contravention with fine which shall not be less than fifty thousand rupees but which may extend to five lakh rupees.

Offences by companies.

90. (1) Where an offence under this Act has been committed by a company, every person who at the time the offence was committed, was in charge of, and was responsible to, the company for the conduct of the business of the company, as well as the company, shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly:

Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment provided in this Act, if he proves that the offence was committed without his knowledge or that he had exercised all due diligence to prevent the commission of such offence.

(6) இந்தியக் கணக்காய்வர்–தலைமைத் தணிக்கையராலோ அல்லது இதற்கென அவரால் அமர்த்தப்பெற்ற பிற நபர் எவராலுமோ உறுதிச்சான்றளிக்கப் பட்டவாறான மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில நிதியத்தின் கணக்குகள், அவற்றின் மீதான தணிக்கை அறிக்கையுடன் சேர்த்து, மாநிலச் சட்டமன்றம் ஈரவைகளைக் கொண்டிருக்கிறவிடத்து, அந்த அவை ஒவ்வொன்றின் முன்பும் அல்லது அத்தகைய சட்டமன்றம் ஓர் அவையைக் கொண்டிருக்கிறவிடத்து அந்த அவை முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XVI

## குற்றச்செயல்கள் மற்றும் தண்டங்கள்

இந்தச் சட்டத்தின் வகையங்களை யோ அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குறுத்தும் விதிகளையோ மீறியதற்கானத் தண்டனை.

89. இந்தச் சட்டத்தின் வகையங்களில் எதனையும் அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதி எதனையும் மீறுகிற நபர் எவரும் முதல் மீறுகைக்குப் பத்தாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதமும் மற்றும் பிந்திய மீறுகை எதற்கும் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு குறையாத, ஆனால் ஐந்து இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

நிறுமங்களின் குற்றச் செயல்கள்.

90. (1) இந்தச் சட்டத்தின்படி குற்றச்செயல் ஒன்று, ஒரு நிறுமத்தால் இழைக்கப்பட்டிருக்கிறவிடத்து, குற்றச்செயல் இழைக்கப்பட்ட சமயத்தில், நிறுமத்தின் அலுவலை நடத்திவருவதற்கு அந்த நிறுமத்தின் பொறுப்பைக் கொண்டவரும், அந்த நிறுமத்திற்குப் பொறுப்பாக இருந்தவருமான நபர் ஒவ்வொருவரும், அத்துடன் அந்த நிறுமமும் கூட அந்தக் குற்றச்செயலைச் செய்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அதன்படியே எதிரான நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதல் வேண்டும்:

**வரம்புரையாக:** நபர் எவரும் அந்தக் குற்றச்செயல் அவருக்குத் தெரியாமல் இழைக்கப்பட்டது என்றோ அல்லது அத்தகைய குற்றச்செயல் இழைக்கப்படாமல் தடுப்பதற்கு உரிய முழு கவனம் அனைத்தையும் அவர் செலுத்தியிருந்தார் என்றோ, மெய்ப்பிப்பாராயின், இந்த உட்பிரிவில் அடங்கிய எதுவும், அத்தகைய நபர் எவரையும் தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

(2) Notwithstanding anything contained in sub-section (1), where an offence under this Act has been committed by a company and it is proved that the offence has been committed with the consent or connivance of, or is attributable to any neglect on the part of any director, manager, secretary or other officer of the company, such director, manager, secretary or other officer shall also be deemed to be guilty of that offence and shall be liable to be proceeded against and punished accordingly.

**Explanation.**—For the purposes of this section,—

(a) "company" means any body corporate and includes a firm or other association of individuals; and

(b) "director", in relation to a firm, means a partner in the firm.

Punishment for fraudulently availing any benefit meant for persons with benchmark disabilities.

91.Whoever, fraudulently avails or attempts to avail any benefit meant for persons with benchmark disabilities, shall be punishable with imprisonment for a term which may extend to two years or with fine which may extend to one lakh rupees or with both.

Punishment for offences of atrocities.

92.Whoever,-

(a) intentionally insults or intimidates with intent to humiliate a person with disability in any place within public view;

(b) assaults or uses force to any person with disability with intent to dishonour him or outrage the modesty of a woman with disability;

(2). (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டப்படி குற்றச்செயல் ஒன்று ஒரு நிறுமத்தால் இழைக்கப்பட்டிருந்து அந்தக் குற்றச்செயல், நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலர் ஒருவரின் இசைவுடனோ அல்லது மறைமுகஆதரவுடனோ இழைக்கப்பட்டிருக்கிறது அல்லது அவர் சார்பிலான கவனக்குறைவு எதற்கும் சாட்டத்தக்கதாயிருக்கிறது என்று மெய்ப்பிக்கப்படுகிறவிடத்து, அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலரும் கூட அந்தக் குற்றச்செயலைச் செய்தவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அதன்படியே எதிரான நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதல் வேண்டும்.

விளக்கம்.—இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,—

(அ) "நிறுமம்" என்பது, கூட்டுருமம் எதுவும் என்று பொருள்படும்; மற்றும் ஒரு நிறுவகத்தை அல்லது பிற தனிநபர்களின் குழுவை உள்ளடக்கும்; மற்றும்

(ஆ) "இயக்குநர்" என்பது, ஒரு நிறுவகம் பொறுத்து நிறுவகத்திலுள்ள ஒரு கூட்டாளி என்று பொருள்படும்.

குறியீட்டளவு மாற்றுத்திறனுடைய நபர்களுக்கு உரிய நலப்பயன் எதனையும் மோசடியாகப் பயன்படுத்திக் கொள்வதற்கான தண்டனை.

91. குறியீட்டளவு மாற்றுத்திறனுடைய நபர்களுக்கு உரிய நலப்பயன் எதனையும் மோசடியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிற அல்லது பயன்படுத்திக்கொள்ள முயலுகிற எவரொருவரும், ஈராண்டு வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவிற்குச் சிறைத்தண்டனை விதித்து அல்லது ஒரு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதம் விதித்து அல்லது அவை இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

வன்கொடுமை குற்றச் செயல்களுக் கானத் தண்டனை.

92. (அ) பொதுமக்கள் பார்வையில் உள்ள இடம் எதிலும் மாற்றுத்திறனாளி ஒருவரைத் தாழ்வுபடுத்தும் உட்கருத்துடன் வேண்டுமென்றே அவரை வசைமொழிகிறவர் அல்லது மிரட்டுகிறவர்;

(ஆ) மாற்றுத்திறனாளி எவரையும் அவமானப்படுத்தும் உட்கருத்துடன் அவரைத் தாக்குகிறவர் அல்லது அவர் மீது வன்முறையைப் பயன்படுத்துகிறவர் அல்லது மாற்றுத்திறனாளிப் பெண் ஒருவரை மானபங்கம் செய்கிறவர்;

(c) having the actual charge or control over a person with disability voluntarily or knowingly denies food or fluids to him or her;

(d) being in a position to dominate the will of a child or woman with disability and uses that position to exploit her sexually;

(e) voluntarily injures, damages or interferes with the use of any limb or sense or any supporting device of a person with disability;

(f) performs, conducts or directs any medical procedure to be performed on a woman with disability which leads to or is likely to lead to termination of pregnancy without her express consent except in cases where medical procedure for termination of pregnancy is done in severe cases of disability and with the opinion of a registered medical practitioner and also with the consent of the guardian of the woman with disability,

shall be punishable with imprisonment for a term which shall not be less than six months but which may extend to five years and with fine.

(இ) மாற்றுத்திறனாளி ஒருவர் மீது உள்ளபடியே பொறுப்புரிமையோ கட்டாள்கையோ கொண்டிருந்து, தம்விருப்பமாகவோ அறிந்தோ அவனுக்கு அல்லது அவளுக்கு உணவையோ பருகப் பொருள்களையோ கொடுக்கமறுக்கிறவர்;

(ஈ) மாற்றுத்திறனாளிச் சிறார் அல்லது பெண் ஒருவரின் விருப்பத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் தகுநிலையில் இருந்துகொண்டு, அந்தத் தகுநிலையைப் பயன்படுத்தி அவளைத் தவறான பாலியல் விருப்பத்திற்கு உட்படுத்துகிறவர்;

(உ) மாற்றுத்திறனாளி ஒருவரின் இயக்க உறுப்பு அல்லது புலன் எதனையும் அல்லது அவருக்கு உதவும் சாதனம் எதனையும், தன்விருப்பாக ஊறுபடுத்துகிறவர், சேதப்படுத்துகிறவர் அல்லது அவற்றைப் பயன்படுத்துவதில் குந்தகம் செய்கிறவர்;

(ஊ) கடுமையான மாற்றுத்திறன் நேர்வுகளில், பதிவுபெற்ற மருத்துவத் தொழிலாற்றுநரின் கருத்துரைப்படியும் மாற்றுத்திறனாளிப் பெண்ணின் காப்பாளரின் இசைவுடனும் கருக்கலைப்பிற்கான மருத்துவச் செயல்முறை செய்யப்படுகின்றவிடத்து, நேர்வுகளில் தவிர மாற்றுத்திறனாளிப் பெண்ணின் வெளிப்படையான இசைவின்றிக் கருக்கலைப்பிற்கு இட்டுச்செல்கிற அல்லது அநேகமாக இட்டுச்செல்லக்கூடிய மருத்துவச் செயல்முறை எதனையும் மாற்றுத்திறனாளிப் பெண்ணுக்குப் புரிபவர், நடத்துபவர் அல்லது புரியும்படி பணிப்பவர்

எவரொருவரும் ஆறு மாதங்களுக்குக் குறையாத ஆனால் ஐந்தாண்டு வரை நீடிக்கலாகும் ஒரு காலஅளவுக்குச் சிறைத்தண்டனை விதித்தும் மற்றும் அத்துடன் அபராதம் விதித்தும் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

Punishment for failure to furnish information.

93.Whoever, fails to produce any book, account or other documents or to furnish any statement, information or particulars which, under this Act or any order, or direction made or given thereunder, is duty bound to produce or furnish or to answer any question put in pursuance of the provisions of this Act or of any order, or direction made or given thereunder, shall be punishable with fine which may extend to twenty-five thousand rupees in respect of each offence, and in case of continued failure or refusal, with further fine which may extend to one thousand rupees for each day, of continued failure or refusal after the date of original order imposing punishment of fine.

Previous sanction of appropriate Government.

94.No Court shall take cognizance of an offence alleged to have been committed by an employee of the appropriate Government under this Chapter, except with the previous sanction of the appropriate Government or a complaint is filed by an officer authorised by it in this behalf.

Alternative punishments.

95. Where an act or omission constitutes an offence punishable under this Act and also under any other Central or State Act, then, notwithstanding anything contained in any other law for the time being in force, the offender found guilty of such offence shall be liable to punishment only under such Act as provides for punishment which is greater in degree.

தகவலை அளிக்கத் தவறுகைக்கான தண்டனை.

93. இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படிப் பிறப்பிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஆணை அல்லது பணிப்புரை எதன்படியும் புத்தகம், கணக்கு அல்லது பிற ஆவணங்களை முன்னிலைப்படுத்த அல்லது விவரவுரை, தகவல் அல்லது விவரங்கள் எவற்றையும் வழங்க தவறுகிற அல்லது இந்தச் சட்டத்தின் வகையங்களை அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஆணை அல்லது பணிப்புரை எதற்கும் இணங்க முன்னிலைப்படுத்த அல்லது கேட்கப்பட்ட வினாக்களுக்குப் பதிலளிக்க, கடமைப்பட்ட எவரொருவரும் தவறுகிறபோது, ஒவ்வொரு குற்றச்செயல் பொறுத்தும் இருபத்தைந்தாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதம் விதித்தும் மற்றும் தொடர்ச்சியான தவறுகை அல்லது மறுப்பின் நேர்வில், அபராதத் தண்டனை விதிக்கும் முதல் ஆணையின் தேதிக்குப் பின்பு தொடர்கிற தவறுகை அல்லது மறுப்பின் ஒவ்வொரு நாளுக்கும் ஆயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் கூடுதல் அபராதம் விதித்தும் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

உரிய அரசின் முன் ஒப்பளிப்பு.

94. இந்த அத்தியாயத்தின்படி உரிய அரசில் பணியாளர் ஒருவரால் இழைத்திருப்பதாகச் சொல்லப்படுகிற குற்றச்செயல் ஒன்றை, உரிய அரசின் முன் ஒப்பளிப்புடனோ அல்லது இதற்கென அதனால் அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர் ஒருவரால் முன்னிடப்படும் முறையீடு ஒன்று அல்லாமலோ, நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் ஆகாது.

மாற்றுத் தண்டனைகள்.

95. ஒரு செயலோ அல்லது செய்யாது விடுகையோ இந்தச் சட்டத்தின்படியும், அத்துடன் பிற மைய அல்லது மாநிலச் சட்டம் எதன்படியும் தண்டிக்கத்தக்க குற்றச்செயலாக அமைகிறவிடத்து, அப்போது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அடங்கிய எது எவ்வாறிருப்பினும், அத்தகைய குற்றச்செயலைச் செய்ததாக முடிவுசெய்யப்படும் குற்றவாளி, படிநிலையில் பெரியளவில் இருக்கிற தண்டனைக்கு வகைசெய்கிற அத்தகைய சட்டத்தின்படி மட்டுமே தண்டனைக்கு உள்ளாவார்.

## CHAPTER XVII
## MISCELLANEOUS

Application of other laws not barred.

96.The provisions of this Act shall be in addition to, and not in derogation of, the provisions of any other law for the time being in force.

Protection of action taken in good faith.

97. No suit, prosecution or other legal proceeding shall lie against the appropriate Government or any officer of the appropriate Government or any officer or employee of the Chief Commissioner or the State Commissioner for anything which is in good faith done or intended to be done under this Act or the rules made thereunder.

Power to remove difficulties.

98. (1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Central Government may, by order, published in the Official Gazette, make such provisions or give such directions, not inconsistent with the provisions of this Act, as may appear to it to be necessary or expedient for removing the difficulty:

Provided that no such order shall be made under this section after the expiry of the period of two years from the date of commencement of this Act.

(2) Every order made under this section shall be laid as soon as may be, after it is made, before each House of Parliament.

Power to amend Schedule.

99. (1) On the recommendations made by the appropriate Government or otherwise, if the Central Government is satisfied that it is necessary or expedient so to do, it may, by notification, amend the Schedule and any such notification being issued, the Schedule shall be deemed to have been amended accordingly.

## அத்தியாயம் XVII
## பல்வகை

பிற சட்டங்கள் பொருந்துவது தடை செய்யப்–படவில்லை.

96. இந்தச் சட்டத்தின் வகையங்கள், அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதனின் வகையங்களுக்குக் கூடுதலாக இருக்கவேண்டுமேயன்றி அவற்றைத் திறக்குறைவு செய்வதாக இருத்தல் ஆகாது.

நல்லெண்–ணத்தில் எடுக்கப்பட்ட நடிவடிக்–கைக்குப் பாதுகாப்பு.

97. இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதன்படிச் செய்யப்பட்ட விதிகளின்படியோ நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும், உரிய அரசுக்கு அல்லது உரிய அரசின் அலுவலர் எவருக்கும் அல்லது தலைமை ஆணையர் அல்லது மாநில ஆணையரின் அலுவலர் அல்லது பணியாளர் எவருக்கும், எதிராக உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடர்வதற்கு உற்றது ஆகாது.

இடர்ப்பாடுகளை அகற்று–வதற்கான அதிகாரம்.

98. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களைச் செல்திறப்படுத்துவதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்பட்ட ஆணையின் வழி, அந்த இடர்ப்பாட்டினை அகற்றுவதற்குத் தேவையென அல்லது உகந்ததென அதற்குத் தோன்றலாகும் இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகையங்களைச் செய்யலாம் அல்லது அத்தகைய பணிப்புரைகளைக் கொடுக்கலாம்:

**வரம்புரையாக:** இந்தச் சட்டத்தின் தொடக்க தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலஅளவு கழிவுற்ற பின்பு அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும் அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

இணைப்புப்–பட்டியலைத் திருத்தம் செய்வதற்கான அதிகாரம்.

99. (1) உரிய அரசால் செய்யப்படும் பரிந்துரைகளின் பேரிலோ பிறவாறாகவோ, அவ்வாறு செய்வது தேவையானது அல்லது உகந்தது என மைய அரசு தெளிவுறக் காணுமாயின், அது அறிவிக்கை வாயிலாக இணைப்புப்பட்டியலைத் திருத்தம் செய்யலாம்; மற்றும் அத்தகைய அறிவிக்கை வெளியிடப்படுவதன் பேரில் இணைப்புப்பட்டியல் அதன்படியே திருத்தம் செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) Every such notification shall, as soon as possible after it is issued, shall be laid before each House of Parliament.

Power of Central Government to make rules.

**100.**(1) The Central Government may, subject to the condition of previous publication, by notification, make rules for carrying out the provisions of this Act.

(2) In particular, and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for all or any of the following matters, namely:—

(a) the manner of constituting the Committee for Research on Disability under sub-section (2) of section 6;

(b) the manner of notifying the equal opportunity policy under sub-section (1) of section 21;

(c) the form and manner of maintaining records by every establishment under sub-section (1) of section 22;

(d) the manner of maintenance of register of complaints by grievance redressal officer under sub-section (3) of section 23;

(e) the manner of furnishing information and return by establishment to the Special Employment Exchange under section 36;

(f) the composition of the Assessment Board under sub-section (2) and manner of assessment to be made by the Assessment Board under sub-section (3) of section 38;

(g) rules for person with disabilities laying down the standards of accessibility under section 40;

(h) the manner of application for issuance of certificate of disability under sub-section (1) and form of certificate of disability under sub-section (2) of section 58;

(2) அத்தகைய அறிவிக்கை ஒவ்வொன்றும், அது வெளியிடப்பட்ட பின்பு கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

100. (1) மைய அரசு, முன்னதான வெளியீட்டின் வரைக்கட்டுக்கு உட்பட்டு, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம். விதிகள் செய்வதற்கு மைய அரசிற்கான அதிகாரம்.

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகைசெய்யலாம், அவையாவன:–

(அ) 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி மாற்றுத்திறனுக்கான ஆராய்ச்சிக்கான குழுவை அமைக்கும் முறை;

(ஆ) 21 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி சமவாய்ப்புக் கொள்கையை அறிவிக்கை செய்யும் முறை;

(இ) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி ஒவ்வொரு நிறுவனத்தாலும் பதிவணங்களைப் பேணிவரும் வடிவமும் முறையும்;

(ஈ) 23 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி குறைதீர்க்கும் அலுவலரால் முறையீடுகளின் பதிவேடு பேணிவரப்படும் முறை;

(உ) 36 ஆம் பிரிவின்படி சிறப்பு வேலைவாய்ப்பகத்திற்கு நிறுவனத்தால் தகவலும் விவரஅறிக்கையும் அளிக்கப்படும் முறை;

(ஊ) 38 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி மதிப்பீட்டுக் குழுமத்தின் அமைப்பாக்கம் மற்றும் (3) ஆம் உட்பிரிவின்படி மதிப்பீட்டுக் குழுமத்தால் செய்யப்பட வேண்டிய மதிப்பீட்டு முறை;

(எ) 40 ஆம் பிரிவின்படி மாற்றுத்திறனாளிகளுக்கு அணுகும் வாய்ப்புத் தரநிலைகளை விதித்தமைக்கும் விதிகள்;

(ஏ) 58 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி மாற்றுத்திறன் உறுதிச்சான்று வழங்குவதற்கு விண்ணப்பம் செய்யும்முறை மற்றும் (2) ஆம் உட்பிரிவின்படி மாற்றுத்திறன் உறுதிச்சான்றின் படிவம்;

(i) the allowances to be paid to nominated Members of the Central Advisory Board under sub-section (6) of section 61;

(j) the rules of procedure for transaction of business in the meetings of the Central Advisory Board under section 64;

(k) the salaries and allowances and other conditions of services of Chief Commissioner and Commissioners under sub-section (4) of section 74;

(l) the salaries and allowances and conditions of services of officers and staff of the Chief Commissioner under sub-section (7) of section 74;

(m) the composition and manner of appointment of experts in the advisory committee under sub-section (8) of section 74;

(n) the form, manner and content of annual report to be prepared and submitted by the Chief Commissioner under sub-section (3) of section 78;

(o) the procedure, manner of utilisation and management of the Fund under sub-section (2) of section 86; and

(p) the form for preparation of accounts of Fund under sub-section (1) of section 87.

(3) Every rule made under this Act shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament while it is in session, for a total period of thirty days which may be comprised in one session or in two or more successive sessions, and if, before the expiry of the session immediately following the session or the successive sessions aforesaid, both Houses agree in making any modification in the rule

(ஐ) 61 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்படி மைய அறிவுரைக் குழுமத்தில் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய படித்தொகைகள்;

(ஒ) 64 ஆம் பிரிவின்படி மைய அறிவுரைக் குழுமக் கூட்டங்களில் அலுவல் நடத்துவதற்கான நெறிமுறை விதிகள்;

(ஓ) 74 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி தலைமை ஆணையர், ஆணையர்கள் ஆகியோருக்கான வரையூதியங்களும் படித்தொகைகளும் மற்றும் பிற பணிவரைக்கட்டுகள்;

(ஔ) 74 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின்படி தலைமை ஆணையரின் அலுவலர்கள், பணியாளர் தொகுதியினர் ஆகியோருக்கான வரையூதியங்களும் படித்தொகைகளும் மற்றும் பணி வரைக்கட்டுகள்;

(க) 74 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின்படி அறிவுரைக் குழுவில் வல்லுநர்களின் அமைப்பாக்கமும் அமர்த்தும் முறையும்;

(ங) 78 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி தலைமை ஆணையரால் தயாரிக்கப்பட்டுப் பணிந்தனுப்பப்பட வேண்டிய ஆண்டறிக்கையின் வடிவம், முறை மற்றும் உள்ளடக்கம்;

(ச) 86 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி நிதியத்தை பயன்படுத்தும் நெறிமுறை மற்றும் மேலாண்மை செய்யும் முறை;

(ஞ) 87 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி நிதியத்தின் கணக்குகளைத் தயாரிப்பதற்கான வடிவம்.

(3) இந்தச் சட்டத்தின்படிச் செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்டபின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது, ஒரு கூட்டத்தொடராகவோ இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ முப்பது நாட்களைக் கொண்ட மொத்தக் காலஅளவுக்கு அமர்வில் இருக்கையில் அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதுவும் செய்வதற்கு ஈரவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின்

or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule.

Power of State Government to make rules.

101. (1) The State Government may, subject to the condition of previous publication, by notification, make rules for carrying out the provisions of this Act, not later than six months from the date of commencement of this Act.

(2) In particular, and without prejudice to the generality of foregoing powers, such rules may provide for all or any of the following matters, namely:—

(a) the manner of constituting the Committee for Research on Disability under sub-section (2) of section 5;

(b) the manner of providing support of a limited guardian under sub-section (1) of section 14;

(c) the form and manner of making an application for certificate of registration under sub-section (1) of section 51;

(d) the facilities to be provided and standards to be met by institutions for grant of certificate of registration under sub-section (3) of section 51;

(e) the validity of certificate of registration, the form of, and conditions attached to, certificate of registration under sub-section (4) of section 51;

(f) the period of disposal of application for certificate of registration under sub-section (7) of section 51;

அல்லது அந்த விதி செய்யப்படுதல் ஆகாது என்பதை ஈரவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின் அதன்பின்பு, அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

விதிகளைச் செய்வதற்கு மாநில அரசிற்குள்ள அதிகாரம்.

101. (1) மாநில அரசு, விதிகளை முன்னதாக வெளியிட வேண்டும் என்ற வரைக்கட்டுக்கு உட்பட்டு, அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிற்படாமல், இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரங்களின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகைசெய்யலாம், அவையாவன:–

(அ) 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி மாற்றுத்திறன் குறித்த ஆராய்ச்சிக்கான குழுவை அமைக்கும் முறை ;

(ஆ) 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி ஒரு வரம்பிடப்பட்ட காப்பாளர் வழங்கும் ஆதரவுக்கு வகை செய்யும் முறை;

(இ) 51 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி பதிவு உறுதிச்சான்றுக்காக விண்ணப்பம் ஒன்றைச் செய்வதற்கான படிவம் மற்றும் முறை;

(ஈ) 51 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி பதிவு உறுதிச்சான்று வழங்கப்படுவதற்காக நிறுவனங்களால் வகைசெய்யப்பட வேண்டிய வசதிகள் மற்றும் நிறைவேற்றப்படவேண்டிய தரநிலைகள்;

(உ) 51 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்படி பதிவு உறுதிச்சான்றின் செல்லுந்தன்மை, அதன் வடிவம் மற்றும் அதனுடன் இணைந்த வரைக்கட்டுகள்;

(ஊ) 51 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின்படி பதிவு உறுதிச்சான்றுக்கான விண்ணப்பத்தை முடிவு செய்வதற்கான காலஅளவு;

(g) the period within which an appeal to be made under sub-section (1) of section 53;

(h) the time and manner of appealing against the order of certifying authority under sub-section (1) and manner of disposal of such appeal under sub-section (2) of section 59;

(i) the allowances to be paid to nominated Members of the State Advisory Board under sub-section (6) of section 67;

(j) the rules of procedure for transaction of business in the meetings of the State Advisory Board under section 70;

(k) the composition and functions of District Level Committee under section 72;

(l) salaries, allowances and other conditions of services of the State Commissioner under sub-section (3) of section 79;

(m) the salaries, allowances and conditions of services of officers and staff of the State Commissioner under sub-section (3) of section 79;

(n) the composition and manner of appointment of experts in the advisory committee under sub-section (7) of section 79;

(o) the form, manner and content of annual and special reports to be prepared and submitted by the State Commissioner under sub-section (3) of section 83;

(p) the fee or remuneration to be paid to the Special Public Prosecutor under sub-section (2) of section 85;

(q) the manner of constitution of State Fund for persons with disabilities under sub-section (1), and the manner of utilisation and management of State Fund under sub-section (2) of section 88;

(எ) 53 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி எந்தக் காலஅளவிற்குள் மேல்முறையீடு ஒன்று செய்யப்படவேண்டும் என்பது;

(ஏ) 59 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி உறுதிச்சான்றளிக்கும் அதிகாரஅமைப்பின் ஆணைக்கு எதிராக மேல்முறையீடு செய்வதற்கான காலமும் முறையும் மற்றும் (2) ஆம் உட்பிரிவின்படி அத்தகைய மேல்முறையீட்டை முடிவு செய்யும் முறை;

(ஐ) 67 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்படி மாநில அறிவுரைக் குழுமத்தில் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய படித்தொகைகள்;

(ஒ) 70 ஆம் பிரிவின்படி மாநில அறிவுரைக் குழுமக் கூட்டங்களில் அலுவல் நடத்துவதற்கான நெறிமுறை விதிகள்;

(ஓ) 72 ஆம் பிரிவின்படியான மாவட்ட அளவிலான குழுவின் அமைப்பாக்கமும் செயற்பணிகளும்;

(ஔ) 79 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி மாநில ஆணையருக்கான வரையூதியங்களும் படித்தொகைகளும் மற்றும் பிற பணி வரைக்கட்டுகள்;

(க) 79 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்படி மாநில ஆணையரின் அலுவலர்கள் மற்றும் பணியாளர் தொகுதியினரின் வரையூதியங்கள், படித்தொகைகள் மற்றும் பணி வரைக்கட்டுகள்;

(ங) 79 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின்படி அறிவுரைக் குழுவில் வல்லுநர்களின் அமைப்பாக்கமும் அமர்த்தும் முறையும்;

(ச) 83 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி மாநில ஆணையரால் தயாரிக்கப்பட்டு பணிந்தனுப்பப்பட வேண்டிய ஆண்டறிக்கை மற்றும் தனி அறிக்கைகளின் வடிவம், முறை மற்றும் உள்ளடக்கம்;

(ஞ) 85 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி சிறப்பு அரசுக் குற்றவியல் வழக்குரைஞருக்கு வழங்கப்படவேண்டிய கட்டணம் அல்லது பணியூதியம்;

(ட) 88 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில நிதியத்தை அமைக்கும் முறை மற்றும் (2) ஆம் உட்பிரிவின்படி மாநில நிதியத்தைப் பயன்படுத்தும் மற்றும் மேலாண்மை செய்யும் முறை;

(r) the form for preparation of accounts of the State Fund for persons with disabilities under sub-section (3) of section 88.

(3) Every rule made by the State Government under this Act shall be laid, as soon as may be after it is made, before each House of the State Legislature where it consists of two Houses, or where such State Legislature consists of one House, before that House.

Repeal and savings.

102. (1) The Persons with Disabilities (Equal Opportunity Protection of Rights and Full Participation) Act, 1995 is hereby repealed. 1/1996.

(2) Notwithstanding the repeal of the said Act, anything done or any action taken under the said Act, shall be deemed to have been done or taken under the corresponding provisions of this Act.

(ண) 88 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில நிதியத்தின் கணக்குகளைத் தயாரிப்பதற்கான வடிவம்;

(3) இந்தச் சட்டத்தின்படி மாநில அரசால் செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில், மாநிலச் சட்டமன்றம் ஈரவைகளைக் கொண்டிருக்கிறவிடத்து அந்த அவை ஒவ்வொன்றின் முன்பும் அல்லது அத்தகைய மாநிலச் சட்டமன்றம் ஓர் அவையைக் கொண்டிருக்கிறவிடத்து, அந்த அவை முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

1/1996. 102. (1) ஊனமுற்றோர் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழுபங்கேற்பு) சட்டம், 1995 ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது. நீக்கறவும் காப்புரைகளும்.

(2) மேற்சொன்ன சட்டம் நீக்கறவு செய்யப்பட்டிருப்பினும், மேற்சொன்ன சட்டத்தின்படிச் செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின் நேரிணையான வகையங்களின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

## THE SCHEDULE

**[See clause (zc) of section 2]**

**SPECIFIED DISABILITY**

1.Physical disability.—

A.Locomotor disability (a person's inability to execute distinctive activities associated with movement of self and objects resulting from affliction of musculoskeletal or nervous system or both), including —

(a) "leprosy cured person" means a person who has been cured of leprosy but is suffering from—

(i) loss of sensation in hands or feet as well as loss of sensation and paresis in the eye and eye-lid but with no manifest deformity;

(ii) manifest deformity and paresis but having sufficient mobility in their hands and feet to enable them to engage in normal economic activity;

(iii) extreme physical deformity as well as advanced age which prevents him/her from undertaking any gainful occupation, and the expression "leprosy cured" shall construed accordingly;

(b) "cerebral palsy" means a Group of non-progressive neurological condition affecting body movements and muscle coordination, caused by damage to one or more specific areas of the brain, usually occurring before, during or shortly after birth;

(c) "dwarfism" means a medical or genetic condition resulting in an adult height of 4 feet 10 inches (147 centimeters) or less;

**இணைப்புப்பட்டியல்**

[ 2 ஆம் பிரிவின் (வஇ) கூறினைக் காண்க]

**குறித்துரைக்கப்பட்ட மாற்றுத்திறன்**

1. உடலியக்க மாற்றுத்திறன்.–

(அ). நரம்புகள் ஒத்தியங்காமை (தசை எலும்பு மண்டலத்தில் அல்லது நரம்பு மண்டலத்தில் அல்லது அவை இரண்டிலும் வலி காரணமாக ஒருவர் தன்னையும் பொருள்களையும் அசைப்பது தொடர்பான குறிப்பிடத்தக்க செயல்களைச் செய்வதில் அவரின் இயலாமை) என்பது

(அ) "தொழுநோய் குணமடைந்தவர்" என்பது, தொழுநோயிலிருந்து குணமடைந்திருந்து, ஆனால்–

(i) வெளிப்படையான உருச்சிதைவு இல்லாதிருக்கிற ஆனால் கைகளிலோ பாதங்களிலோ உணர்விழந்தும், அத்துடன் கண்ணிலும் கண்ணிமையிலும் உணர்விழந்தும், தசைவாதத்தால் பாதிக்கப்பட்டு;

(ii) வெளிப்படையான உருச்சிதைவாலும், தசைவாதத்தாலும், ஆனால் இயல்பான பொருளீட்டும் செயல்பாடுகளில் ஈடுபடக்கூடிய அளவிற்கு அவர்களுடைய கைகளிலும் கால்களிலும் போதுமான அசைவு கொண்டு;

(iii) ஆதாயமுள்ள வாழ்தொழில் எதனையும் மேற்கொள்வதற்கு அவனுக்கு அவளுக்குத் தடையாக இருக்கக்கூடிய தீவிர உடல் உருச்சிதைவும் அத்துடன் முதிர் வயதினால் ,

துன்புறுகிற நபர் எவரும் எனப் பொருள்படும்; மற்றும் "தொழுநோய் குணமடைந்த நிலை" என்ற சொற்றொடர் அவ்வாறாகவே பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஆ) "மூளைச் சீர்குலைவு " என்பது, வழக்கமாகப் பிறப்பிற்கு முன்போ, பிறப்பின்போதோ அல்லது பிறப்பிற்குச் சற்று பின்போ, மூளையின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறிப்பிட்ட பகுதிகளில் நிகழ்ந்த பாதிப்பினால் உண்டான உடல் இயக்கங்களையும் தசை ஒத்திசைவுத் திறனையும் பாதிக்கும் வளர்ச்சியற்ற நரம்பியல் நிலைமையின் தொகுதி எனப் பொருள்படும்;

(இ) "குள்ளஉருவத்தன்மை" என்பது, 4 அடி 10 அங்குலம் (147 சென்டிமீட்டர்) அல்லது அதற்குக் குறைவான உயரத்துடன் முழுவளர்ச்சியை முடிவுறுத்துகிற ஒரு மருத்துவம்சார் அல்லது மரபியல் நிலை எனப் பொருள்படும்;

(d) “muscular dystrophy” means a group of hereditary genetic muscle disease that weakens the muscles that move the human body and persons with multiple dystrophy have incorrect and missing information in their genes, which prevents them from making the proteins they need for healthy muscles. It is characterised by progressive skeletal muscle weakness, defects in muscle proteins, and the death of muscle cells and tissue;

(e) “acid attack victims” means a person disfigured due to violent assaults by throwing of acid or similar corrosive substance.

B. Visual impairment—

(a) “blindness” means a condition where a person has any of the following conditions, after best correction—

(i) total absence of sight; or

(ii) visual acuity less than 3/60 or less than 10/200 (Snellen) in the better eye with best possible correction; or

(iii) limitation of the field of vision subtending an angle of less than 10 degree.

(b) “low-vision” means a condition where a person has any of the following conditons, namely:—

(i) visual acuity not exceeding 6/18 or less than 20/60 upto 3/60 or upto 10/200 (Snellen) in the better eye with best possible corrections; or

(ஈ) "தசைநசிவு" என்பது, பல்வகை தசைக்கோளாறுடைய நபர்கள் நலமான தசைகளுக்கு தேவைப்படுகிற புரதஉற்பத்தியினைத் தடுக்கிறதும் தவறான மற்றும் விடுபட்ட தகவல்களைத் தங்களின் மரபணுக்களில் கொண்டுள்ளதுமான மனித உடலை இயக்குவதான தசைகளை வலுகுறைக்கிற மரபுவழிப் பிறவித் தசைநோய்த் தொகுதி எனப் பொருள்படும்; மற்றும் அது, முற்றிக்கொண்டுசெல்கிற எலும்பு தசைத் தளர்வு, தசைப் புரதப் பொருள்கள் குறைபாடு, மற்றும் தசை உயிரணுக்கள், திசுக்களின் மாள்வுறுதல் ஆகிய பண்புகள் கொண்டதாகும்;

(உ) "அமில வீச்சால் பாதிக்கப்பட்டவர்கள்" என்பது, அமிலத்தையோ அல்லது அதுபோன்ற அரித்துச் சிதைக்கும் தன்மையுள்ள பொருளையோ வீசுதல் வழியான வன்தாக்குதல்களின் காரணமாக உருக்குலைந்த ஒரு நபர் எனப் பொருள்படும்,

ஆகியவற்றை உள்ளடக்கும்.

ஆ. பார்வைத்திறன் குறைபாடு–

(அ) "பார்வையின்மை" என்பது, மிகச் சிறந்த முறையில் சரிசெய்த பின்பும் ஒருவர், பின்வரும் நிலைகளில் ஏதேனும் ஒன்றைக் கொண்டிருக்கும் ஒரு நிலைமை என்று பொருள்படும் –

(i) முழுவதும் கண்பார்வை இல்லாமை; அல்லது

(ii) பெரிதும் இயலுமளவு சரிசெய்தவுடன் நல்ல நிலையிலுள்ள கண்ணில் 3/60 அல்லது 10/200 (ஸ்னெலன் அட்டவணையில்) குறைவான பார்வைக் கூர்மை; அல்லது

(iii) காட்சிப் படிப்பெல்லையை 10 பாகைக்கு குறைவான ஒரு கோணத்தில் எதிர்வீழ்வுறுவதாகக் கட்டுப்படுத்துதல் ;

(ஆ) "குறைந்த பார்வைத்திறன்" என்பது, ஒருவர், பின்வரும் நிலைகளில் ஏதேனும் ஒன்றைக் கொண்டிருக்கும் ஒரு நிலைமை என்று பொருள்படும்;

(i) பெரிதும் இயலுமளவு சரிசெய்த நல்ல நிலையிலுள்ள கண்ணில் (ஸ்னெலன் அட்டவணையில்) 6/18 க்கு மேற்படாத அல்லது 20/60க்குக் குறைவான 3/60 வரை அல்லது 10/200 (ஸ்னெலன் அட்டவணையில்)

(ii) limitation of the field of vision subtending an angle of less than 40 degree up to 10 degree.

C.Hearing impairment—

(a) “deaf” means persons having 70 DB hearing loss in speech frequencies in both ears;

(b) “hard of hearing” means person having 60 DB to 70 DB hearing loss in speech frequencies in both ears;

D.“speech and language disability” means a permanent disability arising out of conditions such as laryngectomy or aphasia affecting one or more components of speech and language due to organic or neurological causes.

2.Intellectual disability, a condition characterised by significant limitation both in intellectual functioning (rasoning, learning, problem solving) and in adaptive behaviour which covers a range of every day, social and practical skills, including—

(a) “specific learning disabilities” means a heterogeneous group of conditions wherein there is a deficit in processing language, spoken or written, that may manifest itself as a difficulty to comprehend, speak, read, write, spell, or to do mathematical calculations and includes such conditions as perceptual disabilities, dyslexia, dysgraphia, dyscalculia, dyspraxia and developmental aphasia;

(ii) 40 பாகைக்குக் குறைவான 10 டிகிரி வரையிலான ஒரு கோணத்தில் எதிர்வீழ்வுறுவதான கட்டுப்படுத்துதல்.

(இ). செவித்திறன் குறைபாடு–

(அ) "காது கேளாமை" என்பது, இரண்டு காதுகளிலும் பேச்சு அலையதிர்வுகளில் 70 டெசிபல் வரை கேட்புத் திறன் இழப்பு கொண்டிருக்கும் நபர்கள் என்று பொருள்படும்.

(ஆ) "மந்தமான செவித்திறன்" என்பது, இரண்டு காதுகளிலும் பேச்சு அலையதிர்வுகளில் 60 டெசிபல் முதல் 70 டெசிபல் வரை கேட்புத்திறன் இழப்பு கொண்டிருக்கும் ஒருவர் என்று பொருள்படும்.

(ஈ). "பேச்சு மற்றும் மொழித் தெளிவு மாற்றுத்திறன்" என்பது, உறுப்புகளின் பாதிப்பாலோ அமைந்த அல்லது நரம்பியல் காரணங்களாலோ பேச்சு மற்றும் மொழித் தெளிவின் ஆகியவற்றின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வகையிலமைந்த கூறுகளைப் பாதிக்கும், குரல்வளை அகற்று அறுவைச் சிகிச்சை அல்லது பேச்சிழப்பு என்பது போன்ற நிலைமைகளின் காரணமாக ஏற்படும் ஒரு நிலையான மாற்றுத்திறன் என்று பொருள்படும்.

2. அறிவுசார் மாற்றுத்திறன் என்பது, அறிவாற்றல் சார்ந்த செயல்பாடு (பகுத்தறிதல், கற்றல், சிக்கல் தீர்த்தல்) மற்றும் அன்றாட சமூக மற்றும் பட்டறிவுத் திறன்களின் வீச்சுகளை உள்ளடக்கும் சூழலுக்கேற்ற தகவமைத்துக்கொள்ளும் நடத்தை ஆகிய இரண்டிலும் குறிப்பிடத்தக்க குறைபாட்டினால் வேறுபடுத்திக்காட்டும் ஒரு நிலைமை.

(அ) "குறித்தவகை கற்றல் மாற்றுத்திறன்" என்பது, புலனுணர்வு மாற்றுத்திறன், வாசிப்புக்குறைபாடு, எழுதுவதில் குறைபாடு, கணக்கீட்டு குறைபாடு, ஒருங்கிணைப்புக் குறைபாடு, பேச்சுக் குறைபாடு போன்ற நிலைகளை உள்ளடக்கிய மற்றும் புரிந்துகொள்ள, பேச, வாசிக்க, எழுத, எழுத்துக் கூட்டுவதில், மற்றும் கணக்கியல் சார்ந்த கணக்கீடுகளைச் செய்வதில் இடர்பாடுகளை தானாகவே வெளிப்படுத்தலாகும் பேச்சு, எழுத்து, மொழியை கையாளுதலில் குறைபாடுகளைக் கொண்ட ஒரு முரண்பட்டநிலைகளின் தொகுதி எனப் பொருள்படும்;

(b) "autism spectrum disorder" means a neuro-developmental condition typically appearing in the first three years of life that significantly affects a person's ability to communicate, understand relationships and relate to others, and is frequently associated with unusal or stereotypical rituals or behaviours.

3. Mental behaviour,—

"mental illness" means a substantial disorder of thinking, mood, perception, orientation or memory that grossly impairs judgment, behaviour, capacity to recognise reality or ability to meet the ordinary demands of life, but does not include retardation which is a conditon of arrested or incomplete development of mind of a person, specially characterised by subnormality of intelligence.

4. Disability caused due to—

(a) chronic neurological conditions, such as—

(i) "multiple sclerosis" means an inflammatory, nervous system disease in which the myelin sheaths around the axons of nerve cells of the brain and spinal cord are damaged, leading to demyelination and affecting the ability of nerve cells in the brain and spinal cord to communicate with each other;

(ii) "parkinson's disease" means a progressive disease of the nervous system marked by tremor, muscular rigidity, and slow, imprecise movement, chiefly affecting middle-aged and elderly people associated with degeneration of the basal ganglia of the brain and a deficiency of the neurotransmitter dopamine.

(ஆ) " தற்புனைவுஆழ்வு பல்வகை சீர்குலைவு" என்பது, தொடர்பு கொள்வதில், உறவுகளைப் புரிந்துகொள்வதில் மற்றும் பிறருடன் தொடர்புகொள்வதில் ஒரு நபரின் திறனை குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கிற வாழ்வின் முதல் மூன்று ஆண்டுகளில் இயல்பாக தோன்றுகின்ற வழக்கத்திற்கு மாறாக அல்லது ஒரே மாதிரியான சடங்குமுறை மற்றும் நடத்தையுடன் இணைந்திருக்கிற ஒரு நரம்பியல் வளர்ச்சி நிலைமை என்று பொருள்படுவதையும்

உள்ளடக்கும்

3. மன நோய் நடத்தை,–

"மனநோய்" என்பது தீர்மானிக்கும் திறன், நடத்தை, மெய்மையைக் கண்டறிவதற்கான திறன் அல்லது வாழ்க்கையின் வழக்கமான தேவைகளை எய்துவதற்கான திறன் ஆகியவற்றை மொத்தமாகக் குறைவுறச் செய்கின்றதான சிந்தனை, மனநிலை, புலனுணர்வு, தொடர்பிணைவு அல்லது நினைவாற்றலின் ஒரு பெருமளவிலான சீர்குலைவு என்று பொருள்படும். ஆனால் இயல்புநிலைக்குக் கீழான அறிவுத் திறனை தனிப்பட்ட இயல்பாக உடைய ஒருவரின் தடைபட்ட அல்லது முழுமையடையாத மன வளர்ச்சியின் பண்பாக இருக்கும் குறைபாட்டை உள்ளடக்குவதில்லை.

4. (அ) (i) "மூளை தண்டுவட நலிவு நோய்" என்பது, மூளை மற்றும் தண்டுவட ஆகிய நரம்பணுக்களின் நரம்புவேரிழைகளைச் சுற்றியுள்ள நரம்புறைகள் பாதிக்கப்படுவதால் நரம்புறைகளின் அழிவு மற்றும் மூளை மற்றும் தண்டுவடத்திலுள்ள நரம்பு அணுக்கள் ஒன்றோடொன்றை தொடர்பு ஆற்றலைப் பாதிக்கும் அழற்சியுடைய நரம்பு மண்டல நோய் என்று பொருள்படும்;

(ii) "பார்க்கின்சன் நோய்" என்பது, நடுக்கம், தசை இறுக்கம், மற்றும் மெதுவான உணர்வூட்டு இயக்கம் தெரிகிற, மூளையின் அடி நரம்பு மையத்தின் சீர்கேடு இணைந்த நடுத்தர வயதினரையும் வயதானவர்களையுமே பெரும்பாலும் பாதிக்கிற, ஒரு நரம்பியல் அனுப்புகை இயக்கக் குறைபாடும் உடைய நரம்பு மண்டலத்தில் முற்றுகிற ஒரு நோய் என்று பொருள்படுவது போன்ற,

நாட்பட்ட நரம்பியல் நிலைகள்.

(b) Blood disorder—

(i) "haemophilia" means an inheritable disease, usually affecting only male but transmitted by women to their male children, characterised by loss or impairment of the normal clotting ability of blood so that a minor would may result in fatal bleeding;

(ii) "thalassemia" means a group of inherited disorders characterised by reduced or absent amounts of haemoglobin.

(iii) "sickle cell disease" means a hemolytic disorder characterised by chronic anemia, painful events, and various complications due to associated tissue and organ damage; "hemolytic" refers to the destruction of the cell membrane of red blood cells resulting in the release ofhemoglobin.

5. Multiple Disabilities (more than one of the above specified disabilities) including deaf blindness which means a condition in which a person may have combination of hearing and visual impairments causing severe communication, developmental, and educational problems.

6. Any other category as may be notified by the Central Government.

(ஆ) இரத்தச் சீர்குலைவு–

(i)"இரத்தக் கசிவு உறையா நோய்" என்பது, ஒரு சிறு காயமும் உயிர்போக்கும் இரத்தக் கசிவில் விளைவுறலாகும்படி இரத்தம் இயல்பான உறையும் ஆற்றலை இழக்கும்; அல்லது குறைவுறச் செய்யும் தன்மையில் வழக்கமாக, ஆண்களை மட்டுமே பாதிக்கிற ஆனால் பெண்களால் அவர்களுடைய ஆண்குழந்தைகளுக்குக் கடத்தப்படுகிற மரபுவழியில் பரவத்தக்க ஒரு நோய் என்று பொருள்படும்;

(ii) "இரத்த சோகை" என்பது, இரத்தத்திலுள்ள சிவப்பணுவின் அளவுகள் குறைவதாலோ அல்லது இல்லாது போவதாலோ ஏற்படலாகும் தன்மையிலான மரபுவழிக் குறைபாடுகளின் தொகுதி என்று பொருள்படும்.

(iii) "அரிவாள் அணு நோய்" என்பது, நாட்பட்ட இரத்தசோகை, வலிமிகு விளைவுகள், மற்றும் திசு மற்றும் உடலுறுப்பு சேர்ந்து பாதிக்கப்படுவதன் காரணமாக ஏற்படும் பல்வேறு கோளாறுகள் ஆகிய தன்மையிலான ஓர் இரத்த சிவப்பணுவு அழிவு சீர்குலைவு நோய் என்று பொருள்படும்; "இரத்த சிவப்பணு அழிவு சீர்குலைவு" என்பது, இரத்த சிவப்பணு வெளியாவதால் விளைவுறும் சிவப்பு இரத்த உயிரணுக்களின் உயிரணு சவ்வு அழிவதைச் சுட்டுகிறது

ஆகியவை காரணமாக உண்டாகும் மாற்றுத்திறன்.

5. பல்வகை மாற்றுத்திறன்கள் (மேலே குறித்துரைக்கப்பட்ட மாற்றுத்திறன்களில் ஒன்றுக்கு மேற்பட்டவை) தொடர்புகொள்ளல், வளர்ச்சி நிலை மற்றும் கற்றல் ஆகியவற்றில் கடுமையான பிரச்சனைகளை விளைவிக்கிற செவித்திறன் மற்றும் பார்வைத்திறன் ஆகிய குறைபாடுகளும் இணைந்திருக்கும் ஒருவர் கொண்டிருக்கலாகும் நிலைமை எனப்பொருள்படும் செவி பார்வைத் திறனின்மையையும் உள்ளடக்கியது ஆகும்.

6. மைய அரசால் அறிவிக்கை செய்யப்படலாகும் பிற வகை எதுவும்.

குறிப்புகள்:

குறிப்புகள்:

அரசு மைய அச்சகம் , சென்னை –600 001.